429

பார்லிமெண்ட்

பிரசங்கங்கள்

429
1.67

எச். டி. ராஜா.

V2,3'N52
N53
108556

பார்லிமெண்ட் பிரசங்கங்கள்

எச். டி. ராஜா M. P.

கிடைக்குமிடம்

12, கிழக்கு மாட வீதி,
மயிலாப்பூர், சென்னை-4.

SPEECHES AND STATEMENTS OF H. D. RAJA IN PARLIAMENT

0-8-0

பார்லிமெண்டில்
எச்.டி. ராஜா நிகழ்த்திய
பிரசங்கங்களின்
தமிழ் மொழிபெயர்ப்பு

Sankar Printers, 114 Broadway, Madras-1.

பதிப்புரை

சுதந்திர மடைந்த இந்தியாவில் ஜன நாயக முறையில் முன்னேற்றம் காண முயன்று வருகிறோம். ஜனநாயக ஆட்சி முறையின் கீழ்சட்ட சபைகள் மிக முக்கிய ஸ்தானம் வகிக்கின்றன. சட்டசபை, மக்களின் உள்ளத்துடிப்பை பிரதி பலிப்பதாக இருக்கவேண்டும். ஆளும் கட்சி செய்யும் தவறுகளை சுட்டிக்காட்டவும், குற்றங்களைக் கண்டிக்கவும், சமயத்தில் மாற்றி மறுமந்திரி சபை அமைக்கவும் எதிர்க் கட்சி ஒன்று அத்தியாவசியமாகும்.

ஜனநாயகப் புது வாழ்வு நம் நாட்டில் இப்பொழுதுதான் உதயமாகியுள்ளது. பலம் பொருந்திய எதிர்க்கட்சி ஒன்று இன்னமும் சரியான வழியிலே உருவாக்கப்படவில்லை. அதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த முயற்சியிலீடுபட்டுள்ள பலருள் ஸ்ரீ எச். டி. ராஜா ஒருவர். அவர் அரசியலுக்குப் புதியவரல்ல. சுதந்திரப் போராட்ட காலங்களில் சும்மா இருந்துவிட்டு சுதந்திரம் வந்தவுடன் அரசியலில் வந்து குதித்தவரல்ல.

சைமன் கமிஷன் பகிஷ்காரத்தை காலஞ் சென்ற யூசுப் மேஹாலியுடன் முன்னின்று நடத்தியவர் ராஜா.

பரிபூரண சுதந்திரத் தீர்மானத்தை காங்கிரஸின் லட்சியமெனத் தீர்மானிக்க நேதாஜியுடன் சேர்ந்து தீவிரமாகப்போராடினர். பம்பாய் நகரத்தில் தமிழ் நாட்டை சேர்ந்த ஸ்ரீ ராஜாவின் சண்டமாருத பிரசங்கங்களையும் வீரமிக்க சாகஸச் செயல்களையும் கண்டு பிரமித்துப் பாராட்டாதவர்களே கிடையாது!

1942ம் ஆண்டு புரட்சியின் போது கூட அரசியலிலிருந்து அவர் விலகியிருந்த போதிலும் சர்க்கார் அவரை கைது செய்து சிறையிலடைத்தது. இப்பொழுது ஸ்ரீ ராஜா தீவிரமாக அரசியலில் ஈடுபடவில்லையென்ருலும் அவரது தீவிர மனப்பான்மை கொஞ்சமும் குறையவில்லை என்பதை இப்பிரசங்கங்கள் நிரூபிக்கின்றன.

பார்லிமெண்டில் அவர் செய்துள்ள பிரசங்கங்கள் ஆழ்ந்த கருத்தோடு கூடியவைகளாக மாத்திரம் விளங்கவில்லை. அரசாங்கத்தை வன்மையாகக் கண்டிப்பதோடு உருப்படியான மாற்று யோசனைகள் சொல்வதாகவும் உள்ளன. பொறுப்புள்ள முறையில் எதிர்க்கட்சிக்காரர்கள் எப்படிப் பேசவேண்டுமென்பதற்கு உதாரணமாக அமைந்திருக்கின்றன.

பிரசுரகர்த்தர்கள்

அங்கத்தினர்களின் உரிமைகள்

அங்கத்தினர்களின் உரிமைகள் குறித்து ராஜாங்க சபையில் ஸ்ரீ ஹெச் டி. ராஜா பின் வருமாறு பேசினர் :

" சபையில் மற்ற வேலைகளைத் துவக்குவதற்கு முன் இரண்டு முக்கிய விஷயங்களைத் தங்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன். முதலாவது சபையின் உரிமையைப்பற்றிய விஷயமாகும். இச்சபையின் அங்கத்தினர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று போதிக்கின்ற முறையில் அங்கத்தினர்களுக்கு இச்சபையின் காரியதரிசி சிறிய வெளியீடு ஒன்றை விநியோகித்திருக்கின்ருர். இம் மாதிரியான கட்டளைகளை வன்மையாக நான் எதிர்க்கின்றேன்.

இச்சபை ஆரம்பமாகி நான்கு நாட்கள் ஆகின்றன. உரிமைகளையும், கடமைகளையும் சம்பிரதாய முறைகளையும் இச்சபை தானே வகுத்துக்கொள்ளும். அவைகளை அக்கறையோடு கண்ணுங் கருத்துமாக பாதுகாத்துக் கொள்ள இச்சபைக்குத் தெரியும்.

இச் சபையில் நாம் என்ன செய்யலாம்; என்ன செய்யக் கூடாது; பாராளு மன்றத்தில் நடந்து கொள்ள வேண்டிய வழிமுறை என்ன, என்பதைப் பற்றி யோசனை கூறுகின்ற காரியதரிசியின் இந்த அறிக்கை, இச்சபையின் கவுரவமிக்க அங்கத்தினர்களின் உரிமைகளைப் பாதிப்பதாக இருக்கின்றதென்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இந்த அறிக்கையை காரியதரிசி வாபஸ் வாங்கும்படி செய்யவேண்டுமென்றும் தங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தாங்கள் இப்பெரும் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டதைப் பாராட்டுவதற்கு வாய்ப்பளிக்கப் படவில்லை என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதுதான் இரண்டாவது விஷயமாகும்.

பீகாருக்குப் பறந்தோடினீர்களே சென்னைக்கு என்னசெய்தீர்கள்?

1952-ம் ஆண்டு மே மாதம் 19-ம் தேதி ஜனாதிபதிக்கு நன்றி பாராட்டுத் தீர்மானத்தின்மீது ஸ்ரீ எச். டி. ராஜா பேசியதாவது :

தலைவரவர்களே, இந்த நன்றி பாராட்டுத்தீர்மானத்தின் திருத்தங்கள் மீது பேசுவதற்கு முன் நான் ஒரு விஷயத்தைக்குறிப்பிட விரும்புகிறேன். கருணைகூர்ந்து இச்சபையில் ஜனாதிபதி பேசியதற்காக அவரைப் பாராட்டி நன்றிகூறுவதாக படாடோப எகாதிபத்திய வழியில் தீர்மானம் கொண்டுவந்ததற்கு பதிலாக உண்மையான ஜனநாயக உணர்ச்சியோடு "இச்சபை ஜனாதிபதியின் பிரசங்கத்தை அங்கீகரிக்கின்றது" என்று எளிமையோடு கூடிய தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்திருந்தால் எவ்வளவு நன்ருக இருந்திருக்கும். அதுதான் உண்மையிலேயே சிறந்த ஜனநாயக வழி.

ஜனாதிபதியின் ஸ்தானத்திற்கு எவ்விதமான அவமரியாதை நான் செய்வதாக நினைக்கக்கூடாது. அவர் நம்மைச் சேர்ந்தவர் : நம்மில் ஒருவர் அவர். அவருடைய வேலைக்காக அதாவது ஜனாதிபதியாக இருந்துவருவதற்காக இந்தியாவில் வரி கொடுப்போர்களின் பணத்திலிருந்து அவருக்கும் சம்பளம் கொடுக்கப்படுகிறது. நமக்கும் சம்பளம் கொடுக்கப்படுகிறது. நாம் எல்லோரும் சம்பளம் வாங்குகின்ருேம். யாருக்கு வேண்டுமாளுலும் ஓட்டளித்து ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை தேர்ந்தெடுக்கலாமென்ற மகத்தான உரிமையை வழங்கி யுள்ள நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் லக்ஷக் கணக்கான மக்களினுல் உண்மையான ஜனநாயக உணர்ச்சியோடு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள ஜனநாயக நாட்டில் நாம் எல்லோரும் வாழ்கின்ருேம். நம்முடைய ஜனநாயக அரசியல் அமைப்பின் அஸ்திவாரம் இதுதான்.

நாம் வாழ்கின்ற இருபதாவது நூற்றுண்டின் ஜன நாயக உணர்ச்சிக்கு ஏற்றதாக இத்தீர்மானம் இல்லை என்றே நான் குறிப்பிட விரும்புகின்றேன். இந்த தீர்மானம் எதைக்குறிக்கின்றது? ஜனாதிபதியின் பிரசங்கத்தைக் குறித்தா இத்தீர்மானம்? இச்சபையில் இந்த செஷனில் சர்க்கார் கடைப்பிடிக்கப்போகும் கொள்கையைப்பற்றி இப் பிரசங்கம் எந்த அளவிற்கு தெளிவாக்குகின்றதென்பதை கவனிப்போம். பம்பாயிலிருந்து வந்துள்ள எனது நண்பர் ஸ்ரீ பி. ஜி. கேர் "பிரிட்டிஷ் மன்னருடைய பிரசங்கத்தை யும் அதற்களிக்கப்பட்ட விளக்கத்தையும் படித்துக் காட் டினர். பெரிய தொருசுழிதான் அது! நாட்டிற்கு 'பெரிய சுழியை' அளித்ததோடல்லாமல், மதிப்புக்குரிய பாது காப்பு மந்திரி இத்தீர்மானத்தைப்பற்றி விவாதிக்கக்கூட உரிமை கிடையாதென்று தடைபோட முனைந்துவிட்டார். அவருடைய அபிப்பிராயத்திற்கு, சென்னை சட்ட நிபுணர் டாக்டர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரும் ஆதரவளித் துள்ளார். இருபதாவது நூற்றுண்டில் இச்சபையில் இம் மாதிரியான அபிப்பிராயங்கள் வெளியிடப்படுகின்றன! இது பிரபுக்கள் சபை அல்ல; ராஜ்ய சட்டசபை அங்கத் தினர்களால் சட்ட பூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகளின் சபை இது.

ஸர். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்: இப்படி குறிப் பிடுவது தலைவரை அவமதிப்பதாகும். ஸ்ரீ எச். டி. ராஜா: யாரையும் நான் அவமதிக்கவில்லை. அது எனது நோக்கமு மல்ல. பரிபூர்ண சுதந்திரத்தோடு இச்சபையில் பேசுவ தற்கு எனக்குஉரிமை இருக்கிறது. இன்று நடைபெறும் விஷயங்களைக் குறித்து எனது அபிப்பிராயத்தைத் தெரி விப்பதற்கும், இச்சபையில் எவ்விதம் சுதந்திர உரிமை கள் பயமுறுத்தப்பட்டு, எப்படி தடைசெய்யப்படுகின்ற தென்பதையும், பள்ளிக்கூடப் பிள்ளைகளைப்போல நடத்த சர்க்கார் கட்சித்தலைவர்களிருந்து காரிய தரிசிவரை எப்படி நம்மை நடத்த முயலுகின்றனர் என்பதையும் பகிரங்கமாக வும், தெளிவாகவும் சொல்லத்தான் போகின்றேன். இந் நாட்டில் வாயற்ற பூச்சிகளாய் வாழ்கின்ற லட்சோப லட்ச பாமரர்களின் அபிப்பிராயங்களை எடுத்துக்கூறவே நான் இங்கேவந்துள்ளேன். அதற்கு எனக்கு உரிமைவேண்டும்.

சுதந்திரம்வேண்டும். சட்டபூர்வமானமுறையில் குறைகளை இச்சபையில் எடுத்துக்கூறும் உரிமை நமக்கு உண்டு. எப்படிப் பேசவேண்டும்; எதைப்பேசவேண்டும். எப்படி பேசக் கூடாது எதைப்பேசக்கூடாது என்றெல்லாம் அவரும் நமக்குச் சொல்லித்தரத்தேவை இல்லை.

தலைவரவர்களே, இச்சபையின் சுதந்திரத்தையும், உரிமைகளையும் தாங்கள் பாதுகாத்தற்காக தங்களுக்கு மறுபடியும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். உலகின் நான்குத் திக்குகளையும் கற்பனைக்கண் கொண்டு கண்டு இங்கு நான் பேசவில்லை.

நிற்க ஜனாதிபதியின் பிரசங்கத்தை சற்று கவனிப்போம்.

பிரசங்கத்தின் சிறிய பகுதி ஒன்றில் பஞ்சத்தைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ராயலசீமாவில் நிலவுகிற பஞ்சத்தைப்பற்றி ஜனாதிபதி தனது பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார். துரதிருஷ்டவசமாக சென்னையில் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற துர்பாக்கியமான நிலைமை ராயல சீமாவில் மாத்திரம் நிலவவில்லை. சென்னை ராஜ்யம் பூராவிலுமே பஞ்சம் பரவியுள்ளது. நூற்றுக் கணக்கிலே மக்கள் மடிந்துகொண்டிருக்கின்றனர். ஜனங்கள் குடிக்கத் தண்ணீர் கூட இல்லாது வாடி தவித்துக் கொண்டிருக்கின்றனர். வட இந்தியாவில் கங்கை நதியில் பெருவெள்ளம் பெருக்கெடுத்தோடுவதைக் கண்டும் அதனால் மக்கள் சுபிக்ஷமுற்றிருப்பதைப் பார்த்தும் நான் களிப்படைந்தேன். கடந்த பல ஆண்டுகளாக சமூகநலனுக்காக ஒன்றுமே செய்யாத சர்க்கார், நமது நாட்டு மக்களுக்காக ஜலவசதியாவது செய்து கொடுக்குமா என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். நமது நாட்டில் ஜல வசதி செய்து கொடுத்து விட்டால் மறுபடியும் எப்பொழுதுமே பஞ்சம் தலைகாட்டாது. மனித சமுதாயத்தின் அடிப்படையான அவசியத்தேவை தண்ணீர். அது கூட இன்று பலருக்குக் கிடைப்பதில்லை. நாகரீக சர்க்கார் என்று சொல்லிக்கொள்ளுகின்ற எந்த சர்க்காரும் இந்த அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்ய முதலில் கவனம் செலுத்தவேண்டும். ஆனால் நாம் என்ன பார்க்கின்றோம்.

இந்திய சர்க்கார், சென்னை ராஜ்ய சர்க்காருக்கு 94 லக்ஷம் ரூபாய் உதவி அளிக்க முன் வந்துள்ளார்கள். இரண்டு கோடி ரூபாய் பெருமானத்தின் மீது இரண்டு கோடி ரூபாய் கடன் கொடுக்கின்றார்களாம்! பீஹாரில் பஞ்ச நிலைமை இருந்த சமயம் என்ன நடந்தது? சர்க்கார் வட்டாரத்தில் எல்லா இடங்களிலும் உள்ளங்கள் துடித்தன. பீஹாரில் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டவர்களை காப்பதற்காக கோடிக் கணக்கில் பணத்தை வாரி இறைத்தனர்.

தெற்கே நிலவும் நிலைமையை உணர்ந்து, இன்னல்களுக்குள்ளாகி அல்லலுறும் மக்களின் கண்ணீரைத் துடைக்க ஐந்துகோடி ரூபாய் எவ்வித தயக்கமுமில்லாமல் தாராளமாகக் கொடுத்துதவ சர்க்கார் முன்வரவேண்டுமென்று நான் கோருகிறேன். பிறகு கம்யூனிஸம் தனது அசிங்கமான தலையை அங்கே காட்ட முடியாதென்பதை நீங்களே அறிந்து கொள்விர்கள். இந்தியாவில் கம்யூனிஸம் வளருவதற்குக் காரணமென்ன? இதற்கு யார் பொறுப்பாளி? ஒரு புறத்தில் காங்கிரஸ் பாசிஸம். பொருளாதார வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் கட்டுப்படுத்துகின்ற முறையில் பலவிதமான கட்டுப்பாடுச் சட்டங்களை சிருஷ்டித்துள்ள காங்கிரஸ் பாசிஸத்தை ஒரு புறத்திலும் கட்டுப்பாடு சட்டங்களினால் உண்டாகியுள்ள கள்ளமார்க்கெட் பெரும் பூகத்தை மற்றொரு புறத்திலும் காண்கின்றோம். இன்றுள்ள நிர்வாக அமைப்பில் அதிகாரிகளின் கைகளைக் கிள்ளினாலன்றி எதையும் நாம் சாதிக்க முடியாது. கட்டுப்பாடுகள் அமுலிலுள்ள இந்த அமைப்பின் கீழ் நிர்வாக அமைப்பிலுள்ள ஏதாவது ஒரு அதிகாரியைத் திருப்திபடுத்தினாலன்றி எதுவும் நடைபெறாது. கட்டுப்பாடு லஞ்சத்தை வளர்க்கின்றது. லஞ்சம் கள்ளமார்க்கட்டை வளர்க்கின்றது. கள்ளமார்க்கெட் ஒரு புறத்தில் லாபம் தருகிறது. பலரை கஷ்டத்தில் ஆழ்த்துகின்றது. காங்கிரஸ் பாசிஸத்தால் ஒரு புறத்திலும், கம்யூனிஸ்ட் சர்வாதிகாரத்தால் மற்றொரு புறத்திலும் தாக்கப்பட்டு கஷ்டப்படுகின்ற இந்நாட்டு மக்களுக்கு விமோசனமில்லையா? ஜனநாயகம் இந்நாட்டில் வளர்ச்சி பெற வழியில்லையா? பண்பாடுள்ள ஆட்சியாளர்கள் கவனமாக இவ்விஷயத்தைக் குறித்து சிந்திக்கவேண்டும்.

அந்நிய நாட்டு விவகாரத்தை எடுத்துக்கொள்வோம். ட்யூனிஸியாவில் நிலவும் குழப்பமான நிலைமையைக்குறித்து பலர் முதலைக் கண்ணீர் விடுகின்றனர். ட்யூனிஸியாவின் நிலைமையைப்பற்றி நினைப்பதற்கு முன்னால், நமக்கு அருகே, நமது நாட்டில் இருக்கின்ற பிரஞ்சு ஏகாதிபத்தியத்தைப் பார்ப்போம். சென்னைக்கருகே பிரான்சு ஆதிக்கம் செலுத்தும் சிறிய பிரதேசம் ஒன்று இருக்கின்றது. நமது நாட்டின் பொருளாதாரத்தை இந்த சிறிய பிரதேசம் பாதிக்கின்றது. அங்கு அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் சரக்குகள் கள்ளத்தனமாக நமது நாட்டிற்கு கடத்தப்படுகின்றன.

உதாரணமாக பிராந்தி! சென்னை ராஜ்யத்தில் மதுவிலக்கு அமுலிலிருக்கின்றது. தங்களுக்கு எவ்வளவு பாட்டில் பிராந்தி வேண்டும். புதுச்சேரிக்கு வாருங்கள். இஷ்டப்படிக் குடித்து நீங்கள் இன்பமுறலாம். குத்தூசி, பிளேட், எதைவேண்டுமானாலும் எடுத்துக்கொண்டாலும் நமது ராஜ்யத்தில் 12 அணுவுக்கு விற்கப்படும் பொருள், புதுச்சேரியில் இறக்குமதி செய்யப்பட்டு, கள்ளத்தனமாக கடத்தப்பட்டு 6 அணுவுக்கு கிடைக்கின்றது. இந்த சிறு பிரதேசத்திலிருந்து சுங்க அதிகாரிகளை ஏமாற்றி கள்ளத்தனமாக பொருள்கள் ஏராளமாக கடத்தப்படுவதுதான் இதற்குக் காரணம். ட்யூனிஸியாவிற்கு ஏன் போகின்றீர்கள்? உலகத்தை ஏன் சுற்றுகிறீர்கள்? நமது வீட்டை முதலில் நாம் கவனிப்போம். நமது பிரச்னைகளுக்கு முதலில் நாம் தக்கபரிகாரம் காணுவோம். பிறகு ட்யூனிஸியாவைப்பற்றி பேசலாம். நாட்டிலுள்ள அபாயத்தை மறந்துவிட்டு, மற்றவரைக் காத்து ரக்ஷிக்க முயலுகின்ற இந்த அயல்நாட்டுக் கொள்கைதான என்ன?

ஸ்ரீ பி. ஜி. கேர்: மதிப்புக்குரிய அங்கத்தினர் ஒரே அங்கத்தினரைப் பார்த்துக்கொண்டு ஏன் பேசுகிறுர்? தலைவரை நோக்கி பேசுவதாகத்தானே அர்த்தம்!

ஸ்ரீ எச். டி. ராஜா: நான் சர்க்காரிடத்தில் பேசுகிறேன். ஸ்ரீ பி. ஜி. கேர் இடத்தில் அல்ல.

காஷ்மீர் நிலைமையைக் குறித்து மிகவும் சிக்கல்மிக்க குழப்பம் நிலவுவதாகத் தெரிகிறது. கோடிக்கணக்கான

ரூபாய்கள் நமது நாட்டில் இதற்காகச் செலவழிக்கப்பட்டுள்ளன. காஷ்மீரைப்பற்றி நினைக்கும்போது பெருங் கூச்சல் போடுகின்றனர். நமது தேசத்தின்மீது பாகிஸ்தான் ஆக்கிரமித்ததாக ஐக்கிய நாடுகளின் சபையில் நாம் குற்றம் சாட்டினோம். யார் ஆக்கிரமித்தவன் என்று ஐ. நா. இரண்டு நிமிஷங்களில் தீர்ப்பளித்துவிடலாம். அவர்கள் அம்மாதிரி எதுவும் செய்யவில்லை. அதைப் பற்றி அவர்கள் எதுவும் அக்கறை காட்டவில்லை. ஆனால் அவர்கள் எதில் அக்கறை காட்டினார்கள்? பாகிஸ்தான் ஆக்கிரமித்தது என்று குற்றம் சாட்டத் தயாராக இல்லை. அவர்கள் சுற்றி வளைத்து பேசுகின்றனர். யுத்தம் நிற்க வேண்டுமென்று சொன்னார்கள்; யுத்தம் நின்றது. பிறகு எல்லா நடவடிக்கைகளும் நின்றுவிட்டது. ஐந்தாண்டுகள் கடந்துவிட்டன. காஷ்மீர் பிரச்னை இன்னமும் தீர்ந்தபாடில்லை. காஷ்மீர் பிரச்னையை எடுத்துக்கொண்ட போது வரி கொடுப்போர்களின் பணம் கோடிக்கணக்கில் காஷ்மீரில் நிலவுகின்ற நெருக்கடியை சமாளிக்க செலவிடப்படுகின்றது என்று குற்றம் சாட்டப்பட்டது. ஒரு புறத்தில் சந்தேகத்திற்கிடமான பாட்டாளி; மற்றொரு புறத்தில் ஐ. நா. ஸ்தாபனம். அந்த ஸ்தாபனத்திலிருந்து கிரஹாம் இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் பதினைந்து தடவைகள் வந்துசென்று விட்டார். ஒன்றும் நடைபெறவில்லை. பொதுஜன வாக்கெடுப்பு எடுப்பதை நமது சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கின்றது. அப்படி நடந்தால் என்ன நடக்குமென்பதையும் நாம் அறிவோம்.

இந்தியப் பொக்கிஷத்தின் நிதி சரியாக செலவிடப்படுகின்றது என்று சொல்வது நல்லதல்லவா?

சர்க்காரின் ஒவ்வொரு அயல்நாட்டுக் கொள்கையும் நிரந்தரமில்லாமலும், நிச்சயமில்லாமலும், தெளிவில்லாமலும், உறுதியில்லாமலும் இருக்கின்றது. பிரத்யட்ச நிலைமைக்கேற்றவாறு அவை வகுக்கப்படவில்லை. நான் கோவாவைப்பற்றி குறிப்பிட விரும்புகின்றேன். அதைப் பற்றி ஸ்ரீ பி. ஜி. கேர் நன்கு அறிவார். அங்கு கோவாவினால் கொடுக்கப்படும் தொந்தரவுகளைப்பற்றி பேசுவதற்கு அவருக்கு அருகதை உண்டு.

புள்ளி விவர தகிடு தத்தம்!

பட்ஜெட் விவாதத்தின் போது 1952-ம் ஆண்டு, மே, 26-ம் தேதி ஸ்ரீ எச். டி. ராஜா பேசியதாவது :

சர்க்கார் காங்கிரஸ் கட்சியின் நிதி திட்டத்தை சமர்ப்பித்துள்ளது. கம்யூனிஸ்ட் கோஷ்டி, ஏனைய கோஷ்டிகளின் அபிப்பிராயங்களை நாம் அறிந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தது. நடுவில் கம்யூனிஸ்டுமில்லாத, காங்கிரசிலுமில்லாத ஆனால் காங்கிரஸை பல விஷயங்களில் முற்றிலும் ஆதரிக்கின்ற பேராசிரியர் ரங்காவின் பிரசங்கத்தையும் கேட்டோம். ஆனால், எந்த இலத்தையும் நம்பாத ஆதிபத்திய உரிமையோடு கூடிய ஜனநாயக குடியரசுவாதியாகிய பாமரன் என்ற முறையிலே, ஐந்தாண்டுக்கு ஒரு தடவை ஓட்டளிக்கும் உரிமையுள்ளவன் என்ற முறையிலே, சாதாரண மனிதனுக்கும் இந்த சர்க்காரின் மூலமாக ஏதோ நன்மை விளையுமென்ற நம்பிக்கை கொண்டுள்ள சாதாரண பாமரன் என்ற முறையிலே அவர்களின் உள்ளத் துடிப்புக்களை பிரதிபலிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு நான் பேச விரும்புகின்றேன்.

பட்ஜெட்டைப்பற்றி பரிசீலனை செய்வதற்கு முன்னால் மக்கள் சபையில் நிதி மந்திரி செய்த பிரசங்கத்தில் சில உயர்ந்த கருத்துகளை வெளி யிட்டிருக்கின்றதற்காக அவரை நான் முதலில் பாராட்ட விரும்புகின்றேன். அவர் செய்த பிரசங்கத்தின் விவரம் நமக்குத் தரப்பட்டுள்ளது. நான் பாராட்டுகிற பகுதி இதுதான் : வெளிநாட்டின் உதவியை கொண்டு சுபீக்ஷத்தின் அஸ்திவாரத்தை ஸ்தாபித்தால் தேசத்தின் ஆன்மாவிலுள்ள உயர்ந்தவொன்றை இழக்கவே நேரிடும். மிகவும் பொறுமையோடு நம்முடைய மக்களின் முயற்சியினாலேயே தான் நமது சுபிக்ஷ வாழ்விற்குத் திட்டமிட வேண்டும்.

தேசபக்தியுள்ள எந்த இந்தியனும் இந்த உயர்ந்த கருத்தை ஏற்றுக் கொள்ளத்தான் செய்வான். நான் ஸ்ரீ தேஷ்முக் அவர்களை பரிபூரணமாக ஹிருதய பூர்வமாக ஆதரிக்கின்றேன். அவர் நிதி மந்திரியாக இருக்கும் வரையில் இந்த உயர்ந்த கருத்துக்கு ஏற்றவாறே நடந்து கொள்ளுவார் என்று நம்புகிறேன்.

இந்த பட்ஜெட்டில் சமநிலை இல்லை. சில கணக்குகளை சுட்டிக் காட்டினால் எவ்வளவு மாறுபாடுகள் இருக்கின்றன என்பதை நீங்கள் புரிந்துகொள்ளுவீர்கள். பரிசிலனை செய்யப்பட்ட கணக்குகளிலிருந்து புள்ளி விவரங்கள் தரப்பட வில்லை. விவரங்கள் செப்பிடு வித்தை செய்யப்பட்டது போல் தோன்றுகின்றன. ரயில்வே பட்ஜெட்டை சமர்ப் பித்த ரயில்வே மந்திரி பொதுநிதிக்கு 34 கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாக சொன்னார். ஆனால் ரயில்வே பட் ஜெட்டிலிருந்து வந்த வருமானம் 7 கோடி 65 லக்ஷம் என்று நிதிமந்திரி குறிப்பிட்டிருக்கின்றார். இது ஆச்சரியமாக இருக்கிறது.

இரண்டாவதாக, இந்த 27 கோடி ரூபாய்கள் பட்ஜெட் டில் சேர்க்கப்பட்டால் நமக்கு 30 கோடி ரூபாய் உபரி நிற் கும். இந்த 30 கோடி ரூபாய்களைக்கொண்டு பல அற்புதங் களை சாதிக்கலாம். வரிச்சுமையால் அவதிப்படுகின்ற பாமர மனிதனுக்கு கொஞ்சமாவது விடுதலைவேண்டாமா? பாதுகாப்பிற்க்காக 203 கோடி ரூபாய்கள் செலவிடப்படு கிறது. 20 சதவிகிதம் நிர்வாக அமைப்பில் உள்ள அதி காரிகளுக்கு சம்பளமாக கொடுக்கப்படுகிறது. பிறகு மக்க ளுக்கு என்ன இருக்கிறது. க்ஷேமாபிவிருத்தி நாடு என்ற லக்ஷியத்தை அடையவேண்டுவதற்கு, மிகப்பெரிய பணக் காரர்கள்மீது வரி போடவேண்டும் என்று பேராசிரியர் ரங்கா அவர்கள் சொன்னதைகூட நான் அங்கீகரிக்க் தயா ராக இருக்கிறேன். மனிதசமுதாயத்தில் பலவேறுபட்ட வர்க்கங்கள் இருக்கின்றன—சின்ன பணக்காரன் நல்ல பணக்காரன், ரொம்பபெரிய பணக்காரன் இப்படி பல ரகங் கள் இருக்கின்றன, எந்த சர்க்காரும் அறிவோடு கூடிய முறையில் வரி விதிப்புக் கொள்கை வகுக்கவேண்டும்.

பணக்காரர்களுக்கு வரி விதிக்க வேண்டுமென்பதே சுலபம். பணக்காரன் என்பது யார்? ஒருவன் லக்ஷ ரூபாய் சம்பாதிக்கிறுன் என்று வைத்துக்கொள்வோம். அவன் நேர்மையாக வரிகளைக் கட்டினுல்—எந்தப் பணக்காரனும் நேர்மையாக வரி கட்டுகிறுன் என்று சொல்லமுடியாது. அவன் இடத்தில் ஒன்றும் மிச்சம் இருக்கமுடியாது. வருமானவரி விகிதப்படி அவன் உண்மையில் வரி கட்டினுல் சுமார் 60,000 ரூபாய் அவன் வரி செலுத்தவேண்டியிருக்கும். லக்ஷ ரூபாய் வருமானமுள்ளவன் வாழ்க்கை தரத்திற்கு ஒப்ப அவன் வாழ்வானுகில் குடும்பத்தை சம்ரக்ஷிக்கவும், குழந்தைகளுக்கு கல்வி வசதிசெய்து கொடுக்கவும், மற்ற காரியங்களுக்கும் சுமார் 30, 35,000 ரூபாய் செலவழிக்க வேண்டி இருக்கும். பிறகு அவனிடத்தில் என்ன இருக்கும்? அவன் இறந்த பிறகு அவனது குடும்பத்தின் பாதுகாப்பிற்கு, உத்தரவாதம் அளிக்காத ஒரு அமைப்பின்கீழ் அவனுக்கு என்ன இருக்கின்றது?

வருமானத்தின்மீது வரிபோட வேண்டுமென்ருல் நான் உங்களை ஆதரிக்கின்றேன். தெருவில் இருக்கின்ற பாமர மனிதனுக்கு நன்மை அளிக்கக்கூடிய மனித, சமூக, சேவா உணர்ச்சியோடு கூடியதும், அறிவோடுகூடிய சமநிலையுள்ளதுமான பட்ஜெட்டை தயாரிப்பீர்களானுல் உங்களை நான் ஆதரிப்பேன். பிரிட்டிஷ் சம்பிரதாயத்தின் பிற்போக்கு பரம்பரை குணத்தை இந்த பட்ஜெட்டில் காண்கிறோம். இந்த பட்ஜெட்டில் அதிகாரிகள்தான் ஸ்ரீ தேஷ்முக்குக்கு வழிகாட்டிகளாக விளங்குகின்றனர். அதிகார வர்க்கத்திற்கு தேஷ்முக் வழிகாட்டியாக இருக்கவில்லை. அவர் குறிப்பிட்ட உயர்ந்த கருத்துக்களை உண்மையிலேயே நடைமுறையில் அவரது செயல்களிலே பிரதிபலிக்க வேண்டுமென்று அவர் விரும்பினுல், சமுதாயத்திற்கு சேவைசெய்ய வேண்டுமென்று அவர் ஆசைப்பட்டால் நிதிமந்திரி அவர்களே இந்த பட்ஜெட்டைக் கிழித்து போட்டு விடுவார். காங்கிரஸ்காரர்களும் பட்ஜெட்டைக் கிழித்துப்போடுவதை ஆதரிப்பார்கள். நமது தேசம் 500, கோடி ரூபாய் வருமானத்தை உண்டாக்குகின்றது என்று

நான் நினைக்கின்றேன். நமது மக்களைப் பாதுகாப்பதற்காக ராணுவம் போஷிப்பதற்கு ஓரளவு செலவு செய்யவேண்டியது அவசியம்தான். நமது பிள்ளைகளுக்கு (ராணுவத்தினர்) நல்ல போஷாக்கு அளிக்கவேண்டியது அவசியமென்று பேராசிரியர் ரங்கா சொல்வதை நான் முழுவதும் ஆதரிக்கின்றேன். அப்படியென்றால் நடுவில் உள்ள தரகர்கள் ஆயுதங்களை, தூக்கிச் செல்லுகின்றவர்கள் விற்கின்றவர்கள், இவர்கள் பணத்தை மோசடி செய்வது என்று அர்த்தமல்ல. இதுதான் இன்று நடந்துகொண்டிருக்கின்றது. தற்காலிகப் பார்லிமெண்டில் மிக முக்கியமான பிரச்னையாக விவாதிக்கப்பட்ட ஜீப் ஊழல் என்னவாயிற்று? இதை வாங்கிய அதிகாரிகளின் ஊழல் நடவடிக்கைகளை கண்டுபிடிப்பதற்கு என்ன நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார் நிதிமந்திரி. பெரிய அறிவாளிகள் நமது நிதி விவகாரங்களை மாசற்ற முறையில் கையாளுவதற்கும் தவறாக பயன்படுத்தாது தடை செய்வதற்கும், என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்? பணம் கேட்கின்ற ஒவ்வொரு மனிதன்மீதும் நமது நிதிமந்திரி ஒரு கண் வைத்து, அவர்கள் எப்படி பணத்தைச் செலவழிக்கின்றார்கள் என்பதை கூர்ந்து கவனிப்பார்களானால் நமது நாட்டின் செலவின்மீது அவரது பிடிப்பு அதிகமாகிவிடும். அப்பொழுது பெரிய சுரண்டல் பேர்வழிகள் பணத்தை கபளீகரம் செய்யாது தடுத்து மக்களின் நலத்திற்காக செலவுசெய்ய அதிக பணம் பெறமுடியும்.

நிதிமந்திரியின் மற்றொரு அறிக்கையைக் குறித்து நான் பரிசிலனை செய்ய விரும்புகிறேன். அவர் பின்வருமாறு கூறியிருக்கின்றார்: "விற்கின்ற மார்க்கெட் நிலைமையிலிருந்து திடீரென்று வாங்குகின்ற மார்க்கெட் நிலைமையாக மாறிவிட்டது. ஆதலால் தேக்கமேற்பட்டு பல தொழில்கள் பாதிக்கப்பட்டன. நமது சர்க்காரின் நிதி கொள்கையையும், தொழிற் கொள்கையையும் பாருங்கள், இவைதான்.

நமக்கு மோட்டார்கார்கள் தேவையாக இருக்கின்றன. ஆனால் மோட்டார்கார்கள்யார்உபயோகத்திற்காக? 10,000

அல்லது 25,000 ரூபாய்போட்டு மோட்டார்கார் பணக்காரர்கள்தானே வாங்க முடியும். நமது தேசத்திற்கு ஏராளமான கார்களை சேர்த்துக்கொடுக்கும், இயந்திரங்களும், சாமான்களும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இந்த யந்திரங்கள் கார்களை உற்பத்தி செய்யாது. அது இறக்குமதி செய்யப்பட்ட காரின் பாகங்களை ஒன்றுசேர்க்கத்தான் உதவும். இங்கிலாந்தில் பயனற்று காலங்கடந்து பழமையாகப்போன யந்திரங்களை பிரிட்டிஷ் தொழிற்சாலை முதலாளிகள் இங்கே இறக்குமதி செய்து தொழிற்சாலைகள் ஸ்தாபித்துள்ளனர். இந்துஸ்தான் மோட்டார் கம்பெனியின் வரவு செலவு கணக்குகளைப்பார்த்தால் கடந்த ஏழு ஆண்டுகளில், பொதுமக்களிடமிருந்து பங்குகளின் மூலம், மூலதனமாக சேகரிக்கப்பட்ட ஒரு கோடி ரூபாயின் மதிப்பும் வெகுவாக குறைந்திருப்பதை நாம் காணமுடியும். அன்றுடம் மேனேஜிங் ஏஜெண்டுகள் கம்பெனியின் சொத்தை சாப்பிடுவதின் காரணமாக பங்குகளின் மதிப்புகுறைந்து விட்டது. 10 ரூபாய் பங்குக்கு, இன்றுமார்கெட்டில் 3 ரூபாய் மதிப்புதான். 10 ரூபாய் அளித்தபாமர மனிதனுடைய பணத்தில் இன்று 7 ரூபாய் எங்கு மறைந்துவிட்டது?

இன்று தொழிற்சாலையை மூடி விட்டார்கள். ஏன் மூடி விட்டார்கள். 500 மோட்டார்கார்களை தினம் உற்பத்தி செய்தால் இந்திய மக்களிடத்திலே எப்படி விற்கமுடியும்? இந்த மோட்டார்களை வெளிநாட்டில் விற்பனை செய்ய முடியாது. ஆகவே இந்தியாவில்தான் விற்றுகவேண்டும். இந்தியாவிலோ வாங்கும் சக்தி மிகக்குறைவாக இருக்கிறது. ஆகவே இந்தகார்கள் விற்கப்படவில்லை. அதனால் தொழிற்சாலை மூடப்பட்டுவிட்டது. இம்மாதிரியான மோட்டார் தொழிற்சாலை நமக்கு எதற்கு? யுத்ததளவாட யந்திர சாலை ஏற்படுத்தலாம். நம் தேசத்தைப் பாதுகாப்பதற்கான நமது ராணுவத்திற்கு, நல்ல சிறந்த ஆயுதங்கள் கொடுத்து பழக்குவதை என்னால் புரிந்துகொள்ளமுடியும். நமது ராணுவ சாதனங்கள் காலத்திற்குத் தக்கவாறு இருக்கவேண்டுமானால் பிரிட்டிஷ்காரரிடமிருந்து அவர்கள் விற்கும் குப்பைகளை வாங்காதீர்கள் என்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். யுத்த தளவாட உற்பத்திக்காக சர்க்

காரே தொழிற்சாலைகளை நிர்மாணித்து நம் தேசத்தின் பொருளாதாரத்தை பாதுகாக்கவேண்டும். நாம் யுத்ததளவாடங்களை உற்பத்தி செய்யவேண்டும். விஞ்ஞான ரீதியிலே, முன்னேற்றமடையவேண்டும். நமது பணத்தை பாதுகாத்துக் கொள்ளவேண்டும். நமது தேசத்திலேயே ஆயுதங்களை தயாரிப்பதற்கு பயிற்சிபெற்ற நமது பையன்களை நியமிக்கவேண்டும். இதனால் பணத்தை மிச்சப்படுத்தலாம். பாதுகாப்பிற்கு ஒதுக்கப்பட்டுள்ள செலவை குறையுங்கள் என்று நான் உங்களுக்கு ஆலோசனை சொல்லவில்லை. பல்வேறு அரசியல் காரணங்களினால் அனுபவ சாத்தியமற்றது என்பதை உணர்ந்த நான் அதைக்கூறப் போவதில்லை. ஒரு கெட்டிக்கார வியாபாரியைப்போல யோசனைகூறவே விரும்புகிறேன். உங்கள் ஸ்தாபனத்தை கட்டுங்கள். பணத்தை மிச்சப்படுத்துங்கள். எங்கெங்கெல்லாம் சிக்கனம் சாத்தியமோ அங்கெல்லாம் சிக்கனத்தைக் கடைப் பிடியுங்கள். இது தான் எனது யோசனை.

தலைவர் அவர்களே! விற்கும் மார்கெட்டிலிருந்து வாங்கும் மார்க்கெட்டிற்கு திடீரென்று மாறுதல் ஏற்பட்டதினால் வாங்குகின்றவர்கள் எதிர்க்க துவக்கினார்கள் என்று நிதி மந்திரி குறிப்பிட்டு இருப்பதைக் குறித்து நான் வருந்துகிறேன்.

பொது மக்கள் வாங்கவில்லையென்றால் அதற்கு நிதி மந்திரியின் கொள்கை அல்ல காரணம். விற்கின்ற விலையிலே பொருள்களை வாங்குகின்ற சக்தி பொது மக்களுக்கு இல்லை. அதுதான் காரணம். துணியானாலும், மற்ற எந்தப் பொருளானாலும் சரி, சாதாரண மத்தியதர வர்க்கத்தை சேர்ந்தவனுக்கு தனக்கு தேவையான துணி வாங்கவோ அவனது மனைவிக்கு அவசியமான புடவை வாங்கவோ, அவனது குழந்தைக்கு இரண்டு சட்டைகள் வாங்கவோ கையில் பணமில்லை. இன்றுள்ள பொருளாதார அமைப்பில் அவனுக்கு தேவையான பொருள்களை வாங்குவதற்கு தக்க வருமானம் அவனுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே தான் வாங்குவோர் வாங்க மறுக்கின்றனர். இன்றைய விலை இறக்கத்திற்கும் சோர்வுக்கும் அதுவே காரணம். சிறந்த நிலைமையை சமாளிப்பதற்கு மக்களுக்கு

உடனடியான தேவை பொருள் கிடைக்கும்படி செய்து வாங்குவோரின் எதிர்ப்பை சமாளிப்பது சர்க்காரின் புத்தி சாலித்தனமான கடமையாகும். நமது நாட்டின் பொருளாதாரம் சரியான வழியில் இம்மாதிரி வகுக்கப்படவேண்டும்.

மூன்றாவதாக நமக்கு ஸ்டர்லிங் நிதியிலிருந்து வர வேண்டிய தொகையில் 81 கோடி ரூபாய் நமது ஏற்றுமதி இறக்குமதி கணக்கில் உள்ள வித்தியாசத்தை சரி கட்டுவதில் கணக்கு எழுதியாகி விட்டது. இப்படிதான் நமது ஸ்டர்லிங் தொகையை கொஞ்சம் கொஞ்சமாக பிரிட்டிஷார் கரைத்துக் கொண்டிருக்கின்றனர். தலைவரவர்களே! நான் எனது நண்பனுக்கு ரூ. 10,000 கடன் கொடுக்க வேண்டியிருந்தால் அவர்களுக்கு தேவையான பொருள்களை விற்பனை செய்கின்ற ஏகபோக உரிமையும் எனக்கே இருந்தால் நான் எப்படி நடந்து கொள்ளுவேன். விலைகளை இஷ்ட பிரகாரம், ஏற்றி விற்கலாம். எனது நண்பன் என்னிடம் தானே வாங்க முடியும். 10,000 ரூபாய் ஓரிரண்டு ஆண்டுகளில் நான் கழித்துவிட மாட்டேனா! இது இயற்கை தானே! அதுதான் ஏறத்குறைய நிலைமை. ஆகவே, எந்தவிதமான குறிப்பிடத்தக்க நன்மையும் ஸ்டர்லிங் நிதியிலிருந்து கிடைக்கவில்லை. ஸ்டர்லிங் தொகை என்பது ஒரு பொய்ப் புராணம். (கட்டுக்கதை)

பிரிட்டிஷார்கள் இதைக்காட்டி, நம்மை ஏமாற்றி வருகிறார்கள். ஸ்டர்லிங் பிரதேசத்தில் இருப்பதினால் இந்த விளைவு. ஸ்டர்லிங் முன்னணி என்பது ஏகாதிபத்திய முன்னணியாகும். நாம், பிரிட்டிஷ் காமன் வெல்தின் அங்கத்தினர்கள். இந்த காமன் வெல்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் காலடியில் நசுக்குண்டவர்கள். உலகத்திலுள்ள எந்த சுதந்திரநாடும் இந்தக் காமன்வெல்த் கூட்டுறவில் இல்லை. நமது பட்ஜட், சுதந்திரமான பொருளாதார அடிப்படையில் வகுக்கப்பட்டிருந்தால் இம்மாதிரி இருக்காது.

தலைவரவர்களே! இந்த நடை முறை வருஷத்தில் முதல் நான்கு மாதங்களில் மாத்திரம் 81 கோடி ரூபாய் துண்டு விழுந்துள்ளது. டிஸம்பர் 51-ல் இருந்து 52-ஏப்ரலுக்குள் ஸ்டர்லிங் தொகையில் இந்தத் தொகை சரிக் கட்

டப்பட்டுள்ளது. அப்படி என்ருல் நான்கு மாதங்களில் மாத்திரம், 81 கோடி ரூபாய் துண்டு விழுந்துள்ளது. இந்த இறக்குமதி கொள்கை கடைபிடிக்க படுமானுல் நாட்டின்நிலைமை என்ன ஆகும். நான்கு மாதங்களில் 81 கோடி ரூபாய் பறிபோய் விட்டது. வியாபாரி என்ற முறையிலே நான் சொல்ல ஆசைப்படுகிறேன். பிரிட்டிஷார் நமது மூலதனத்தை விழுங்கி, ஏப்பமிடுகின்ருர்கள். உங்களின் கைகளில் கிடைத்துள்ள தேசத்தின் பணம் மூலதனத்திலிருந்தே செலவாகிக் கொண்டிருந்தால் எத்தனை நாட்களுக்கு வரும்? பலரிடமிருந்து பங்குகள் பெற்று ஒரு ஜாயிண்ட்—ஸ்டாக் கம்பெனி துவக்கி லக்ஷ ரூபாய் முதலீடு செய்துள்ளவர் ஐந்தாண்டில் எல்லாவற்றையும் சாப்பிட்டு ஏப்பம் விடுவது போல்தானிருக்கிறது. தேசத்தின் முன் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ள பட்ஜெட்டின் நிலைமை இதுதான். 81 கோடி ரூபாய்களை மூன்ருல் பெருக்கினுல் 243 கோடி ரூபாய் ஆகின்றது. வருஷத்திற்கு இறக்குமதி வர்த்தகத்தின் மூலம் 243 கோடி ரூபாய்கள் துண்டு விழுவதை நமது பொருளாதார நிலைமை சமாளிக்க முடியுமா என்று தாழ்மையோடு தங்களை நான் கேட்க ஆசைப்படுகிறேன். ஸ்டர்லிங் முன்னணியை எதிர்பார்த்து நமது நிதி நிலைமையை சரிகட்ட முயன்ருல், நமது சர்க்கார் என்ன பொருளாதார கொள்கையை பின் பற்றுகிறது?

கழுதைக்கு முன் முள்ளங்கியைக் காட்டி இழுத்துச் செல்வது போல இருக்கின்றது. முள்ளங்கி முன்னுல் காட்டப்படுமே தவிர கழுதையின் வாய்க்கு அது எட்டாது. 81 கோடி ரூபாய்களை சரிகட்டுகின்ற இந்த அற்புதமான பட்ஜெட்டும் அதைப்போல்தானிருக்கின்றது.

தேசத்தின் ஆஸ்தி விரயமாக்கப்பட வில்லை என்று நிதி மந்திரி கூறுகிருர். இந்த துண்டு விழுதல் திட்டமிட்டு துண்டு விழுதல் என்றுவேண்டுமானுலும் சொல்லலாம். இதற்கு முன்பு அவர் இம்மாதிரி அறிக்கையும் அவர் வெளியிட்டிருக்கின்ருர். நமக்குக் கிடைக்கின்ற பொருள்களுக்கு நாம் அதிக விலை கொடுக்கவேண்டியிருக்கும். நமது நாட்டில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு அதிக விலை தரவேண்டுமென்பதை அவர் ஏற்றுக்

கொண்டால் திட்டமிட்டு துண்டு விழுதல் என்று அர்த்தம் என்று அவர் கருதுகிறாரா? இங்கே இறக்குமதி செய்கின்றவர்களுக்கு அதிகமாக பணம் தரவேண்டுமென்று அவர் திட்டமிட்டு விட்டாரா? அவர்கள் குறிப்பிடுகின்ற அதிக விலையைக் கொடுத்து நாம் இறக்குமதி செய்து தான் தீரவேண்டுமென்று நிச்சயித்து விட்டாரா? மக்களின் மானத்தை பாதுகாருங்கள் என்று தங்களை நான் தாழ்மையோடு வேண்டிக்கொள்ளுகின்றேன். களங்கமில்லாத எளிமை மிக்க எண்ணமுள்ளவர் அவர். அவரைக் கண்டு நான் அனுதாபப்படுகின்றேன். குற்றம் சாட்ட விரும்பவில்லை. சந்தர்ப்பத்திற்கு அவர் பலியாகி இருக்கின்றார். மனித சமுதாயத்திற்கு நன்மையே செய்ய முடியாத நிர்வாக யந்திர அமைப்பை அவர் பெற்றிருக்கிறார்.

பொருள்கள் இங்கே இருக்கின்றன. நாம்தான் அவைகளின் சொந்தக்காரர்கள். என்ன வாங்கவேண்டுமென்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் நாம். மறைந்திருக்கும் அதிகாரவர்க்கத்தினர்கள் அல்ல. அவர்களுக்கு ஒன்றும் புரியாது. மக்களின் உள்ளத் துடிப்பைத் தெரிந்து கொள்ளும் சக்தி அவர்களுக்குக் கிடையாது. அவர்களுக்கு ஹிருதயமில்லை; உணர்ச்சி இல்லை; சில விஷயங்களில் அசட்டுத்தனமாகவும் அவர்கள் நடந்துகொள்ளுகின்றனர். அவர்கள் இம்மாதிரியான பட்ஜெட்டைத் தயாரிக்கும்படி நிதி மந்திரியை வற்புறுத்தக் கூடாது.

தலைவரவர்களே அதிகார வர்க்கத்தின் உண்மை சொரூபத்தை ஒரு தடவை பார்ப்பதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. செகரிடேரியடிலிருந்து சில ஐ. ஸி. எஸ் காரர்கள் வெளியேறிய பிறகு இன்று இப்பதவிக்கு உயர்த்தப்பட்டவர் இவர். இந்தியன்தான் அவர். என்னிடத்தில் அவர் என்ன சொன்னார் தெரியுமா? “பார்லிமெண்டிலிருப்பவர்கள் யாரும் உங்களுக்கு உதவி செய்ய முடியாது எந்த மந்திரியும் உதவ முடியாது. இங்கிருப்பதற்கெல்லாம் நானே மன்னன்; நான்தான் ஏதாவது செய்யமுடியும்” என்று அவர் கூறினார்.

அவருடைய பெயரைக்கூட குறிப்பிடவே விரும்புகின்றேன். ஆனால் இங்கே அதைக் குறிப்பிட வேண்டா

மென்று நினைக்கின்றேன் இம்மாதிரிப் பேசுகின்றவரின் உள்ள உணர்ச்சியை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட சர்க்காரிடமிருந்து நமக்கு ஏதாவது விமோசனத்தை எதிர்பார்க்க முடியுமா? இந்த அமைப்பை முற்றிலும் மாற்றி திருத்தி, புதிதாக்கி, வரி கொடுப்போரின் நன்மைக்காக சேவை செய்யும் வகையில் அமைக்கப்பட வேண்டும். இதைத்தான் நான் வற்புறுத்திக் கூற விரும்புகின்றேன். உருப்படியான யோசனை சொல்லுங்கள் என்று கேட்கின்றனர். இரண்டு சபைகளிலுமுள்ள பல்வேறு நலன்களை உடையவர்களை கலந்தாலோசித்தால், சமூக சேவைக்கேற்ற நல்லதொரு நிர்வாக அமைப்பை நிதி மந்திரி உருவாக்க முடியுமென்று நான் நம்புகிறேன்.

ரயில்வே தேசீய சொத்தா? வியாபார ஸ்தாபனமா?

1952-ம் ஆண்டு மே மாதம் 29ந் தேதி ரயில்வே பட்ஜெட்டைக் குறித்து செய்யப்பட்ட பிரசங்கம்.

ரயில்வே பட்ஜெட்டின் நிலைமை இதுதான்: பல சுயநல கோணங்களிலிருந்து இதைப் பார்க்கின்றார்களே தவிர தேசிய நலனை கண்ணோட்டமாகக் கொண்டு இதைக் காண வில்லை.

ரயில்வே பிரயாணி களிடமிருந்து வசூல்செய்யப்படும் பணத்தில் 57 கோடி உபரிநிற்குமென்று பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. ரயில்வே பட்ஜெட்டிலிருக்கும் உபரி நிதியிலிருந்து ரயில்வே போர்டார் எந்த அடிப் படையில் பொது ரெவின்யூவிற்கு இவ்வளவு பணம் ஒதுக்கி உள்ளனர் என்பது எனக்குப் புரியவில்லை. இவ் விஷயத்தை நிர்ணயிப்பது யார்? இதைக் குறித்து, இச் சபை, அறிந்து கொள்ள உரிமை இருக்கின்றது. இரண் டாவதாக மூன்ருவது வகுப்பு பிரயாணிகளிடமிருந்தும் வியாபாரப் பொருள்கள் போக்குவரத்திலிருந்தும் தான், இந்த 57 கோடி ரூபாய் உபரிநிதி நிற்கின்றது. மூன்ருவது வகுப்பு பிரயாணிகளின் நலனைக் குறித்து பலர் ஆதரித் துப் பேசினர்கள். சில வார்த்தைகள் நானும் பேசவிரும்பு கின்றேன். 60 பேர்கள் பிரயாணம் செய்யவேண்டிய மூன்ருவது வகுப்பு வண்டியில் 150 பேர்கள் பிரயாணம் செய்வதாக ஸ்ரீ ரங்கா அவர்கள் குறிப்பிட்டார்கள். கணக் குப்படி பார்த்தால், ஒருவர் தலைமீது மூன்று தலை முட்டிக் கொள்ளுகின்றது என்றுதானே அர்த்தம்! இப்படிப்பட்ட நிலைமையில் உபரி கிடைப்பதில் என்ன அர்த்தமிருக்கின் றது? பொது மக்களைச் சுரண்டி ரயில்வே போர்டார் இந்தப் பெரும் லாபம் அடைந்துள்ளனர். தேய்வு செல வினங்களைச் சரிகட்டும் நிதிக்காக 20 லிருந்து 30 கோடி ரூபாய் வரை ஒதுக்கியிருக்கின்றனர். இது வெறும்

கேலிக்கூத்து! இந்தப் பணம் எப்படி செலவிடப்படுகின்றது? ரயில்வே லைன்களை திருத்திப் புதுப்பிப்பதற்காகவும், சவுகரியங்கள் செய்து கொடுப்பதற்காகவும் பணம் எப்படி செலவிடப்படுகிறதென்பது பட்ஜெட்டில் தெளிவாக குறிபிடப்படவில்லை. ரயில்வேயில் நிகழும் எதிர்பாராத அபாயங்களைக் குறித்து நான் ஒரு யோசனை கூற விரும்புகின்றேன். இந்த அபாயங்கள் நிகழுவது 1947-ல் ஆரம்பமாக வில்லை. அதற்கு முன்பே ஆரம்பமாகி விட்டன. 1942க்கு முன்னுலிருந்தே தேசீய உணர்ச்சி கொந்தளித்திருந்து கொண்டிருந்த சமயத்தில் நமது தேச மக்களே " ரயில்வேயில் அபாயங்களை விளைவித்தார்கள். அந்த சமயங்களில் காங்கிரஸ்காரர்களே "நாசவேலை"யில் ஈடுபட்டிருந்தனர். இன்று கம்யூனிஸ்டுகள் அவர்களை பின்பற்றுகின்றனர்.

ஸ்ரீ. பி. சுந்தரைய்யா (சென்னை) இது பொய்

ஸ்ரீ எச். டி. ராஜா: இது பொய் அல்ல. இந்த அபாயங்கள் இயற்கையாக ஏற்பட்ட அபாயங்கள் அல்ல என்பதை சரித்திரத்தின் சம்பவங்கள் நிரூபிக்குமென்பதில் சந்தேகமில்லை. அரசியல் காரணங்களுக்காக செய்யப்படும் காரியங்கள் தான் இவை. முதலில் காங்கிரஸ்காரர்கள் துவக்கினுர்கள். இன்று கம்யூனிஸ்டுகள் அதைப் பின்பற்றுகின்றனர்.

எப்படி இருப்பினும் அபாயங்க்ள் அதிகமாக ஏற்பட்டன என்பதை நாம் மறந்து விட முடியாது. அபாயங்கள் நிகழ்கின்றன. பொதுமக்கள் தான் பாதிக்கப்படுகின்றனர். இந்த அபாயங்களினுல் பாதிக்கப்படும் துரதிருஷ்டசாலிகளுக்குத் தக்க உதவி அளிக்கும்படி ரயில்வே போர்டர்ரையும் ரயில்வே மந்திரி லால் பகதூர் சாஸ்திரியும் கேட்டுக்கொள்ளுகிறேன். உருப்படியான யோசனை ஒன்றும் கூற விரும்புகின்றேன். உங்களுக்குக் கிடைக்கின்ற உபரி தொகையிலிருந்து அபாய நிவாரண இன்ஷூரன்ஸ் நிதி ஒன்று உண்டாக்குங்கள். உபரி தொகையிலிருந்து ஒரு பகுதியை இதற்கென்று ஒதுக்குங்கள். அபாயத்தினுல் பாதிக்கப்படுகின்ற துரதிருஷ்ட சாலிகளுக்கு இந்த இன்ஷூரன்ஸிலிருந்து உதவி அளியுங்கள்.

ரயில்வேயை வியாபாரமாக நடத்த விரும்பினுல், மற்ற வியாபார ஸ்தாபனங்களுக்கு வரி விதிப்பதுபோல அதே அடிப்படையில் வரி விதித்து பொது நிதிக்கு பணம் பெறுவதற்கு உரிமை இருக்கின்றது. 57 கோடி ரூபாயில் 27 கோடி ரூபாய் வட்டிகொடுத்து விட்ட பிறகு 30 கோடி ரூபாய் இருக்கும். ஒரு வியாபார ஸ்தாபனத்தில் 30 கோடி ரூபாய் லாபம் வருமானல் அதில் 7 கோடி ரூபாய் பொது ரெவின்யூவிற்குக் கிடைக்குமானல் எவ்வளவு குறைவான பணம்தான் பொது நிதிக்கு கொடுக்கப்படுகின்றதென்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். 30 கோடி லாபத்தில் குறைந்த பட்சம் 15 கோடி ரூபாயாவது பொது நிதிக்கு வரவேண்டும். 15 கோடி ரூபாய் பொது நிதியில் சேர்க்கப்பட்டால், பொது நிதியிலுள்ள 3 கோடி உபரி தொகையுடன் சேர்ந்து மொத்த உபரித் தொகை 18 கோடியாகும். அபிவிருத்தி நிதிக்காக ரயில்வே பட்ஜெட்டில் 10 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளனர். ரெவின்யு ரிஸர்வ் நிதிக்கு 11 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளனர். மொத்தமாக 23 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின்றனர். ரயில்வேக்களை வியாபார ஸ்தாபனமாக கருதினுல் ரூபாய்க்கு 8 அணு வீதம் பொது நிதிக்கு 15 கோடி ரூபாய் கிடைக்கும். அப்படிக் கொடுத்தாலும், கொடுக்கப்படாவிட்டாலும் இந்த யோசனையை ரயில்வே மந்திரிக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

பொதுநிதிக்கு எவ்வளவு தொகை ஒதுக்கவேண்டுமென்று நிர்ணயிக்கின்றவர் யார் என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகின்றேன். இது ஒரு தேசீய மூலதனம். வலதுகையிலிருந்து இடதுகைக்கு செல்லுகிறது. அங்கிருந்து மற்ற செலவினங்களுக்குப் பயன்படுகிறது. ரயில்வேக்களை ஒன்று தேசிய சொத்தாக பாவிக்கவேண்டும்; அல்லது வியாபார ஸ்தாபனமாக கருதவேண்டும். தேசீய சொத்தாகக் கருதினுல் தனியான ரயில்வே பட்ஜெட் ஒன்று தேவை இல்லை. இதை தேசீய சொத்தாகப் பாவித்தால் இவையெல்லாம் பொதுப் பட்ஜெட்டுடன் ஒன்ருக இணைத்து ஒரே பட்ஜெட்டாக சமர்ப்பித்துவிடலாம். இதை ஒரு வியாபார ஸ்தாபனமாகக் கருதினுல் பிரதேசவாரியாக கணக்குகளை ஒவ்

வொரு ரயில்வேக்கும் தனித்தனியாகத் தயார்செய்து, பிறகு ஒன்ருக இணைத்து மொத்த லாபநஷ்ட கணக்குகளை வியாபார முறையில் கொடுக்கவேண்டும். அப்பொழுது எங்கே ஓட்டை இருக்கிறது? பணம் எப்படி, எங்கே போகிறது? எப்படி கணக்குகள் சரி கட்டப்படுகின்றன என்பதை எல்லாம் பொதுமக்கள் அறிந்துகொள்ளமுடியும். இந்த விஷயங்களைத்தான் கனம் மந்திரியிடத்தில் வற்புறுத்திக்கூற விரும்புகிறேன்.

சென்னை செகரிடேரியட்டுக்குப் போகும்வழி "ரயில்வே கதவுகளினுல் எப்படி அடைக்கப்பட்டு சென்னைவாசிகள் எவ்வளவு கஷ்டப்படுகின்ருர்கள் என்பதை ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி சென்னைவந்து நேரில் பார்த்தால் புரிந்துகொள்ள முடியும். அங்கே மேல் செல்லுகிற பாலமில்லாத காரணத்தால் ரயில்வே கதவுகளுக்கு இருபுறத்திலும் நூற்றுக்கணக்கான வண்டிகளும், ஜனங்களும் அடிக்கடி தடைப்பட்டு நிற்கவேண்டியிருக்கிறது. அதே மாதிரியாக மிகவும் ஜனநெருக்கடி அதிகமாகவுள்ள சிந்தாதிரிப்பேட்டை 'ரயில்வே கேட்'டிலும் உடனடியாக பாலம் தேவை.

நீங்கள் பழைய காலத்தில் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். மற்ற நாடுகளின் ரயில்வேக் கட்டணத்தைப்பற்றி பேசும்பொழுது அங்கே பிரயாணிகளுக்கு அளிக்கப்படும் சவுகரியங்களையும் நீங்கள் நினைக்கவேண்டும். நான் ஆஸ்திரேலியாவுக்கு சென்றிருந்தேன். அங்கு ரயில்வேக்களைப் பார்த்தேன். அங்கு பிரயாணம் செய்வதே விசேஷ மகிழ்ச்சி அளிக்கின்றது. அங்கு நான் இரண்டாவது வகுப்பில் பிரயாணம் செய்தேன். அங்கு மூன்ருவது வகுப்பு கிடையாது. இரண்டாவது வகுப்பே இங்குள்ள முதல் வகுப்பைப்போல பிரமாதமாக இருப்பதைக் கண்டேன். அதைப் பார்த்தால் நீங்கள் நிச்சயமாக ஆச்சரியப்படுவீர்கள். கட்டணம் விகிதம் பரவாயில்லை. அதே சவுகரியத்தையும் சலுகைகளையும் தாருங்கள் என்று கேட்கிறேன். அவ்வளவு செய்ய முடியாவிட்டாலும் ஏதாவது செய்து சற்று சவுகரியம் செய்து தாருங்கள்.

நான் இப்பொழுது கதை ஒன்று சொல்ல விரும்புகின்றேன். தென்னலியைச் சேர்ந்த தென்னலிராமன் என்ற ஒருவன் அரசனுக்குமுன் கழுதை ஒன்றைக் கொண்டுவந்து தேய்த்தான். "ஏன் கழுதையைத் தேய்த்துக்கொண்டிருக்கிருய்" என்று அரசன் தென்னலிராமனைக் கேட்டார். "இக்கழுதையை குதிரையாக்கப் போகிறேன்" என்று தென்னலிராமன் பதில் சொன்னன்.

"அது எப்படி முடியும்" என்ருன் அரசன்.

"பொறுத்துப் பாருங்கள்" என்ருன் ராமன்.

இன்று தென்னலி ராமன் உயிருடன் இருந்தால் இந்திய சர்க்காரிடமிருந்து இந்தவித்தையைக் கற்றுக்கொண்டிருப்பான். அவர்கள் கழுதைகளை குதிரைகளாக்கிக் கொண்டிருக்கின்றனர். இரண்டாவது வகுப்புபெட்டிகளில் காகிதத்தை ஒட்டி முதல் வகுப்புப் பெட்டிஎன்று மாற்றி விட்டார்கள். இதுதான் அவர்களின் சாதனை. இரண்டாவது வகுப்பு வண்டிகளில் இரண்டு (ii) இருக்கின்றன. இதில் (i) ஒன்றின் மீது காகிதத்தை ஒட்டி அதை முதல் வகுப்பாக மாற்றி விட்டார்கள். அதுதான் முதல் வகுப்பு! இதற்குத்தான் நீங்கள் 191-8-0 கொடுத்து சென்னையிலிருந்து டில்லிக்குவரவேண்டும். நீங்கள் பெட்டிக்குள் ஏறிப் பார்த்தால், இரண்டாவது வகுப்பு வண்டியில் என்பதைக் காணலாம். மக்களிடமிருந்து பணம்பெறவிரும்பினல் நேர்மையாக வாங்கிக்கொள்ளுங்கள். இம்மாதிரி மறைமுகமான வழிகளைக் கையாள வேண்டாம். ராணுவ அதிகாரிகளிடமிருந்து பல புகார்கள் எனக்குவந்துள்ளன. நமது தேசத்திற்காக போரிடும் இந்த ராணுவ வீரர்களுக்கு எனது அன்புகனிந்த ஆசி! நீங்கள் ஏன் இரண்டாவது வகுப்புப் பெட்டியை முதல் வகுப்பு என்று மாற்றி முதல் வகுப்புக் கட்டணத்தை வசூலிக்கின்றீர்கள்.

ஒரு அங்கத்தினர்: அவர்கள் ரயில்வே கட்டணம் செலுத்துவதில்லை.

ஸ்ரீ எச். டி. ராஜா: ராணுவத்தினருக்கு ஏதோ சில சலுகைகள் நீங்கள் காட்டுவதாக நான் நினைக்கிறேன்.

நான் சொல்ல விரும்புகின்ற யோசனை இதுதான். ரயில்வேக்களை வியாபார ஸ்தாபனமாக நடத்துங்கள் பொதுநிதியுடன் சரியாக லாபத்தைப் பகிர்ந்துகொள்ளுங்கள். மக்களுக்கு அதிக நன்மை கிடைக்கவேண்டும். மாடுகளும் மற்ற மிருகங்களும்கூட மற்றநாடுகளில் இதை விட நல்லபெட்டிகளில் எடுத்துச் செல்லப்படுகின்றன. காளை மாடுதான் தேர்தலில் காங்கிரஸ் சின்னம் கூட. அவை மிக நல்ல பிராணிகள். ஆனால் அவைகள் பார்லிமெண்ட் கட்டிடத்திற்குஅருகேகூட வரவிடப்படுவதில்லை! மாட்டுவண்டிக்குத் தடைஎன்று எங்கும் சுவரொட்டிகளைக் காண்கின்றோம். (சிரிப்பு) காளைமாடுகளை சின்னமாகக் கொண்ட நீங்கள் இப்படித்தான் காளைமாடுகளுக்கு நன்றி செலுத்துவதா? பணம் கொடுத்தவன், நாதஸ்வரம் வாசிக்கச் சொன்னால் வாசிக்கத்தான் வேண்டும். அவனுக்கு அந்த உரிமைஇருக்கிறது. காளைமாடுகளை நீங்கள் அலட்சியமாக நடத்துவதைப்போலன்றி மனிதனை சரியாக நடத்துங்கள்—அவனை நியாயமாக நடத்துங்கள். அவனுக்கு சவுகரியம் செய்துகொடுங்கள். அவன் வாழ வழி செய்து கொடுங்கள். அப்பொழுதுதான் அவன் சர்க்காருக்கு மதிப்புத் தருவான்.

மொழிவாரி ராஜ்யம் தேசப்பிரிவினை ஆகாது?

மொழிவாரி ராஜ்யங்களைப்பற்றி 1952-ம் ஆண்டு 21-ம் தேதி ஸ்ரீ எச். டி. ராஜா செய்த பிரசங்கம் :

தலைவரவர்களே,

எனக்கு முன்புபேசிய ஸ்ரீ என். ஆர். மல்கானி பிரசங்கத்தில் வேகம் அதிகமாக இருந்ததே தவிர, அர்த்தம் குறைவாகத்தானிருந்தது. எல்லா மக்களையும் பற்றிய மிக முக்கியமான விஷயத்தைப்பற்றி நாம் இங்கே விவாதித்துக் கொண்டிருக்கின்றோம். இப்பிரச்னை ஆவேசத்தினாலோ, அறியாமையினாலோ; குறுகிய நோக்கத்தினாலோ ஏற்பட்டதல்ல. இந்த அடிப்படையில் தான் இப்பிரச்னையை நான் அணுக விரும்புகின்றேன்.

இன்று நமது நாட்டில் என்ன இருக்கின்றது. ஆதிபத்திய ஜனநாயக குடியரசு நமது நாடு. இங்கு வாழ்கின்ற 36 கோடி பேர்களும் ஆதிபத்திய உரிமை உள்ளவர்கள். எனது வீட்டில் குழந்தைக்கு முதலில் நான் ஆங்கிலம் சொல்லித் தருவது கிடையாது. அது வீட்டில் பேசப்படும் பாஷையைத் தானாக கற்றுக் கொள்ளுகின்றது. அதேமாதிரி ஒரு பிரதேசத்தில் வாழும் மக்கள் ஒரே மாதிரியான பாஷையைப் பேசி, படித்து கற்று வருகின்றனர். அவர்களுக்குத் தெரிந்த பாஷையில் அரசாங்கம் நடைபெறுவதையே மக்கள் விரும்புகின்றனர். இதில் காரசாரமான விவாதம் நடப்பது அவனுக்குப் பொருத்தமாகவே தோன்றவில்லை. ஆத்திரத்திலும், ஆவேசத்திலும் ஆகாரத்தையும், ஆடையையும்மறந்தால் அது பயித்தியக்காரத்தனமாகும். அதே போல ஒரு பாஷை பேசும் மக்கள் தங்கள் மொழியிலே நடக்கும் சர்க்கார் வேண்டுமென்று கேட்பதை எதிர்ப்பதும் ஆவேசம் கொண்ட பயித்தியக்காரத் தனம்தான் !

தலைவரவர்களே, உலகத்தின் பலநாடுகளிலும் மக்கள் பேசுகின்ற பாஷைகளில்தான் அரசாங்கம் நடைபெறுகின்றன. நாட்டைப் பிரிப்பதாகவோ, கூறுபோடுவதாகவோ சொல்வது சுத்த அபத்தமாகும். இது நாட்டை பிரிப்பதாகாது. ஹிந்துஸ்தான், பாகிஸ்தான் போல பிரிப்பதல்ல இது. காஷ்மீர்ஸ்தான், ஹிந்துஸ்தான் என்பது போல இது.

இந்த தேச முழுமையிலும் ஒரே அரசியல் அமைப்பு சக்திதான் ஆதிக்கம் செலுத்துகிறது. அந்த அரசியல் அமைப்பு, எங்கிருந்தாலும் வாழ்வதற்கும், வேலை செய்வதற்கும் எல்லா பிரஜைகளுக்கும் உத்திரவாதமளித்துள்ளது. அந்த சக்திதான் இன்று ஒரே பாஷையை பெரும்பாலோர் பேசும் பிரதேசத்தை நிர்வாக சவுகரியத்திற்காகப் பிரிக்க வேண்டுமென்று தூண்டுவதற்கு பொறுப்பாக இருக்கின்றது. இதுதான் இப்பிரச்னையைப் பற்றிய உண்மை.

மொழிவாரி ராஜ்ய பிரிவினையை எதிர்த்து பேசுகிறவர்களின் வாதத்தை பரிசிலனை செய்து நான் தவிடு பொடியாக்க விரும்புகின்றேன். இது ஹிந்துஸ்தான், பாகிஸ்தான் போன்ற பிரிவினை அல்ல என்பதை முதலில் அவர்கள் உணரவேண்டும். தேசிய நலன் என்றால் என்ன என்பதை முதலில் தெளிவாக்க விரும்புகின்றேன். சர்க்கார் என்றால் என்ன? தனி நபர்களைக் கொண்டதுதான் தேசம். தனி நபர்கள் கோஷ்டியாக வாழ்கின்றனர். இந்த தனி நபர்களைக் கொண்ட கோஷ்டியின் நலனில் நீங்கள் அக்கறை காட்டாவிடில் தேசம் என்பது மறைந்துபோய் விடும். ஒரு பகுதி மற்ற பகுதிகளை சுரண்டி வாழும் அடிப்படையில் தேசம் நிலைத்திருக்க முடியாது. அது உண்மையான தேசநலன் ஆகாது. நமக்கு என்ன வேண்டும்? தேசத்தின் நிர்வாகப் பொறுப்பில் மக்கள் பங்கு கொள்ள வேண்டும். தேசத்தின் விதியை நிர்ணயிக்க அவர்களுக்கு ஓட்டுரிமை அளித்திருக்கிறீர்கள். அந்த லட்சோப லட்ச மக்களின் பிரதிநிதிகள் நாம். அவர்களுக்கு அரசியலைப்பற்றி ஒன்றும் தெரியாது. அவர்களுக்கு அடிப்படையான ஓட்டுரிமையை அளித்திருக்கிறீர்கள். பல

மொழிகளைப் பேசினாலும் 100 க்கு 90 பேர்களுக்கு மேல் நம் நாட்டில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள்.

நமது அடிப்படைப் பொறுப்பென்ன? பல ஆண்டுகளாகப் பேசி வருகின்ற அவர்கள் பேசுகின்ற பாஷையைக் கற்றுக் கொள்ளும்படி செய்வது நமது முதல் பொறுப்பல்லவா? எல்லா பாஷைகளையும் ஒரே அடியாக ஒழித்து கட்டிவிட வேண்டுமா? பேராசிரியர் மல்கானி எல்லா பாஷைகளையும் ஒழித்து விட்டு இங்கிலீஷையோ, ஹிந்தியையோ-ஒரு பாஷையை வைத்துக் கொண்டால் போதும் என்று சொல்வதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், அப்படி செய்யமுடியுமா? பற்பல பகுதியில் வசிக்கும் மக்கள் தங்கள் மொழி, பண்டை நாகரிகம், கலாசாரம் இவைகளைப் பாதுகாக்கவே விரும்புகின்றனர்.

நீங்கள் மாஸ்கோவில் தமிழனை சந்தித்தால் அவனுடன் கை குலுக்கி மகிழ்ச்சியோடு பேசுவீர்கள். ஏன் என்றால் அவன் தமிழ் பேசுகிறவன். பிரிட்டனில் தேசிய பாஷை என்று பேராசிரியர் லாஸ்கியின் புத்தகத்தைப் படித்துப் பாருங்கள். உலகெல்லாம் சுற்றி ஊரெல்லாம் ஒரே அடியாக ஏமாற்றி இங்கிலாந்திற்கு திரும்புகின்ற இங்கிலீஷ்காரன் அங்கு அவனது சாமான்களைத் தூக்குகின்ற இங்கிலீஷ்காரனைப் பார்த்தவுடன் தானும் அவனும் ஒன்று என்று நினைக்கின்றான். அவனது கையைகுலுக்கி க்ஷேமலாபங்களை விசாரிக்கின்றான். இங்கிலீஷ் எழுத்தாளர்கள் இந்த அனுபவத்தை மிக அழகாக சித்தரிக்கின்றனர்.

பாஷை என்றால் என்ன என்பதைத் தெளிவாகப் புரிந்துகொண்ட, புத்தி உள்ள எவனும் மொழியின் முக்கியத்துவத்தை குறைக்க முயலமாட்டான். ஆகவே இக்கேள்வியை அஸ்திவாரத்திலிருந்து பார்க்க வேண்டும். ஆகாயத்திலிருந்து பார்ப்பதில் பயனில்லை. நீங்கள் ஒன்றும் செய்ய விரும்பவில்லை என்றால் கமிட்டி ஒன்றை நியமித்து விட்டு, அதன் அபிப்பிராயத்திற்கு காத்திருங்கள். "நிபுணர்கள் கமிட்டி ஒன்று நியமித்துள்ளோம். பிரச்னையைப்பற்றி அவர்கள் விரிவாக பரிசீலனை செய்வார்கள்"

என்று சொல்லிக் கொண்டிருக்கலாம்! அவர்களின் பரிசீலனையில் அபிப்பிராய பேதங்கள் இருந்தால் நீங்கள் செய்யவேண்டியதை செய்யாது தள்ளிப் போட்டுவிட முடியும். நீங்கள் ஒரு காரியத்தை செய்ய வேண்டாமென்று நினைத்தால் கமிட்டிகளுக்கு மேல் கமிட்டிகளை நியமித்துக் கொண்டே இருக்கவேண்டும். தார்கமிட்டி, போரு கமிட்டி, கேர் கமிட்டி—இன்னும் இப்படி பல கமிட்டிகள். அவர்கள் தேசத்தைசுற்றி வருவார்கள். அவர்கள் அறிக்கை வெளியிடுவார்கள். அந்த தஸ்தாவேஜி அறிக்கையிலிருந்து பல மேற்கோள்களைக் காட்டி நாம் இங்கே பேச முடியும்.

இந்த முறையில் நாம் பாஷையை நடத்தக்கூடாது. ஆனல், இத்தேசத்தில் வாழும் ஒவ்வொரு பிரஜைக்கும் அவனது பரம்பரை கலாசாரத்தை, வாழ்க்கையை, மொழி அடிப்படையிலே அபிவிருத்தி செய்து கொள்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

இந்த சர்ச்சையிலிருக்கும் ஆவேசத்தை அகற்றிவிட்டு மக்களை ஒன்ருக இணைப்போம். ஒருகுறிப்பிட்ட மொழியை பெருவாரியான மக்கள் பேசுவதை வெகு சுலபமாக அறிந்துகொள்ள முடியும். அவர்களை நிர்வாக யூனிட்டுகளாகப் பிரித்து அவர்கள் விரும்புகின்ற அரசாங்கத்தை அமைத்துக் கொடுங்கள். இதுதான் அவர்களின் கோரிக்கை. மக்கள் சபையும், ராஜாங்க சபையும், ராஜ்ய சட்ட சபைகளும் அந்த மனித சமுதாயத்தின் பிரதி நிதிகளே! இங்கேநாம் ஒன்ருக உட்காருவதற்குப் பதிலாக மற்ருெரு இடத்தில் இன்னும் சிலர் உட்கார்ந்து அவர்கள் பிரதேச நிர்வாகத்தை நடத்துவதில் என்ன தவறு? அது நியாயந்தானே! அதனல் இந்தியாவின் ஐக்கியம், ஒற்றுமை, ஆதிபத்திய ஜனநாயக குடியரசுத் தன்மைக்கு எப்படி பங்கமேற்படும்? நிச்சயமாகக் குந்தகம் விளையாது.

அந்த மொழிவாரி பிராந்தியங்களில் மற்ற மொழிகளை பேசுகின்றவர்கள் மைனரிட்டிகளாகிவிடுவார்களே, அவர்கள் நிலைமை என்ன என்று கேட்கப்படுகின்றது. இதுவெறும் அசட்டுத்தனம். இன்று சென்னை நகரிலே சௌக்கார்பேட்டை என்று ஒரு இடமிருக்கிறது. சௌக்

கார்பேட்டை என்பதுஎன்ன?சென்னையிலே எங்கே இருந்து சௌக்கார்பேட்டை வந்தது? சென்னை ராஜ்யத்தின் நிலைமை என்ன ஆனாலும், மொழிவாரி ராஜ்ய பிரச்னை எப்படி ஆனாலும், இந்த ஜனங்கள் இங்கே இருந்து விரட்டப் படுவார்களா என்ன? அவர்கள் அங்குதான் வாழ்வார்கள்! உதாரணமாக டில்லியை எடுத்துக்கொள்ளுவோம். டில்லியிலே மதராஸிகள் இருக்கின்றனர். பஞ்சாபிகள் இருக்கின்றனர். வங்காளிகள் வாழ்கின்றனர். டில்லியில் ஒருபகுதி ஆந்திராவோடு, தமிழ் நாட்டினோடு இணைக்கப் படுமென்று இதற்கு அர்த்தமல்ல. அது ஒரு நிலைமை. இந்தியபிரஜை ஒருவன் தேசத்தின் எப்பகுதியில் வேண்டுமானாலும் அமைதியாக தனது காரியங்களை ஒழுங்காக மற்றவர்களுக்கு தொந்தரவு அளிக்காது செய்வதற்கு இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தில் நல்லமுறையில் இடமளிக்கப்பட்டுள்ளது. ஆகவே இன்று இப்பிரச்னை எழவில்லை.

நிர்வாக சவுகரியத்திற்காக மொழிவாரி ராஜ்யப் பிரிவினைசெய்ய சர்க்கார் தயாராக இருக்கின்றனரா, இல்லையா என்பதைத் தெளிவாக, திட்டவட்டமாக தெரிவிக்கும்படிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ரயில்வேக்களை நிர்வாக சவுகரியத்திற்காக பல பிரதேசங்களாகப் பிரித்துள்ளனர். பல சீர்திருத்தங்களை செய்வதற்காகபிரிக்கவோ, ஒன்றாக இணைக்கவோ நாம் முயலுகிறோம். மத்ய சர்க்கார் எல்லோருக்கும் பொதுவாக இருந்து கவனித்துக்கொண்டிருக்கும்பொழுது நிர்வாகத்திற்காக மொழிவாரி ராஜ்யங்களைப் பிரிப்பதினால் எப்படி நாட்டின் ஐக்கியம் குலைந்துவிடும்? எல்லைப் பிரிவினையே தவிர, தேசப் பிரிவினை ஆகாது இது. பிரிவினை என்று குறிப்பிடுவதே தவறு.

ஆந்திர ராஜ்யம், மற்ற மொழிவாரிராஜ்ய அடிப்படையில் நிர்வாக அமைப்பில் மாறுதல்கள் செய்யப்போகிறீர்களா, இல்லையா என்பதை சர்க்கார் தெளிவாக்கவேண்டுமென்று வற்புறுத்த விரும்புகின்றேன்.

ஆந்திரபிரச்னையில் பண்டித நேரு சா்தகமாக அபிப்பிராயத்தைத் தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட கொள்கை இல்லாவிட்டால் ஆந்திர ராஜ்யத்தைதான் ஆதரிப்பதாக சொல்லியிருக்கக்கூடாது. ஆதரிப்பதாக சொன்ன பிறகு பின்னடையக் கூடாது. மொழிவாரி ராஜ்ய பிரிவினையை குறித்து இறுதியான முடிவுசெய்து அதன்படி சர்க்கார் நடந்துகொள்ளவேண்டு மென்று மிகவும் வன்மையாக வற்புறுத்த விரும்புகின்றேன்.

கொள்ளைக்காரர்களுக்கு ஏன் ஏகபோகம்?

1952-ம் ஆண்டு நவ 22ம்தேதி ஸ்ரீ எச். டி. ராஜா தேயிலைத் தொழிலைப்பற்றி பேசியதாவது :

அசாமுக்கு அடுத்தபடியாக சென்னை ராஜ்யத்தில் தான் தேயிலை பெரிய தொழிலாக இருக்கின்றது. 50,000 ஏகர் விஸ்தீர்ணமுள்ள பிரதேசங்களில் தேயிலை பயிரிடப் படுகின்றது. சர்வதேச தேயிலை உடன் படிக்கையை திருத்தி அமைப்பதற்கு நமது வர்த்தக மந்திரி ஸ்ரீ. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் ஒப்புக்கொண்டிருப்பதைக் குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். பிரிட்டிஷாரின் ஏகபோக உரிமைப் போக்கு, நமது சக்தியை நசுக்குவதுடன், நமது தொழிலாளர்களின் நிலைமையையும் கேவலமாக செய்துவிட்டது. ஆனல் அவர்களுடைய லாபமென்ன? அந்த கம்பெனிகள் அளிக்கும் லாப பங்கிடு என்ன? கடந்த 10 ஆண்டுகளில் அவர்களின் லாப நஷ்ட கணக்குகளின் விவரங்களைச் சற்றுகூர்ந்து கவனியுங்கள். உங்களுக்கு அப்பொழுது தான் உண்மையைத் தெரிந்துகொள்ள முடியும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலுமுள்ள வாங்குவோர்களின் மீது பாரத்தைச் சுமத்திப்பெற்ற லாபமென்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். இந்த தேசத்தில் பிரிட்டிஷாரின் ஏக போக உரிமைதான் மிக முக்கியமான பிரச்னை. அதைக்குறித்துதான் நாம் அதிக அக்கரைகாட்டவேண்டும். அவர்கள், தேயிலை பயிரிடும் பிரதேசத்தை விஸ்தரிப்பதையோ, அல்லது குறைப்பதையோ தடுப்பதற்கு நம்மிடம் என்ன அதிகாரம் இருக்கின்றது? அவர்களை கட்டுப் படுத்த நமக்குள்ள அதிகாரம் என்ன?

போர்டில் நியமனம் செய்வது இரண்டாவது விஷயமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமனம் செய்யப் பட்ட அங்கத்தினர்கள் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்கு பதவியிலிருப்பார்கள் என்று திருத்தம் கொண்டுவந்திருப் பதுகூட தெளிவாக இல்லை. இதைவிட தெளிவற்ற திருத்

தம் ஒன்று இருக்கமுடியாது. இந்தியர்களின் நலனை எப்படி பாதுகாக்கப் போகின்றீர்கள்? கடந்த காலத்தின் உண்மையான நிலைமையைப்பற்றி அரசாங்கத்திற்கு இவ் விஷயத்தில் அதிகாரமளிப்பதற்கு முன்பு தெரிந்துகொள்வது அவசியமாகும். அப்பொழுதுதான் அவர்கள் என்ன செய்யவிரும்புகின்றனர் என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

தேயிலையைத்தான் எடுத்துக் கொள்வோம். தேயிலை வாங்கும் இந்தியர்களை வெகுகேவலமாக நடத்துகின்றனர். நான் குறிப்பிட்டது போல இந்தத் தொழில் ஏகபோகத் தொழிலாக—அதுவும் பிரிட்டிஷ் கொள்ளைக்காரர்களின் ஏகபோகத் தொழிலாகத்தான் இருக்கின்றது.

இந்த தேசத்தின் மார்க்கெட்டில் உயர்ந்த ரக சிறந்த தேயிலை — அதாவது நீலகிரித் தேயிலை விற்கப்படுவது கூட கிடையாது. இந்தியர்களுக்கு அது கிடைப்பதில்லை. உயர்ந்த ரகம் பிரிக்கப்பட்ட பிறகு மீதியுள்ள கூளம்தான் தேயிலை என்ற பெயரிலே இந்தியாவில் விற்கப்படுகின்றது. 9000 அடிகளுக்குமேல் வளருகின்ற உயர்ந்த முதல் ரகத் தேயிலை அந்நிய தேசங்களுக்குத்தான் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. நம்நாட்டில் உற்பத்தியாகும்பொருள் இப்படித்தான் உபயோகப்படுத்தப் படுகின்றது. "மறக்காதே, மனிதனே, மண்ணிலே இருந்து தோன்றிய நீ மண்ணிலேயே மறைந்து போவாய்" என்று மகாத்மா ஏசுகிறிஸ்து சொல்லிப் போன திருவாக்கை பிரிட்டிஷ் சுரண்டல் பேர்வழிகள் அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கின்றனர். இவ்விஷயத்தில் சற்று ஜாக்கிரதையாக கவனம் செலுத்தும்படியாக மந்திரியைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தேயிலைத் தொழில் நம்முடையது என்பதை பிரிட்டிஷ் கொள்ளை வியாபாரிகள் உணரும்படியாக இந்திய நலன்களுக்குப் பாதுகாப்பளிக்கும் முறையிலும், இந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருளின் முழு பலனையும் இந்தியாவே அடையவேண்டிய வகையிலும் திருத்தங்கள் செய்ய மந்திரி முன் வரவேண்டும்.

லஞ்சத்திற்கு காரணம் என்ன?

1952-ம் ஆண்டு ஜூலை 23-ம் தேதி லஞ்சத்தைப் பற்றி பேசியதாவது :

தலைவரவர்களே குற்ற சட்ட திருத்த மசோதாவில் மனோ தர்மபிரச்னையைப்பற்றி ஆலோசிப்பதுதான் மிகவும் முக்கியமானது. கனம் சட்ட மந்திரிகொண்டுவந்துள்ள மசோதாவில் இரண்டுமுக்கிய அம்சங்கள் இருக்கின்றன. லஞ்சம் கொடுப்பவன், லஞ்சம் வாங்குபவன் இருவரையும் தண்டிப்பது ஒன்று. குற்றம் செய்துவிட்டு, அதைஒப்புக்கொண்டு, குற்றம் செய்தமற்றவர்களுக்கு எதிராக சாட்சி சொல்லுகின்றவர்களுக்கு மன்னிப்பளிப்பது மற்றொன்று.

லஞ்சத்திற்கு அடிப்படையான காரணமென்ன என்பதை முதலில் கவனிப்போம். நமது சர்க்காரால் நியமிக்கப்பட்டுள்ள போலீஸ்காரர்களுக்கு 25 ரூபாய் தாராளமாக சம்பளம் கொடுக்கின்றனர்! அவர்களின் உதாரணத்தை எடுத்துக்கொள்ளுவோம். அவனுக்கு இந்த சம்பளம்......

ஸ்ரீ. பி. எஸ். சர்மா (உத்திரபிரதேசம்) ஒரு விஷயம்...... அதிக சம்பளம், அதிக லஞ்சம்.

ஸ்ரீ எச். டி. ராஜா : இம்மாதிரி கனம் அங்கத்தினர் நினைவுபடுத்தியதற்கு நன்றி. அதிக சம்பளம் வாங்குகின்றவர்கள் அதிகத்தொகை லஞ்சம் வாங்குகின்றனர். இம்மாதிரி நடுவில் எழுந்து குறுக்கிடுவதினால் சிந்தனை தடைப்பட்டு, பேசுவது சிரமமாகப் போய்விடுகிறது. லஞ்சத்தைப்பற்றிய எல்லா அம்சங்களையும் குறித்து பேச விரும்புகிறேன். பரந்த அளவிலே நமது நாட்டில் லஞ்சம் தாண்டவமாடுகின்றதென்பதையும், சமூகத்தில் பலபகுதிகளிலும் லஞ்சப் பழக்கம் இருக்கின்றதென்பதையும் நாம் ஒப்புக்கொள்ளுகின்றோம்.

லஞ்சம் கொடுக்கின்றவன்தான் குற்றவாளி என்று நினைக்கும்படி செய்யவேண்டுமென்ருல், லஞ்சம் வாங்குகின்றவனை மிகப் பெரியகுற்றவாளியாகக் கருதவேண்டும். ஆனல் இந்த மசோதாவில் அம்மாதிரி வித்தியாசம் காண்பிக்கும் அம்சம் எதுவுமேயில்லை. மன்னிப்பளிக்கின்ற விஷயத்தை இரண்டாவதாகத் தங்கள் கவனத்திற்குக்கொண்டு வர விரும்புகின்றேன். என்னைப்பற்றிய இவ்விஷயத்தில் ருசிகரமான சம்பவம்ஒன்றை சொல்ல விரும்புகிறேன். இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைக் கவிழ்ப்பதற்கு பெரியசதி செய்கின்ற புரட்சிக் காரனுகக் கருதி என்மீது சதிக்குற்றம் சாட்டினர்கள். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட பலரை போலீஸார் கைது செய்து, குற்றம் புரிந்த பலரில் ஒருவனுக்கு மன்னிப்பளித்தனர். அவனும் மற்றவர்களைப் போல குற்றம் செய்தவன்தான்! அவனுக்கு பல விஷயங்களைக் கற்றுதந்து நான் கனவில்கூட நினைக்காத பலகாரியங்களைச் செய்ததாகச் சொல்லும்படி செய்தார்கள். சதிகாரர்களில் ஒருவனுக்கு மன்னிப்பளித்து அவனை சாட்சியாக மாற்றி கைக்குட்டைகளில் விஷத்தைத்தடவி இந்தியாவிலுள்ள ஐரோப்பியர்களுக்கு கிருஸ்துமஸ் தினத்தன்று அனுப்பி அவர்களைக்கொன்று விடலாமென்று எச். டி. ராஜா சொன்னர் என்று கோர்ட்டில் சொல்லு" என்று அவனுக்குக் கற்று கொடுத்தனர்.

கற்பனையில் கூட எட்ட முடியாத இந்த சதியின் தன்மையைப் பாருங்கள். பிரிட்டிஷ்காரர்களை அப்படித் தொலைத்திருப்பது சாத்தியமென்ருல் நிச்சயமாக அதை நான் வரவேற்றிருப்பேன்! அந்த வழியில் நான் சிந்தித்ததேயில்லை. கோர்ட்டில் மாஜிஸ்திரேட் முன்பு அவர்கள் கிளிப் பிள்ளைக்குப்பாடம் சொல்லிக்கொடுப்பதுபோல கற்றுக் கொடுத்த அண்டப்பொய்யை அப்படியே சொல்லுவதற்குத்தான் மன்னிப்புக் கொடுத்தார்கள்.

லஞ்சத்திற்கு அடிப்படையான காரணங்கள் என்ன என்பதைக் கண்டு பிடிக்காவிட்டால், மக்கள் சமுதாயப் பிரச்னைகளைப்பற்றி நல்ல முறையில் பரிசீலனை செய்து ஏன் குற்றவாளிகளாக மாறுகின்றனர் என்பதற்கு கார

ணம் கண்டு பிடிக்கவில்லை என்றால் இந்த தீயப் பழக்கத்தைப் போக்க முடியாது. இந்த குற்றத்திற்கு அடிப்படையான காரணங்களைக் கண்டுபிடித்து அகற்ற விட்டால் மக்களின் மனப்பான்மையில் மாறுதல் விளைவிக்க முடியாது. உலக ஆரம்ப காலத்திலிருந்தே லஞ்சப் பழக்கம் அமுலிலிருக்கின்றது. மனித சமுதாய வளர்ச்சியுடன் லஞ்சமும் வளர்ந்து வருகிறது.

பணம் கொடுப்பதைத்தான் லஞ்சம் என்று இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. பணம் கொடுத்து மாத்திரம் சர்க்கார் காரியாலயங்களில் ஒருவன் தனது காரியங்களைச் சாதித்துக் கொள்ளுகின்றான் என்று சொல்லுகின்றீர்களா? பெரிய அதிகாரிகளை பலவந்தமாக வற்புறுத்தி வேண்டியதை சாதித்துக் கொள்வதற்கு பல முறைகள் கையாளப்படுகின்றன என்பதை நான் அறிவேன். இவை லஞ்சமல்லவா? ஒருவனுக்குக் கிடைக்க முடியாத ஒன்றை மற்றவர் வற்புறுத்தலினால் அதிகாரி கொடுக்கும்படி நேர்ந்தால் அது மாத்திரம் லஞ்சமில்லையா?

இது எதைக்குறிக்கின்றது? இது லஞ்சமல்லவா? ஆகவே இப்பிரச்னைக்கு அடிப்படையில் பரிகாரம் காண வேண்டும். எதற்காக லஞ்சம் கொடுக்கப்படுகிறது? ஏன் கொடுக்கின்றனர்? ஏன் வாங்குகின்றனர்? சர்க்காரில் 25 ரூபாய் சம்பளத்தில் ஒருவன் வேலை செய்கின்றான். ஏழுகுழந்தைகளுடனும் மனைவியுடனும் இருபத்தைந்து ரூபாயில் ஒருவன் எப்படி வாழ்க்கைநடத்த முடியுமென்று கேட்க விரும்புகின்றேன்? (வெட்கம், வெட்கம்)

நாட்டின் பொருளாதார வாழ்க்கையைக் கட்டுப்படுத்தி, இந்திய சர்க்காரின் மானேஜிங் ஏஜெண்டுகள் போல் நடந்துகொண்டு கோடீஸ்வரர்களாக சிலர் மாறுவதையும் பார்க்கின்றோம். இதுதான் லஞ்சத்தின் அடிப்படையான காரணம். ஜனநாயக மென்றால் என்ன என்பதை சர்க்கார் உத்யோகஸ்தர்கள் உணரும்படி செய்வது ரொம்ப நல்லது.

இன்றுள்ள பொருளாதார அமைப்பில் சர்க்கார் காரியாலயத்தில் ஊழியம் செய்யும் மத்தியதர வர்க்கத்தைச்

சேர்ந்தவர்கள் நாசமடைந்து கொண்டிருக்கின்றனர். அந்த மேஜையிலிருந்து இந்த மேஜைக்கு பைல்களை மாற்றுவதற்கு, அவனுக்கு ஒருவன் பகலில் காப்பி வாங்கிக் கொடுத்தால் அது லஞ்சமா? இல்லையா? வீட்டிலே பகலில் அவனுக்கு காப்பி கிடைக்காது. இந்த சிறிய காரியத்தை மற்றவருக்காக செய்கின்ருன். ஆகவே குற்றத்தின் அடிப்படையான காரணத்தைக் கண்டுபிடித்து அதற்குப் பரிகாரம் காணவேண்டும். அப்பொழுதுதான் மனப்பான்மையில் மாறுதல் ஏற்படும். இதில் விவேகம் எதுவுமில்லை. உலகத்திலுள்ள மற்ற நாடுகளில் வியாதிகளைத் தீர்ப்பதற்கு என்ன முறைகளை கையாளுகின்றனரோ அவைகளைத்தான் இங்கேயும்கடைப்பிடிக்கின்றனர். அந்த வியாதி என்ன ? வியாதிக்கு அடிப்படைக் காரணமென்ன? அதை எல்லா இடங்களிலும் பரவாமல் தடுப்பதற்கு என்னவழி? இவைகளை உணர்ந்து, தக்க நடவடிக்கை எடுப்பதன்மூலமே சிறந்ததோர் சமுதாயத்தை சிருஷ்டிக்க முடியும். அப்பொழுது இம்மாதிரியான குற்ற சம்பந்தமான சட்டங்களுக்கு அவசிய மிராது. அப்படிச் செய்வோமானல் போலீசுக்கே அவசியமிராது. இன்று போலீஸர்கூட லஞ்சம் வாங்குகின்றனர். பிரத்தியேக போலீஸாரும் லஞ்சம் வாங்கத்தான் செய்கின்றனர்.

தெக் சந்த் கமிட்டியின் சிபார்சுகளின் அடிப்படையில் தான் இந்தமசோதா கொண்டுவரப்பட்டுள்ளது. அதிகாரிகளிடமிருந்து கிடைக்கும் தகவல்களிலிருந்து புலன் விசாரிக்கவேண்டு மென்று அந்த கமிட்டியின் அறிக்கையில் 16 பாராவில் சொல்லப்பட்டிருக்கிறது.

இலாகாவின் தலைமை அதிகாரிகளிடமிருந்தோ, அவருக்கு அடுத்த அதிகாரியிடமிருந்தோ, அல்லது வேறு பொது ஜனத்தை சேர்ந்தவரிடமிருந்தோ தகவல் கிடைக்கலாம். அதைக்கொண்டு விசாரணை செய்யவேண்டுமென்று கூறுகிறது அறிக்கை. அதனுல் நேர்மையானவர்கள்கூட அயோக்யத்தனமானவர்களின் சூழ்ச்சிக்காரராகி அவஸ்தைப் படுவதற்கு சந்தர்ப்ப மளிக்கப்படுகிறது. கையெழுத்தில்லாத கடிதத்தை வைத்துக் கொண்டோ, ஒருசிறு அதிகாரியின் பேச்சைக்கேட்டோ, புலன்விசாரிப்

பவர்கள் தொந்தரவு செய்ய ஆரம்பித்தால் சர்க்கார் சிப்பந்திகளின் நம்பிக்கை என்ன ஆகும்? ஒவ்வொரு அதிகாரியும் தன் கீழ் வேலை செய்கின்றவர்கள் தன்னைப்பற்றி என்ன பேசுகிறார்கள், ஏதாவது 'மொட்டை கடிதம்' எழுதுகிறார்களா என்று ஜாக்கிரதையாகக் கவனிக்கவேண்டும்.

இம்மாதிரியான வழிமுறையை நாம் கையாளுகிறோமென்று வைத்துக்கொண்டால், அதிகாரிமீது புகார் வந்தவுடன், கேஸ் பதிவுசெய்துகொண்டு புலன்விசாரிக்க ஆரம்பிப்பார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு தகவல் கிடைத்தவுடன் அவர் போலீஸ்காரர்களை யார் கொடுத்தது, வாங்கினது யார் என்று புலன் விசாரிக்க ஏவுவார்.

இப்பொழுது குற்றம்புரிவதிலே கூட்டாளியாக இருந்தவனுக்கு மன்னிப்புக் கொடுத்து சாட்சியாக எடுத்துக் கொள்வதற்கு மசோதாவில் புதிய அம்சம் ஒன்றை சேர்த்துள்ளார்கள். இதுதான் மசோதாவிலுள்ள மிக மோசமான அம்சமாக நான் கருதுகிறேன்.

இந்நாட்டில் எப்படி "அப்ரூவர்கள்" தயாரிக்கப்படுகின்றனர் என்பதைப் பற்றி முன்பே குறிப்பிட்டேன். காங்கிரஸ் சர்க்காரே காங்கிரஸ்காரர் ஒருவரை கடந்த கால தொடர்புகளுக்காக கைது செய்து சிறையிலிட்ட சம்பவம் ஒன்றிருக்கிறது. எதைப்பற்றியும், அரசியலைப் பற்றியும் கூட போலிஸார் அக்கறை காட்டுவதில்லை.

"அப்ரூவர்" வைக்க அனுமதி கிடைத்து விட்டால் நல்ல நேர்மை மிக்க ஆபீஸர் மீதும் குற்றம் சாட்டப் பட்டால் வழக்கை நிரூபிக்க, அப்ரூவரைத் தயாரிக்க போலீஸார் தயங்க மாட்டார்கள். லஞ்சத்தைப்பற்றி பரிசிலனை செய்யும்பொழுது இரண்டு அம்சங்களை கவனிக்க வேண்டுமென்று தேக்சந்த் கமிட்டி அறிக்கையில் தெளிவாக கூறியிருக்கிறது. அருகதை இல்லாத ஒருவன் தன்னுடைய சொந்த லாபத்திற்காக ஒருஅதிகாரிக்கு லஞ்சம் கொடுக்க முயற்சித்தாலும், கொடுத்தாலும் அது பெரிய லஞ்சக் குற்றம்தான். இம்மாதிரி குற்றம்தான் மலிந்து கிடக்கின்றன, என்று அக்கமிட்டி அறிக்கையில் கண்டிருக்கிறது.

இதைப்பற்றி நான் ஒரு விஷயத்தை குறிப்பிட விரும்பு கின்றேன். அருகதை இல்லாத ஒருவனுக்கு, ஓர் அதி காரி அவனுடைய லாபத்திற்காக விசேஷ சலுகைகள் காட்டினால் அந்த அதிகாரியை தூக்கிலேற்றுங்கள். நான் அதைப்பற்றி ஒன்றும் குற்றம் கூறவில்லை. சர்க்கார் காரி யாலயங்களில் சிறிய குமாஸ்தாக்கள் தங்களிடத்தில் காரியங்களை சாதித்து கொள்ள வருகிறவர்களிடத்தில் ஏதோ கொஞ்சம் வாங்கும் பழக்கம் சாதாரணமாக அமு லில் இருந்து வருகிறது. அவர்கள் ஏன் லஞ்சம் வாங்கு கிறார்கள். சூழ்நிலையும், சேர்க்கையுமே அதற்குக்காரணம். குற்றங்களை நிரூபிப்பதற்காக அப்ரூவர்களை தயார் செய் கின்ற பழக்கம் ஏற்பட்டு விட்டால், அப்ரூவர் கிரிமினல் வழக்கு ஒன்று ஏற்பட்டு விடும்.

அப்ரூவர்கள் தயாரிக்கும் முறையை இரண்டாண்டு களுக்கு கடைப்பிடித்து பார்க்கலாம் என்று தேக்சந்த் கமிட்டி கூறுகிறது. குற்றத்தை அப்ரூவர் இல்லாமல் நிரூபிக்க முடியுமானால் நிரூபியுங்கள். இல்லாவிட்டால் விட்டு விடுங்கள். ஆகவே அப்ரூவர் விஷயத்தைக்குறித்து தீவிரமாக சிந்தித்து முடிவு செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல விதமான லஞ்சங்களிருக்கின்றன. இரண்டணு வானாலும் லஞ்சம்தான், இரண்டு லக்ஷ ரூபாயானாலும் லஞ் சம்தான், குறைந்த சம்பளம் வாங்கும் போலீஸ்காரன் சில அணுக்கள் தான் லஞ்சம் வாங்குகிறான். பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தர் பெரிய தொகையை லஞ்சமாக வாங்கு கிறார். ஆனால், இரண்டும் ஒரேமாதிரி குற்றந்தான். சட்ட மந்திரி சொல்வதைப் பார்த்தால் சர்க்கார் உத்தியோகஸ் தர் பெரும்பாலோர் லஞ்சம் வாங்குகிறவர்களே என்று அர்த்தமாகிறது. அப்படியானால் சர்க்காரையே சிறையில் தள்ள வேண்டியதுதான். தங்கள் ஊழியர்களிடையே நேர் மையாக நடந்து கொள்ள வேண்டுமென்ற மனப்பான் மையை உண்டாக்க முடியாவிட்டால், அவர்களிடையே ஒழுங்கு முறையை நிலை நிறுத்த முடியாவிட்டால் அவர்க ளுடைய பொருளாதார தேவையை லஞ்சம் வாங்காது பூர்த்தி செய்து கொள்ள முடியா விட்டால், போலீஸ்

இருந்து என்ன பயன்? விசேஷப் போலீஸ் அமைத்து தான் என்ன பயன்?

விசேஷ போலீஸார் மாத்திரம் எப்படி யோக்கியமாக நடந்து கொண்டு குற்றவாளிகளை தண்டிக்க முயற்சிப் பார்கள். அவர்கள் மாத்திரம் இந்த லஞ்ச வலையில் எப் படி சிக்காமல் இருப்பார்கள். சில அதிகாரிகள் விருந்துக ளுக்குப் போகிறார்கள். அங்கே குடிக்கிறார்கள். அதுகூட லஞ்சமா? அப்படியானால் விருந்துகளுக்கு ஆபீஸர்கள் போகக் கூடாதா? இம்மாதிரியான நிலைமை ஏற்படும் என்று நான் ஐயப்படுகின்றேன்.

இன்னும் பல வழிகள் இருக்கின்றன, ஒருவரை வசப் படுத்த அவைகளை எல்லாம் நான் இங்கே விவரிக்க விரும்ப வில்லை. ஆனால் ஒரு விஷயத்தை மாத்திரம் குறிப்பிட விரும்புகிறேன். சுதந்திரம் வருவதற்கு முன்னால் சட்ட சபை அங்கத்தினர்களை வசப்படுத்த இந்தியசர்க்கார் ஒரு வழியை கையாண்டார்கள். சட்ட சபையில் ஒரு மசோ தாவை நிறைவேற்றுவதற்கு அங்கத்தினர்களின் ஆதர வைப் பெறுவதற்காக டெலிபோன் பெண்களை அவர்கள் இடத்தில் அனுப்பி வைப்பது என்று பகிரங்கமாக சொல் லப்பட்டது. இதுவும் லஞ்சம் தானே? நேர்மையாக நிர் வாகம் ஒழுங்காக நடக்க வேண்டுமென்று நம்மை போல விரும்புகின்றார். ஆனால், குற்றவாளிகளுடன் ஒரு பாப மும் செய்யாதவர்கள் தண்டனை அடைந்து வருத்தப்படக் கூடாது. நியாயமாக இச்சட்டம் அமுல் நடத்தப்பட வேண்டும்.

இந்த குற்றங்களுக்கு அடிப் படையான காரண மென்ன? அடிப்படை காரணங்களை உணர்ந்து அகற்றி விட்டால் பிறகு தொந்தரவே இருக்காது. மேலெழுந்த வாரியாக சிகிச்சை செய்தால் வியாதி தீராது. உள் இருந் துகொண்டே கிருமிகள் அரசியல் வாழ்வை அழித்துக் கொண்டே இருக்கும். வியாதி என்றுமே தீராது.

மக்களின்வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் கன்டிரோல் கள் தான் இந்த லஞ்சத்திற்கு மூலாதாரமான காரணம்.

சிறிய விஷயத்திற்கும் சர்க்காரின் தயவை நாடும்படி செய்கின்றமுறை அமுலிலிருக்கும் வரையிலும், நேர்மை மிக்க வியாபாரியும் டில்லி யாத்திரைசெய்தால்தான் காரியம்நடக்கும், என்ற நிலைமை இருக்கும்வரை நிச்சயமாக லஞ்சம் இருக்கத்தான் செய்யும். லஞ்சத்தை உங்களால் ஒழிக்கமுடியாது கன்டிரோல்கள்தான் லஞ்சத்தின் வேர். ஆகவே லஞ்சத்தை வளர்ப்பது கன்டிரோல்கள் என்பதை அறிந்து அவைகளை நீக்க சர்க்கார் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்."

கம்பெனிச் சட்டத்திற்கு திருத்தம்

ஸ்ரீ. எச். டி. ராஜா. ராஜாங்க சபையில் 1952, ஜூலை 25-ம் தேதியன்று பேசியதாவது:

இது சர்க்கார் கொள்கை பெரிதும் சம்பந்தப்பட்டுள்ள விஷயம். இதுவரை சர்க்கார் அறிவித்துள்ள கொள்கையின்படி மூலதனத்தில் 51 சதவிகிதம் இந்தியர் போட வேண்டும். அந்நியர் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்படும் கம்பெனிகளில் அனேகமாக எல்லாமே அடிப்படையில் இந்தக்கொள்கையைத்தான் கொண்டிருக்கின்றன. இந்நாட்டில் முதலாளிகள் மூலதனம் போடத்தயங்குவதாக முன்பு ஒரு நாள் பொக்கிஷ மந்திரிகூறினர். மூலதனம் கிடைக்கவில்லை; ஆகையால் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை நடத்தும் இக்கம்பெனிகள் இந்நாட்டிற்கு வரப் பிரத்யேக வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. மூலதனத்தில் 51 சதவிகிதம் இந்தியருடையதாகவோ, நம் சார்பில் இந்திய சர்க்காருடையதாகவோ இருக்கவேண்டு மென்ற கொள்கையை இந்திய சர்க்கார் கைவிட்டு விட்டனரென்பதுதான் இவ்விஷயத்தில் எழும் முதல் பிரச்னை. இந்த இரு ஒப்பந்தங்கள் விஷயத்தில் அது கைவிடப்பட்டுள்ளது. இது ஒரு விஷயம். இரண்டாவது விஷயம் என்னவென்றால், "இந்த திட்டத்திற்கு உதவி செய்வதற்காக, 25 வருஷம்வரை கட்டாய ஆர்ஜிதத்திலிருந்து விதி விலக்கு அளிப்பது உள்பட சில வாக்குறுதிகளை எஸ். வி. ஓ. ஸி. க்கு இந்திய சர்க்கார் அளித்திருக்கின்றனர் என்பது. 25 வருஷம் வரை தொழிற்சாலைகளைக் கட்டாயமாக ஆர்ஜிதம் செய்யப்படாது என்ற வாக்குறுதியைச் சேர்த்துச் சொன்னல் சர்க்கார் அளித்துள்ள மற்றெல்லா வாக்குறுதிகளையும் வெளியிட்டதாகிவிடாது. இந்திய சர்க்கார் வேறுஎன்ன வாக்குறுதிகள் அளித்திருக்கின்றன ரென்பதை பொக்கிஷ மந்திரி இந்த சபைக்

குத் தெரியப்படுத்தவில்லை. இவற்றை அறிய நமக்கு உரிமை உண்டு. இரண்டாவதாக, தொகை குறிக்கப்படாத ஒரு செக்கில் கையெழுத்துப் போடும்படி நாம் கேட்கப்படு கிறோம். இன்னதுதான் இருக்கிறது என்பது தெரியாத செக் அபாயகரமானது. சர்க்காருக்கோ, தேசபக்தியுள்ள நம் பொக்கிஷ மந்திரிக்கோ நான் நோக்கமெதுவும் கற்பிக்க வில்லை. ஆனால் விஷயம் அதுவல்ல. இப்பொழுது எழுந் துள்ள பிரச்னை என்னவென்றால், நம் நாட்டில் இவ்வித மான கைத்தொழில்கள் ஆரம்பிக்க சில அந்நியர்கள் வரு கின்றனர். அந்த மூலதனத்திற்கு நம் உழைப்பினால் கிடைக்கும் லாபம் வெளியே செல்லப் போகிறது என்பது தான் இதற்குப் பொருள். மூலதனம் இங்கு உபயோகிக் கப்படும் விதத்தினால் லாபம் எங்ஙனம் கட்டுப்படுத்தப்படு கிறதுஎன்பது மிகவும் முக்கியமான விஷயம். முன் ஒருநாள் தேயிலைத் தொழிலில் பிரிட்டிஷ் ஏகபோக உரிமைபற்றி இந்த சபையில் விவாதம் நடந்தபோது சபையின் உணர்ச் சியைக் கண்டோம். இந்தியாவில் கால் ஊன்ற முயற்சிக் கும் இந்த அந்நியர்களை நாம் எவ்வளவு சந்தேகத்துடன் நோக்குகிறோமென்பது உங்களுக்குத்தெரியும். அன்று பொக்கிஷ மந்திரி நிகழ்த்திய திறமையான பிரசங்கத்தில், அரசியல் பந்தம் எதுவும்இல்லை யென்று கூறினார். அரசி யல் பந்தம் என்பது எது? "எண்ணெய்" என்பதுபற்றி அப்டன் ஸிங்ளேர் எழுதிய புத்தகத்தைப் படித் தால், அரசியலில் எண்ணெய்தான் சர்வமும் என்பது விளங்கும்.

எண்ணெய் மற்றவற்றைப் போன்றதல்ல. எண் ணெய்க்கு மஹத்தான சக்திகள் இருக்கின்றன. நாடுகளுக் கிடையில் அது யுத்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பிர தேசங்களைக் கைப்பற்றச் செய்திருக்கிறது. சர்க்கார்கள் ஒன்றோடொன்று மண்டையை உடைத்துக்கொள்ளும் நிலை மைகளை ஏற்படுத்தி யிருக்கிறது. பாரசீகத்தில் சமீபத் தில் என்ன நேர்ந்தது என்பதைக்கண்டோம். சர்க்கார் கள் தூக்கி எறியப்பட்டன; வேறு சர்க்கார்கள் வந்தன. அந்நாட்டு மக்களின் வாழ்க்கையை அந்நிய முதலாளிகள் விளையாட்டுப் பொருளாக்கி விட்டனர். ஆகையால் இது

நமக்கு மிகவும் முக்கியமான பிரச்னே. இது கம்பெனிச் சட்டத்திற்கு வெறும் திருத்தம் மாத்திரமல்ல. இதில் வேறு சில அடிப்படையான விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன. இந்த சமயத்தில் பாரதியாரின் வாக்கு ஒன்று நினைவுக்கு வருகின்றது. பிரிட்டிஷார் இங்கு அரசியல் ரீதியில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கி விட்டதுபற்றி அவர் குறிப்பிடுகையில், " ஆட்டுத்தோலுக்கு இடம் கொடுத்ததாலே வந்த மோசம் " என்கிருர். ஆட்டுத் தோல்தான் பிரிட்டிஷாரை இங்கு 200 வருஷம் ஆதிக்கம் செலுத்தச் செய்தது என்பது இதன்பொருள். நம் வர்த்தகப்பிரச்னைகளை நாம் இந்தக் கண்ணேட்டத்துடன், தான் பார்க்கிருேம். அரசியல் அம்சம் ஒருபுறமிருக்க இதன் லௌகீக அம்சத்தையும் நாம் கவனிக்க வேண்டும். இந்த சுத்திகரிப்புச் சாலேகள் உண்மையில் நமக்குத் தேவை தாஞ? இவை ஏற்படுத்தப் பட்டால் பெட்ரோல் இப்பொழுது கிடைப்பதைக் காட்டிலும் மலிவாகக் கிடைக்குமா? நம் நாட்டில் உபயோகிக்கப்படும் பெட்ரோலின் அளவையும் இதை இங்கேயே உற்பத்தி செய்வதால் பெட்ரோல் உபயோகிப்பவர்களுக்குக் கிடைக்கக் கூடிய நிவாரணத்தையும் பற்றி ஆலோசிக்குமாறு பொக்கிஷ மந்திரியைக் கேட்டுக் கொள்கிறேன். இங்கேயே சுத்தமாக்கப்படும் பெட்ரோலுக்கும், வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பெட்ரோலுக்கும் ஒரே விலே கொடுக்கவேண்டி வந்தால் அதில் அர்த்தமில்லே.

இதில் அடங்கியுள்ள 3-வது முக்கியமான பிரச்னே மூலப் பொருளேப் பற்றியது. சுத்திகரிப்புச் சாலே க்ரூட் ஆயிலேத்தான் சுத்தம் செய்யவேண்டும். ஆனல் நம் நாட்டில் க்ரூட் ஆயில் இல்லே. மூலப்பொருள்கள் அபிவிருத்தி செய்யப்படவில்லே. " ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் " ஏற்படுத்தப்பட்டிருப்பது போன்றதுதான் இதுவும். ஆணி கோணி உள்பட, எல்லா உருப்புக்களும் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. ஒரு கோடி ரூபாயோ 2 கோடி ரூபாயோ முதலீடுசெய்து அவை இங்கு கார்களாகக் கோர்க்கப்படுகின்றன. பொருள் வாங்க மக்களுக்கு உள்ள சக்தி மிகவும் குறைவென்பது உங்களுக்கே தெரியம். கார்கள், தயாரிக்கப்பட்ட பல மாதங்களுக்குப்

பிறகும் ஹிந்துஸ்தான் தொழிற் சாலையிலேதான் இருக்கும். ஆகையால் சுத்திகரிப்புத் தொழிற்சாலை முதலில் மூலப்பொருள்களில் கவனம் செலுத்த வேண்டும். இந்த உற்பத்திசாலை பூரணத்துவம் பெற்றதாக இருந்தால் நாட்டிற்கு உபயோகமானதாக இருக்கும். ஆனல் மூலப் பொருள்களுக்கு நீங்கள் வெளிநாடுகளை நம்பியிருக்கவேண்டியிருக்கிறது. இப்பொழுது சுத்திகரிப்புச் சாலை ஏற்படுத்துகிறீர்கள். தொழில் நுணுக்க ஞானம் படைத்தவர்கள் நம்மிடையே இல்லையென்றால், வெளி நாட்டிலிருந்து வருபவர்கள் ஒரு மாதத்தில் "கடையை மூடிவிட்டு" தாங்கள் இருந்த இடத்திற்கே போய்விடவும் கூடும். ஆகையால் நம் நலன்களைச் சரிவரப் பாதுகாக்கும் ஷரத்துக்கள் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட வேண்டும். இத் தொழிற் சாலைகளைச் சில வருஷங்களுக்குப் பின் இந்தியர்களே நடத்த வேண்டுமென்றால் இப்பொழுது இந்தியர்கள் அவற்றில் 2 வது ஸ்தானம் வகிக்க வேண்டும். இவற்றை நடத்த வசதிகளும், பயிற்சி பெற்ற ஆட்களும் இல்லையென்றால் 25 வருஷங்களுக்குப் பின் இத் தொழிற்சாலைகளை நாம் எடுத்து நடத்த முடியாது. இந்த அங்கியக் கம்பெனிகளுடன் பேசும்போது இந்த முக்கியமான விஷயத்தை கவனிக்குமாறு பொக்கிஷ மந்திரியைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சர்க்கார் வெளியிட்ட அறிக்கையின்படி, இந் நாட்டிலேயே சிறிது க்ரூட் ஆயிலும் இதர மூலப் பொருள்களும் கிடைப்பதாகத் தெரிகிறது. உற்பத்தி செய்யப்படும் பொருளின் விலை குறையும் பொருட்டு, சுத்திகரிப்புச்சாலைகளை நடத்தும் போதே மூலப் பொருள்களையும் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுப்பது அவசியம். போக்கு வரத்து சாதனங்கள், வர்த்தகம், விமானம், ராணுவம் முதலியவற்றிற்கு தடங்கலின்றி பெட்ரோல் சப்ளை கிடைக்க வேண்டுமென்பதற்காக இந்த சுத்திகரிப்புச் சாலைகளை அமைக்க பொக்கிஷ மந்திரி விரும்புகிறுரென்று நினைக்கிறேன். அது தான் நோக்கமென்றால் இத்தொழிற் சாலைகள், தங்களுக்கு வேண்டிய பொருள்களின் தேவைகளை இந் நாட்டிலேயே பூர்த்திசெய்து கொள்ளவேண்டும். அக்கம்பெனி

கள் இதற்கு உத்திரவாதமளிக்கு மென்று பொக்கிஷ மந்திரி உறுதி கூறுவாரா?

கடைசியாக நான் குறிப்பிட விரும்புவது மூலதன அமைப்பைப் பற்றியது. இந்தியருக்காகத் தாம் சில பங்குகளை எடுத்துக் கொண்டிருப்பதாக பொக்கிஷ மந்திரி சொன்னார். ஆனால், "பிரபரென்ஸ்" பங்குகள் இருப்பதாகத் தெரிகிறது. இந்த பங்குகளுக்கு மொத்தமாக ஒரு குறிப்பிட்ட அளவு விசேஷ (பிரிபரென்ஸ்) டிவிடெண்டு கிடைக்குமென்பது உண்மை. சாதாரண பங்குகளும் நமக்குக் கிடைக்க வேண்டுமென்று ஸ்ரீ. பி. கே. கோஷ் வற்புறுத்தினர். அவர் சாதாரணப் பங்கில் 2 கோடி ரூபாய் போடலாம். ஆனல் கம்பெனிச் சட்டப்படி, ஒரு பங்குக்கு ஒரு வோட் என்ற ரீதியில் அவரிடம் ஒரு கோடி வோட் இருந்தாலும் நிர்வாகத்தார் நடை முறையில் அவரால் ஒன்றும் செய்ய முடியாது. நிர்வாக ஏஜென்ஸிதான் பிரதானமென்று கம்பெனிநிர்வாகிக்ள் சொல்வார்கள். கம்பெனியை நடத்தும் நிர்வாக ஏஜென்ஸி சர்வவியாபிபாபா கமிட்டியின் நீண்ட அறிக்கையை நான் படித்தேன். நாம் விவாதிக்க அதிக அவகாசமிருக்கும் பொழுது இந்த பல கம்பெனிச் சட்டத்தைச் சீர்திருத்த இந்த சபையில் மசோதாவருமென்று நம்புகிறேன். ஆனல் இந்த கம்பெனிகள் விஷயத்தில் கம்பெனி மூலப்பொருள்க்ள் வாங்கும் விஷயத்தில் நிர்வாகஏஜெண்டுகள் உபயோகிக்கும் செல்வாக்கு கம்பெனியுடன் நிர்வாக ஏஜெண்டுகள் செய்துகொள்ளக் கூடிய ஒப்பந்தங்களின் ஷரத்துக்கள், நிர்வாக ஏஜென்ஸி முறையினல் கம்பெனிக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் முதலியவை சம்பந்தமாக இந்திய சர்க்கார் என்ன பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றன ரென்பதை நாம் கண்டுபிடிக்கவேண்டும். நிர்வாக ஏஜெண்டுகள் தான் கேந்திர ஸ்தானம் வகிக்கின்றனர். நிர்வாக ஏஜென்ஸி முறைக்கு கம்பெனிச் சட்டம் வசதி அளிக்கிறதென்பது வக்கீலாகிய உங்களுக்குத் தெரியும். நிர்வாக ஏஜென்ஸி முறைபற்றி நான் அதிகம் பேசப்போவதில்லை. ஆனல் கம்பெனி முழுமைக்கும், அதன் அங்கங்களாகிய தொழிலாளர் குமாஸ்தாக்கள், பங்குதார்கள் ஆகியோருக்கும்

இம்முறை எங்ஙனம் உதவி செய்யப்போகிறதென்பதும், கம்பெனியின் ஸ்தாபனம் எப்படி உதவி செய்யப்போகிறதென்பதும் கவனிக்கப்படவேண்டிய விஷயங்கள்.

கடைசியாக அரசியல் பந்தப் பிரச்னைபற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இவ்விஷயத்தில அரசியல் பந்தம் எதுவும் இல்லையென்று ஸ்ரீ. தேஷ்முக் உறுதி கூறியதற்காக நான் நன்றி செலுத்துகிறேன். ஆனல் இதில் வேறு என்ன பந்தங்கள் இருக்கின்றன? இதை அவரிடம் அறிய விரும்புகிறேன். கனம் பொக்கிஷ மந்திரி நம்மைத் தம் நம்பிக்கைக்குப் பாத்திரமாக்கிக்கொண்டு இவ்விஷயங்களை வெயிட்டு, இக்கம்பெனிகள் நாட்டின் நலனுக்கு ஏற்பட்டவையே என்றும் சிறிது காலத்திற்குப்பின் நாம் இக்கம்பெனிகளை எடுத்துநடத்த முடியுமென்பதுடன், இவற்றை நடத்துவதற்கான அனுபவம்பெற இந்தியருக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படுமென்றும் அறிவிப்பாரா? அவர் இதைச் சொன்னல் நான் பெருமையடைவேன். இந்த நாடு பெருமைப்படுத்தப்பட்டதாக கருதுவேன். பொருத்தமான பதிலளித்ததற்காக நாம் பொக்கிஷ மந்திரிக்கு நன்றி செலுத்துவோம்.

இந்தியக்கைத் தொழில்களுக்கு பாதுகாப்பு

ஸ்ரீ. எச். டி. ராஜா 1952, நவம்பர் 22-ம் தேதி கீழ்க்கண்ட பிரசங்கத்தை நிகழ்த்தினர்:

ஐயா, இந்தப் பாதுகாப்புக் கொள்கை முக்கியமான 3 விஷயங்களைப் பொறுத்திருக்கிறது. ஏற்கனவே இந்த சபையில் எடுத்துக்காட்டப்பட்டதுபோல் இது பிரிட்டிஷ் ஆட்சிவிட்டுச்சென்ற சொத்து. ஏதாவது ஒருஉருவத்தில் இதை நாமும் படித்து வருகிறோம். இந்தப் பாதுகாப்பை 3 விதமாகப் பிரிக்கலாம். (1) நாட்டுத் தொழில்கள் வளர உதவி செய்வது (2) வெளிநாட்டுப் போட்டியினல் பயமுறுத்தப்படும் தொழில்களுக்கு மான்யம் கொடுப்பது (3) நம் சொந்தத் தொழில்களை ஏற்படுத்திக் கொண்டு, இவற்றிற்கு மான்யம்கொடுப்பது. இந்தமூன்றையும் கவனிக்கும் பொழுது, ஒருவிதத்தில் கம்யூனிஸ்டுகள் சொல்வது நியாயமென்பது தோன்றுகிறது. பிரிட்டிஷ் முதலாளிகள் வந்து, இந்திய முதலாளிகளுடன் ஒன்று சேர்ந்து, உருப்புக்களை ஒன்று சேர்க்கும் தொழிற்சாலைகளை அமைக்கின்றனர். இவ்விதம் உற்பத்தியாகும் பொருள்கள் நம் ஜனங்களுக்காக உற்பத்திசெய்யப்படுவதாகச் சொல்லிப் பாதுகாப்புக் கேட்கின்றனர். இதன் விளைவு என்னவென்றால் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகின்றன. இந்திய மக்கள் கொடுக்கும் வரிப்பணத்தினல் பாதுகாப்பு அளிக்கப்பட்டு உற்பத்தியாகும் பொருள்களும் அதே விலைக்கு விற்கப்படுகின்றன. இந்தச் சுமையெல்லாம் சேர்ந்து வரி கொடுப்போர் தலையில் ஏறுகிறது. இதுமிகவும் விசித்திரமான நிலைமை. எந்த சர்க்காரும் இதை ஆதரிக்கமுடியாது. நம் தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதும் அவை பெருத்த அளவில் வளர உதவி அளிப்பதும் நம் தேசிய உணர்ச்சியைப் பொறுத்த விஷயங்கள்.

நாம் சுதேசிக்காகப் போராடி யிருக்கிறோம். நம் அரசியல் போராட்டத்திற்கே சுதேசி ஜீவாதாரமாக இருந்தது. நாம் சுதேசியைப் பற்றிப் பேசிய போது அதன் பொருள் என்ன? நம் நாட்டு மக்களின் உபயோகத்திற்காக நம் மக்களே சில பொருள்களை மலிவான விலையில் உற்பத்தி செய்யவேண்டுமென்பதுதான் அதன் பொருள். அந்நியப் பொருள்களை நாம் தடுக்க வேண்டும். மலேயாவைப் பாருங்கள். அது ஒரு பிரிட்டிஷ் காலனி. அங்கு விற்கப்படும் பொருள்கள், 4 மடங்கு விலைக்கு இந்திய மார்க்கெட்டில் விற்கப்படுகின்றன. இதன் ரகசியம் என்ன? சாதாரண ரப்பரை எடுத்துக்கொள்ளுங்கள். அல்லது நாம் மான்யம் கொடுத்துப் பாதுகாக்கும் பென்ஸிலைத் தான் எடுத்துக் கொள்ளுங்கள். மலேயாவில் 5 செண்டுக்கு ஒரு பென்ஸில் கிடைக்கிறது. ஆனல் இந்தியாவில் ஒரு பென்ஸில் விலை 3 அணு இதன் ரகசியமென்ன? ஒரு தொழிலுக்கு சர்க்கார் பாதுகாப்பு அளிப்பதற்கு முன்னல் அடிப்படைப் பிரச்னைகளைக் கவனியாததுதான். மற்ற நாடுகளில் தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பொழுது அந்த தேசப் பிரஜைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. வெளிநாட்டு சர்க்கார்கள் கைத் தொழில்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்போது, தொழில்களை நடத்துபவர்கள் தேசப் பிரஜைகளா என்பதைக் கவனிக்கின்றனர்.

இந்தியாவில், அபாயத்திற்குள்ளாகியுள்ள இந்திய முதலாளிகள் பாதுகாப்புக் கேட்டால் அர்த்தமுண்டு. சாக்லேட் தொழிலை ஸ்ரீ. சுந்தரய்யா எடுத்துக் காட்டினர். அது அந்நியர் கையில் இருக்கிறது. க்ளூகோஸ் தொழிற்சாலையை எடுத்துக் காட்டினர். அதுவும் அந்நியர் கையிலேயே இருக்கிறது. அந்நியக் கம்பெனிகளுக்கு நாம் பாதுகாப்பு அளிக்கவில்லையா? இந்தியாவின் முன்னேற்றத்திற்கு அந்நிய மூலதனத்தைப் பயன்படுத்துவது வேறு விஷயம். தொழில்களுக்குக் கண்மூடித் தனமாகப் பாதுகாப்பு அளிக்கும் காங்கிரஸ்கட்சி தன் கொள்கையை மாற்றிக்கொண்டு, இந்தியப் பிரஜைகளுக்கு என்ன செய்வது என்பது பற்றியும், நம் தொழில்களை எப்படி வளர்ப்பது என்பது பற்றியும் ஆலோசிக்குமா? முற்றிலும் இந்

தியமயமான, நூற்றுக்கு நூறு இந்தியரால் நடத்தப்படும் கம்பெனிக்கு பாதுகாப்பு அளிப்பதானால் அர்த்த மிருக்கிறது. சிலநிபந்தனைகளின் பேரில் வெளிநாட்டு மூலதனத்தை வரவழைத்து, அதை இந்திய மூல தனத்துடன் சேர்த்து, நாட்டைத் தொழில் மய மாக்குவதானால் அதற்கும் பொருள் உண்டு. பொது மக்களைச்சுரண்டும் அந்நியக் கம்பெனிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பது தான் புரிய வில்லை. இது சர்க்காரின் அந்தரங்கத்திற்குத்தான் தெரிந்திருக்க வேண்டும். அவர்கள் உண்மையுடன் நடந்துகொள்வதென்றால், கண்ட தொழிலுக்கும் பாதுகாப்பு அளிப்பதற்கு முன்னால் தங்கள் கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டும். நாம்தீவிரமாக ஆலோசித்து, சர்க்காரை பதில் சொல்லச் சொல்லிக் கேட்க வேண்டிய பிரச்னை இது.

ஒரு கைத்தொழிலின் வளர்ச்சிக்கு சர்க்கார் வசதிகள் அளிப்பதை நான் ஆதரிக்கிறேன். நாம் போராடிக் கொண்டிருப்பதால் தொழில் நுணுக்க ஞானமும் மூலதனமும் தேவை. மக்களுக்கு தேவையான பொருள்களை உற்பத்திசெய்து மலிவாகவிற்பவர்களுக்கு சர்க்கார் வசதிகள் அளிப்பதுநியாயமே. சர்க்காருக்கு வருமானத்திற்காகவோ அல்லது தொழில்களைப் பாதுகாப்பதற்காகவோ விதிக்கப்படும் எந்த வரியும் இறுதியில் மக்களின் வரி கொடுக்கும் சக்தியை பாதிக்கும். பாதுகாப்பைப்பற்றி நாம் ஆலோசிப்பதென்றால், அதை எப்படி அமல் நடத்துவது என்பதைக் கவனிக்கவேண்டும். கடைசியில் கம்பெனியில் லாப நஷ்டக்கணக்கில் ரூபா, அணா, பைசாவாக நிற்கும் எதுவும் பொது மக்களிடமிருந்துதான் வரவேண்டும். நாம் பொது மக்களின் நலனைக்கவனிப்பதென்றால், தொழில்கள் எப்படி வளர்க்கப்படுகின்றன, இந்தத் தொழில்கள் வளர்க்கப்படுவதன் அடிப்படை என்ன, இத்தொழில்கள் தோன்றும் வழி வகைகள் எவை என்பவை யெல்லாம் புறக்கணிக்க முடியாத விஷயங்கள்.

இப்பொழுது நாம் செலவைக்கவனிப்போம். ஒரு தொழில் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதாகவும், அது சர்க்காரிடம் பாதுகாப்புக் கேட்பதாகவும் வைத்துக்கொள்

வோம். அத்தொழிலின் வளர்ச்சிக்கான செலவுகளென்று காட்டப்படும் செலவுகளைப் பரிசீலனைசெய்ய சர்க்காருக்கு வசதி இல்லை. பிறகு லாப விகிதம், நிர்வாக ஏஜென்டின் கமிஷன், பங்குதார்களுக்கு லாபப் பங்கு (டிவிடெண்டு) ஆகிய பிரச்னைகள்வேறு இருக்கின்றன. நம் மத்தியதர வகுப்பினர் சேகரித்த பணமெல்லாம், பெரிய முதலாளிகள் நடத்தும் தொழில்களில் போடப்பட்டிருக்கின்றன. இந்த முதலாளிகள் இறுதியில் தாங்களும் அழிந்து மூலதனம் போட்டவர்களையும் அழிக்கின்றனர். இவர்கள் மூலதனத்தைச் செலவிட்டுத் தீர்த்துவிட்டுப் பிறகு சர்க்காரிடம் பாதுகாப்புக்கு வருகின்றனர். பி. டி. சைகிள் தொழிற்சாலையைப்பற்றி நான் குறிப்பிடமாட்டேன். ஆனால் "ஹிந்துஸ்தான்மோடார்ஸ்" கம்பெனியைப் பற்றிச்சொல்வேன். அவர்கள் நாளை வந்து சர்க்காரின் முன் மண்டியிட்டுப் பாதுகாப்புக் கேட்பார்கள். இதுவும் சைகிள் தொழிற்சாலையைப்போல், இறக்குமதி யாகும் உருப்புக்களைக் கோக்கும் தொழிற்சாலைதான். இதற்குவேண்டிய எல்லா உருப்புக்களும் இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்டு இங்கு இறக்குமதியாகின்றன. இவை இங்கு காராகக் கோத்து விற்கப்படுகின்றன. இங்கு பொது ஜனங்களால் இந்தவிலையைக் கொடுத்துக் காரை வாங்கமுடியாது. இறுதியில் மூடப்படுவதற்காக ஒரு கோடி ரூபாயைச் செலவு செய்து இந்தத் தொழிற்சாலையை ஸ்தாபிப்பானேன்? பி. டி. சைகிள் தொழிற்சாலை. ராலே சைகிள்ஸ் எல்லாம் இதே வேலையைத்தான் செய்து கொண்டிருக்கின்றன. "ஹாண்டில்பார்" "கிராஸ்பார்" "கப்புகல்" முதலிய எல்லாவற்றையும் இக்கம்பெனிகள் இங்கிலாந்தில் உற்பத்தி செய்து இங்கு இறக்குமதி செய்கின்றன. இரட்டிப்பு விலையில் இவை இங்கு திணிக்கப்படுகின்றன. இதன் விளைவாக இங்கிலாந்தில் 5 பவுனுக்கு விற்கப்படும் ஒரு சைகிள் இங்கு 15 பவுனுக்கு விற்கத்தான் முடிகிறது இது எங்குபோய் முடியும்? மக்கள் ஒருவரை ஒருவர் சுரண்டமுடியாதென்று எங்கோ சொல்லப்பட்டது. இவ்விதம் சுரண்டிக்கொண்டே போனால் இறுதியில் என்ன நிற்கும்? உயர்ந்த விலைவாசிகளுக்கும், குறைந்த வாழ்க்கைத் தரத்திற்கு மிடையில் மக்கள் உண்ண உணவும், இருக்க இட

மும் இல்லாமல் தவிக்கின்றனர். இந்த நிலைமையில் ஜன நாயகத்திற்கே அபாயம் ஏற்படும். அதைத் தடுக்க நான் விரும்புகிறேன். என் கம்யூனிஸ்ட் தோழர் சுந்தரய்யா சொன்னதுபோல் இப் பிரச்னையின் எல்லா அம்சங்களும் அரசியலையே சுற்றிச் சுழல்கின்றன. இவை அரசியலைச் சுற்றி வட்டமிடுகின்றன வென்றால் அரசியலில் மனிதத் தன்மை இருக்கவேண்டும். மக்களுக்குச் சாமான்களை மலி வாகக் கொடுத்தால்தான் அது வளரும். மக்கள் இதுவரை சுரண்டப்பட்டு வந்திருப்பதால்தான் கஷ்டப்படுகின்றனர். இது நிற்கவேண்டும். இந்தப்பாதுகாப்பு பகுத்தறிவுக்கு ஒத்ததாக இருக்கவேண்டும். பாதுகாப்புக்கு, பகுத்தறி வுக்குஏற்ற அடிப்படை இருக்கவேண்டுமானால் ஒவ்வொரு தொழிலிலும், அத்தொழிலின் சொந்தக்காரர்கள், தொழி லில் போடப்பட்டுள்ள மூலதனம், கம்பெனி வியாபாரத்தை நடத்தும் விதம் முதலிய பல்வேறு விஷயங்களையும் ஆராய வேண்டும். நீங்கள் அளிக்கும் உதவியைப் பாதுகாப்பு என்றோ, மான்யம் என்றோ, உதவி என்றோ வேறு என்ன பெயரிட்டு அழைப்பதானாலும் இவ்விதம் ஆராய்ந்த பிறகு தான் அந்த உதவியை அளிக்கவேண்டும். இப்படிச் செய் தால் வரி கொடுப்போர் சந்தோஷமடைவர்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த என் சொந்த அநுப வம் ஒன்றை நான் இங்கு சொல்ல விரும்புகிறேன். நான் ஆஸ்ட்ரேலியாவுக்குப் போயிருந்தபோது என் நண்பர் ஒருவர் என்னை ஓர் ஆப்பிள் தோட்டத்துக்கு அழைத் துச் சென்றிருந்தார். ஆயிரக்கணக்கான ஆப்பிள் செடி கள் நடப்படுவதைக் கண்டேன். அவருடைய வருமானம் எவ்வளவென்று கேட்டேன். அந்தத் தோட்டத்திலிருந்து வருஷத்தில் 10,000 பவுன் கிடைப்பதாகச் சொன்னார். இது சுமார் ரூ. 1 லக்ஷத்திற்குச் சமம். அந்தப் பழங்கள் இந்தியாவில் கொண்டுவந்து திணிக்கப் படுகின்றன. ஆனால் நான் இந்தியன் என்பதால் ஆஸ்ட்ரேலியாவில் ஒரு வாழைப்பழக்கடை வைத்து ஒரு பழம்கூட விற்க முடியாது. மலபார் நேந்திரங்காய் மிகவும் முக்கியமான வாழைப் பழமென்பதும், மக்கள் அதைப் பெரிதும் ரஸிக் கின்றன ரென்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கும். இது

மலபாரில் நிரம்ப உற்பத்தியாகிறது. இதை ஆஸ்ட்ரேலியாவுக்கு ஏற்றுமதி செய்து, அங்கு என் கடையின் கிளை ஒன்றைத் திறந்து இவைகளை விற்பனை செய்ய வேண்டுமென்று நினைப்பது இயற்கை. நான் கருப்பன் என்பதாலும், கருப்பன் கடைவைக்க ஆஸ்ட்ரேலிய வெள்ளையர் அனுமதிக்க மாட்டார்களென்பதிலும் நேந்திரங்காயை நான் ஆஸ்ட்ரேலியாவில் விற்பனை செய்ய முடியாது.

சபையின் உபதலைவர்.—இங்கு நாம் கைத்தொழில்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம்.

ஸ்ரீ. எச். டி. ராஜா:—இதுவும் ஒரு கைத்தொழில்தான். பழப் பாதுகாப்பு டப்பியில் பழங்களை அடைத்து வைப்பது முதலிய தொழில்கள் நடக்கின்றன. இதுவும் ஒரு கைத்தொழில் என்பதில்தான் இதைப்பற்றிக் குறிப்பிடுகிறேன். நேந்திரங்காய் நம்முடைய சிறந்த பழங்களில் ஒன்று. இதற்கு நீங்கள் மான்யம் கொடுக்காததினால், இதர கஷ்டங்களினாலும் இதை நான் ஆஸ்ட்ரேலியாவில் விற்கமுடியாது.

ஸ்ரீ. பி. வி. நாராயணா (சென்னை):—நேந்திரங்காய் என்பது என்ன என்பதையும் சபைக்குச் சொல்லி விடுங்களேன்.

ஸ்ரீ. எச். டி. ராஜா:—சொல்கிறேன். நேந்திரங்காய் என்பது ஒருவித வாழை. இதை வெளிநாடுகளுக்கு அனுப்பலாம். நாட்டின் இந்தப் பகுதிகளிலும் அதை ரஸமாக உபயோகிக்கலாம். இந்தத் தொழிலும் தன் சுய பலத்தால் நிற்க உதவி செய்யவேண்டும். இது இங்கு வளரவேண்டும். ஆகையால் ஆஸ்ட்ரேலியாவிலிருந்து வரும், டப்பியில் அடைக்கப்பட்ட பழங்களின் இறக்குமதியை இங்கு தடைசெய்ய வேண்டும். இவ் விஷயங்களை ஆழ்ந்து ஆராயுமாறு ராஜாங்க மந்திரி ஸ்ரீ. கர்மார்காரைக் கேட்டுக் கொள்கிறேன். மேம் போக்காகப் பார்த்துவிட்டுச் சிலருக்குச் சிறிது மான்யம் கொடுத்து, 'இதோ இருக்கிறது உனக்கு உதவி எடுத்துக்கொண்டு போ' என்று சொன்னால் போதாது. இதைச் செய்யவேண்டிய முறை இதுவல்ல. நமமுடைய சமீபகாலத் தொழில்கள் ஆழ

வேர்விடும் பொருட்டு நான் இவற்றையெல்லாம் எடுத்துச் சொல்லவேண்டி யிருக்கிறது. இதைச் செய்யவேண்டு மானுல் அந்நியர்கள் நம் தொழில்களுடன் போட்டிபோட்டு இவற்றை அழிக்கும்படி விட்டுவிடக் கூடாது.

இப்பொழுது காப்புவரிக் கமிஷனின் அறிக்கையைக் கவனியுங்கள். சென்ற வருஷத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் 1952-ல் உற்பத்தி தீவிரமாக இல்லையென்று தெரிகிறது. மக்களின் வாங்கும் சக்திக் குறைவினுலும், விலைவாசி வீழ்ச்சியினுலும் சென்ற ஏப்ரலில் ஏற்பட்ட பாதகத்தைப் பற்றி அவர்கள் பிரத்யேகமாகக் குறிப்பிட்டிருக்கின்றனர். நீங்கள் உதவி யளித்தும் உங்கள் நோக்கம் நிறைவேறவில்லை யென்பதைத்தான் இது காட்டுகிறது. ஒரு மனிதனை 8 அடி உயரத்தில் தூக்கிக்கொண்டுபோய் அங்கு விட்டு விட்டால் அவன் வீழ்ந்துவிடுகிருன். அவன் அப்படி விழக்கூடாது. உதவியும் ஆதரவும் பெறும் தொழில்கள் சுய சக்தியினுல் நிற்கும் வகையில் அபிவிருத்தியடைய வேண்டும். ஒருவனை 8 அடி உயரத்தில் கொண்டுபோய் விட்டால் அவன் அங்கிருந்த விழாமல் அந்தரத்திலேயே நிற்கவேண்டும். நம் தொழில்கள் அந்த வகையில்தான் வளர்ச்சியடைய வேண்டும், இவ்விதம் பாலாடையினுல் ஊற்றுவதுபோன்ற உதவியை நான் விரும்பவில்லை.

நாம் ஒரு நிரந்தரமான தரத்தை அடைந்து, அந்நிய நாட்டினருடன் போட்டியிடவேண்டும். ஆஸ்ட்ரேலியாவிலிருந்து டப்பாக்களில் அடைத்துவரும் பழம் ரூ. 4-க்குக் கிடைக்கும்போது, நம் நாட்டுப்பழத்தை ரூ. 5 கொடுத்து, மக்கள் எப்படி வாங்குவார்கள்? டப்பாக்களில் அடைத்த பழங்கள் ஆஸ்ட்ரேலியாவிலிருந்து இங்கு வரக்கூடாது. மங்கள் நலனை முன்னிட்டு இவ் விஷயங்களைக் கவனிக்குமாறு நான் சர்க்காரை வற்புறுத்த விரும்புகிறேன். வெளிநாட்டுத் தொழில்களுடன் போட்டிபோடும் வகையில் நம் நாட்டுப் பழத்தொழில் அபிவிருத்தியடையவேண்டும். நம் பழவகைகளைச் சிறந்த முறையில் பாதுகாப்பதற்கான வழிகள்பற்றி நம் விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகள்

நடத்தவேண்டும். இந்தத் துறைகளில் இந்தியப் பிரஜைகளுக்கும், பிரஜைகளல்லாதவர்களுக்கு மிடையில் பாரபக்ஷம் காட்டலாம். தேச நலனை முன்னிட்டு, பிரஜைகளல்லாதவர்களை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம்'. இப்படிச் செய்வதன்மூலம் நீங்கள் நாட்டை விற்கவில்லை யென்று மனப்பூர்வமாக நினைத்தால் அவர்களை எப்படி வேண்டுமானாலும் நடத்திக் கொள்ளலாம்.

தேங்காய் எண்ணெய் மீது வரி

1953 நவம்பர் 26-ம் தேதியன்று ஸ்ரீ எச். டி. ராஜா பின் வருமாறு பேசினர் :

ஐயா, என் நண்பர் மந்திரி டாக்டர் தேஷ்முக் கொண்டு வந்துள்ள மசோதா மிகவும் விரும்பத் தகாத தாகும். முதலாவதாக, பல வருஷங்களாக இருந்துவரும் தேங்காய்க் கமிட்டி தன்னைப்பற்றிச் சரியாக ஒன்றும் தெரிவிக்கவில்லை. இரண்டாவதாக. 10 தொழிலாளர்கள் அல்லது அதற்கும் குறைவாக நியமித்துக் கொண்டிருப் பவர்கள் விஷயத்திலும் தொழிற்சாலைச் சட்டத்தைப் பிரயோகிக்க இம்மசோதா விரும்புவதாக இதன் நோக்கங் களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சிறு முதலாளிகளை இந்த மசோதாவின் கீழ்க் கொண்டுவந்து அவர்களுக்கும் வரி விதிப்பதுதான் இந்த மசோதாவின் நோக்கம், நம் நாட்டில் தேங்காய் உற்பத்தித் தொழில் மிகவும் புராதன மானது. திருவாங்கூர், கொச்சி, சென்னை அடுத்தபடி யாக மைசூர் ஆகிய ராஜ்யங்களில் இது முக்கியஸ்தானம் வகிக்கிறது. கடற்கரையோரப் பிரதேசம் முழுமையிலும் இது பரவியிருக்கிறது. கடற்கரை ஓரத்தில் சுமார் 200 அல்லது 300 மைல்வரை எண்ணெய் எடுப்பவர்கள் வாழ் கின்றனர். இத்தொழில் ஒரு சிறிய குடிசைத் தொழி லாகக் கருதப்படுகிறது. டாடா எண்ணெய்-மில்போன்ற பெரிய மில்களில் உற்பத்தி அதிகமாகையால் அவற் றினல் இந்த வரியைக் கொடுக்கமுடியும். நம் நாட்டு தேங்காய் உற்பத்தியாளர்களுக்கு பாதகமான முறையில் இந்த முதலாளிகள் இலங்கையிலிருந்து உடைத்த தேங் காயைப் பெருத்த அளவில் இறக்குமதி செய்கின்றனர். மார்க்கெட்டில் பெரும் மந்த நிலைமை ஏற்பட்டிருக்கிற தென்பது உங்களுக்குத் தெரியும். தேங்காய்க்கு முன்பு கிடைத்த விலை இப்பொழுது கிடைப்பதில்லை. 5, 6, 7, 8, அல்லது 9 பேரை நியமித்துக்கொண்டிருக்கும் சிறு வர்த் தகர்களை நம் நண்பர் இப்பொழுது கொண்டுவரும் மசோதா பாதிக்கும்.

இது தேங்காய் எண்ணெய் உபயோகிப்பவர்களையும் எப்படி மறைமுகமாக பாதிக்குமென்பதை இப்பொழுது சொல்கிறேன். சோப் உற்பத்தி உள்படப் பல காரியங்களுக்குத் தேங்காயெண்ணெய் உபயோகிக்கப்படுறது. இது உள்நாட்டில் உபயோகிக்கப்படுவதுடன் பெரும் அளவு வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவர்கள் உற்பத்தி செய்யும் எண்ணெய்க்குச் சில பிரதேசங்களில் ஸ்திரமான மார்க்கெட் இருக்கிறது. இந்த சிறு கோஷ்டியினர்மீது வரி விதித்தால், அதைப் பொது மக்கள்மீது சுமத்த வேண்டுமென்றுதான் அவர்கள் இயற்கையாக நினைப்பார்கள். சிறு உற்பத்தியாளர்களின் லாபத்திலிருந்து இந்த வரித் தொகையை வாங்கமுடியுமென்பது சாத்தியமில்லை. நான் ஏற்கனவே வேறொரு விஷயத்தில் சொன்னதுபோல் கழுதை—சாமான் உபயோகிப்போர்—தான் பொதி சுமக்க வேண்டியிருக்கிறது. சாதாரண பிரஜைகளின்மீது சர்க்கார் திரும்பத் திரும்ப சுமையை ஏற்றுகிறார்களே தவிர எந்தவிதத்திலும் உதவி செய்வதில்லை. வரிச்சுமை தாங்காமல் தவிக்கும் சாதாரண மக்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று சர்க்கார் நினைத்திருந்தால் மந்திரி இத்தகைய மசோதாவைக் கொண்டு வந்திருக்க மாட்டாரென்பது நிச்சயம். இந்த வரியும் இதுபோன்ற இதர வரிகளும் பொதுமக்கள்மீது என்ன விளைவை ஏற்படுத்துமென்பதுபற்றி அவர்கள் சிந்திப்பது அபூர்வம். வங்காளத்தில் கடுகு எண்ணெய் ஏழைகளின் உணவாகப் பயன்படுவதுபோல் தேங்காய் எண்ணெய் சென்னை ராஜ்யத்திலும் குறிப்பாக மலபாரிலும் ஏழைகளின் உணவாகப் பயன்படுகிறது. இது மாத்திரமல்ல. தேங்காய் எண்ணெய் உபயோகித்தால் கூந்தல் நன்றாக வளருமென்று விஞ்ஞான ஆராய்ச்சிகள் நிரூபிக்கின்றன. தேங்காய் எண்ணெயை தண்டிப்பதற்கு முன்னால் அதன் விஞ்ஞான அம்சத்தைக் கவனிக்கவேண்டும். தேங்காய் எண்ணெய் உபயோகிக்கும் பெண்களை டாக்டர் பஞ்சாப் ராவ்தேஷ்முக் கண்டிக்க விரும்புகிறார். இந்த நிலைமைக்குத்தான் அவர் நம்மைக்கொண்டு வருகிறார். ஆகையால் இந்த மசோதாவுக்குக் கூறப்பட்டிருக்கும் முதல் காரணம் நாற்றமடிக்கிறது. தேங்காய்

எண்ணெயின் இனிமையான மணத்தை இது போக்கிவிட முயற்சிப்பதால் இதை உபயோகிக்க முடியாது.

இந்த வரியினால் உத்தியோகம் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகிறது என்பதைக் கவனிப்போம். விசையினால் இயங்கும் எல்லா மில்களையும் இதன் கீழ்க்கொண்டு வரத் தாங்கள் விரும்புவதாக சர்க்கார் கூறுகின்றனர். ஒரு மில்லுக்கு மின்சாரம் உபயோகிக்கப்பட்டு, அங்கு 4 அல்லது 5 பேர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தால் இந்த மசோதாவின் விஷமம் அங்கு ஆரம்பமாகிவிடும். மின்சாரம் உபயோகிக்கப்படாத ஒரு மில்லில் 100 பேர் வேலை செய்துகொண்டிருந்தால் அந்த மில்களின் சொந்தக்காரர்கள் தொழிற்சாலைச் சட்டத்தின் விஷமத்திற்கு ஆளாகிறார்கள். முதலாளிகள் அணிந்துள்ள துணியை இரண்டு விதத்திலும் துண்டிக்க சர்க்கார் விரும்புகின்றனர். சிறு முதலாளிகளுக்குச் சிறிது சலுகை காட்டுங்கள். உங்கள் சர்க்கார் பலம் பொருந்தியது. காங்கிரஸின் கொள்கைகளை நீங்கள் மறந்துவிட்டீர்கள். அந்தக் கிழவர் போய் விட்டார். ஆனால் மக்களுக்கு நீங்கள் செய்யவேண்டியது சிறிது இருக்கிறதென்பதை ஒரு நிமிஷமாவது ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள்.

ஸ்ரீ. ஸி. ஜி. கே. ரெட்டி (மைசூர்): கொஞ்சமா?

ஸ்ரீ. எச். டி. ராஜா: நீங்கள் கொண்டுவரும் மசோதாக்கள் சாதாரண மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்பதை ஞாபகப் படுத்திக்கொள்ளுங்கள். அவர்களுடைய ஒழுக்கம், மகிழ்ச்சி, பொருளாதாரச் செழிப்பு ஆகியவற்றிற்கு நீங்கள் தர்மகர்த்தாக்களென்பதை ஒருகணம் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் செய்வது நீண்டகால அடிப்படையுள்ளதாகவும், பணம் பறிக்கும் குறுகிய கால வேலையாக இல்லாமலும் இருக்க வேண்டுமென்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். சர்க்கார் கட்சியிலிருந்து வரும் எந்தத் திட்டமும் சாதாரண மக்களிடமிருந்து பணம் பறிப்பதாகவே இருக்கிறது. அவன் சட்டைப் பையில் எப்படிக் கையைப்போடுவது. சட்டைப் பையிலிருந்து எப்படி எதையாவது பறிப்பது?" என்

பவைதான் சர்க்கார் கட்சியிலிருந்துவரும் மசோதாக்களின் முக்கிய நோக்கங்களாக இருக்கின்றன.

இப்பொழுது இந்த ஏழைகளின் மென்னியில் ஏன் கை வைக்கின்றீர்கள்? இவர்களை விட்டுவிடுங்கள். 1944-ம் வருஷச் சட்டம் (தேங்காய் மசோதா) ரொம்பவும் புத்திசாலித்தனமானது. சிறு உற்பத்தியாளர்களுக்கு அது சிறிது நிவாரணம் அளித்தது. ஏகபோக உரிமை அளிக்க சர்க்காரால் முடியவில்லை. இது பரவலாக உள்ள தொழில். குடிசைத் தொழிலின் பயன்களைப் பெறுகிறது. ஒரு நல்ல சட்டத்தைக்கெடுத்து, நாற்றமடிக்கும் திருத்தம் ஒன்றை ஏன் கொண்டு வருகிறீர்கள்? முதல் திருத்தத்தின் கஷ்டம் இதுதான்.

இரண்டாவதாக, நம் நாட்டில் உற்பத்தியாகும் மற்ற பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டமே தேங்காய்த் தொழிலுக்கும் ஏற்பட்டிருக்கிறது. தேங்காயைத் தென் இந்தியர் உபயோகிக்கும் அளவுக்கு நம் வட இந்திய நண்பர்கள் உபயோகிக்கிறார்களா என்பது எனக்குத் தெரியாது. தென் இந்தியாவில் எந்த வீட்டுக்குப் போனாலும் தேங்காய்சேர்க்காத உணவு கிடைப்பது கஷ்டம். தேங்காய் உணவாக உபயோகப்படுவது மாத்திரமல்ல, ஒவ்வொரு ஸ்திரீயும் மாலையில் தேங்காயைக் கோயிலுக்கு எடுத்துச் சென்று ஸ்வாமிக்கு நைவேத்தியம் செய்து திரும்பிக் கொண்டு வருகின்றனர். இப்பொழுது பொருளாதார மந்தத்தினால் இந்தத் தேங்காய்க்கு பாதகம் ஏற்பட்டிருக்கிறது. இந்த வரியினால் கிடைக்கும் தொகையிலிருந்து தேங்காய் உற்பத்தியாளர்களுக்கு சர்க்கார் மான்யம் கொடுப்பார்களா? நம் நாட்டுத் தேங்காயின் மதிப்பு உயரும் பொருட்டு, இலங்கை முதலிய நாடுகளிலிருந்து தேங்காய் இறக்குமதி செய்யப்படுவதை சர்க்கார் தடை செய்வார்களா? என்று கேட்க விரும்புகிறேன். இதைச் செய்தால், நம் எண்ணெய் உற்பத்தியாளர்கள் உள் நாட்டுத் தேங்காயை வாங்குவார்கள். இதன் விளைவாக இத்தொழில் சுய பலத்தால் நிற்கும்.

ஆகையால் முதல் நோக்கத்தைப் பொறுத்த வரையில் தற்சமயம் இந்த வரியை விஸ்தரிப்பது சரியல்லவென்று சொல்லிவிட்டேன். இதன் விளைவு எப்படி இருக்குமென்பது எனக்குத் தெரியாது. இந்த மசோதாவை வாபஸ் பெறுமாறும், இதை ஏற்கும்படி சபையை வற்புறுத்துவதற்கு முன்னல் ஒரு முறைக்கு இருமுறையாக யோசிக்கும்படியும் என் சக்தி முழுமையையும் உபயோகித்து ஸ்ரீ. தேஷ்முக்கைக் கேட்டுக்கொள்கிறேன்.

தேங்காய் போர்டில் மேலும் 6 பேரை நியமிக்க இந்த மசோதா வசதி செய்கிறது. இந்த போர்டில் திருவாங்கூர், கொச்சி, சென்னை, மைசூர் ஆகிய சர்க்காரால் நியமிக்கப்படும் 3 அங்கத்தினர்களும், மக்கள் சபையால் தேர்ந்தெடுக்கப்படும் இரு மெம்பர்களும் ராஜாங்க சபையில் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு மெம்பரும் இருப்பார்கள். இந்தத் தொழிலின் எல்லா அம்சங்களையும் கவனிக்க இந்தக் கமிட்டிக்கு அதிகாரம் அளிக்கப்படவேண்டும். இது மாத்திரமன்று. காப்பு வரிக் கமிஷனைப்போல், முக்கியமான இந்தத் தொழிலின் பல்வேறு அம்சங்களையும் கவனித்து, இதன் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை எடுக்க இக்கமிட்டிக்குச் சுதந்திர அந்தஸ்து அளிக்கப்படவேண்டும். தென்னை மரம் கற்பக விருக்ஷமென்று கருதப்படுகிறது. கற்பக விருக்ஷமென்ருல் காமதேனு என்று பொருள். இந்த ஒரு மரத்திலிருந்தே உங்களுக்கு எல்லாம் கிடைக்கும். தென்னை மரத்தின் எந்தப் பாகமும் வீணுக்கப்படுவதில்லை. மலபாரில் ஒருவன் ஒரு சிறு நிலத்தில் 10 தென்னைமரங்கள் வைத்திருந்தால் அவன் மிகவும் சந்தோஷமாக வாழமுடியும். இந்த உணவுப் பஞ்ச காலத்தில் மரவள்ளிக் கிழங்குடன் உப உணவாக இதைச் சேர்த்து உபயோகிக்கலாம். தென் இந்தியாவில் மர வள்ளிக்கிழங்கும் தேங்காயும் சேர்த்தே உபயோகிக்கப்படுகின்றன. அவர்கள் அரிசியையும், பூச்சி அரித்த உங்கள் கோதுமையையும் மறந்துவிடலாம். கோதுமை சேமித்து வைக்கும் மத்திய சர்க்கார் கிடங்கு ஒன்றின் படத்தை நேற்று நான் பத்திரிகையில் பார்த்தேன். 2 மூட்டைகளைப் பிரித்துப் பார்த்தபோது அவற்றில்

கோடிக்கணக்கான புழுக்கள்தான் இருந்தனவேயன்றி கோதுமையே இல்லை. மந்திரி ஸ்ரீ. கர்மார்கார் தலையசைப் பதைக் காண்கிறேன். சர்க்கார் கிடங்குகளின் நிலைமையை அவர் உணர்ந்திருக்கிறார் என்பதுதான் இதன் அர்த்தம். ஆனால் தேங்காயில் அந்த மாதிரி நிலைமை ஏற்படுவதில்லை. உங்களுக்கு தாகம் எடுத்தால் ஒரு தென்னை மரத்தருகே சென்று ஒரு தேங்காயைப் பறித்து வெட்டி அதன் தண்ணீரைக் குடித்தால் ஆனந்தமாக இருக்கும். (ஒரு அங்கத்தினர் கள் கூடத்தான்) ஆகையால் இந்தத் தொழிலை அழித்துவிடாதீர்கள். இந்த வரியைக் கைவிட்டு, இத்தொழிலைப் பாதுகாக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இது புதிய இந்திய யூனியன், பாரதநாடு. இணைக்கப் பட்ட தேசம். இங்கு உற்பத்தியாகும் பொருள்கள் என்ன வென்பதை அனைவரும் அறிந்திருக்க வேண்டும். அன்று ஒருநாள் நான் நேந்திரங்காயைப்பற்றிக் குறிப் பிட்டபொழுது, அது இன்னதென்பதே இங்கு பலருக் குத் தெரியவில்லை. ஆஸ்ட்ரேலிய ஆப்பிளும் ஜாமும் இவர்களுக்குத் தெரியும். ஆனால் மலபார் நேந்திரங்கா யைப்பற்றித் தெரியாது. இந்த நிலையைக்கண்டு நான் வெட்கமும் வருத்தமும் அடைந்தேன். பசி எடுத்தால் ஒரு நேந்திரங்காயைச் சாப்பிடுங்கள். 24 மணி நேரமோ 48 மணி நேரமோ அது உங்கள் வயிரைக் காக் கும். அதே போன்றதுதான் இந்த இனிய தேங்காயும். மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவந்துள்ள சென்னை சர்க்கார் தென்னையிலிருந்து இனிய பதநீர் இறக்க அனு மதித்துள்ளனர். ஆகையால் இந்தத் தொழில் அழிந்து விடாமல் நீங்கள் பாதுகாக்கவேண்டும். இதற்கு வேண் டிய எல்லா வசதிகளையும் புதிதாக மாற்றியமைக்கப்பட்ட தென்னைக் கமிட்டி அளிக்கவேண்டும். இந்தக் கமிட்டியை சுதந்திரமான ஸ்தாபனமாக்கி, போதிய பணத்தையும் அளிக்கவேண்டும். சிறு உற்பத்தியாளர்களுக்கு வரி விதித்து இந்தப் பணத்தைக் கொடுக்கக்கூடாது. பொது நிதியிலிருந்து கொடுக்கவேண்டும். இந்தியா முழுமை யிலும் தென்னை நட்டால் இந்நாடு க்ஷேமமாக இருக்கும்.

சர்க்கரை மீது சுங்க வரி

ராஜாங்க சபையில் 1952 நவம்பர் 28-ம் தேதி யன்று சர்க்கரை சுங்கவரி மசோதாவை எதிர்த்து ஸ்ரீ. எச். டி. ராஜா பேசியதாவது:

ஐயா, நான் இந்த மசோதாவை எதிர்க்க விரும்புகிறேன். இந் நாட்டில் இத்தொழில் ஏமாற்றத்திற்கு உள்ளான தொழிலாகும். 1931- 32-ம் வருஷத்தில் 112 மில்கள் இத் தொழிலில் ஈடுபட்டிருந்த இந் நாட்டில் இப்பொழுது 139 மில்கள் இருக்கின்றனவென்பதற்கு என்னிடம் புள்ளி விவரங்கள் உள்ளன. அதாவது 27 மில்கள் அதிகரித்திருக்கின்றன. 1932-33-ம் வருஷத்தில் இந் நாட்டில் சுமார் 7 லக்ஷம் டன் சர்க்கரைதான் உற்பத்தியாயிற்று. 1950-51-ம் வருஷத்தில் சுமார் 17 லக்ஷம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யும் அளவுக்கு இந்தத் தொழில் அபிவிருத்தியடைந்திருக்கிறது. 112 மில்கள் ஈடுபட்டிருந்த இத் தொழிலில் 1950-51-ல் 139 ஆலைகள் ஈடுபட்டு 17 லக்ஷம் டன் சர்க்கரை உற்பத்தி செய்கின்றன. 27 மில்கள் அதிகரித்திருக்கின்றன. ஸ்ரீ. சுந்தரய்யா கூறியது சரியென்றால் இதில் ரூ. 3½ கோடி முதலீடு செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு குரல்:—அது 4 லக்ஷத்திற்குக் கூறப்பட்ட எண்ணிக்கை.

ஸ்ரீ. ராஜா:— நம் நிதி மந்திரி ஸ்ரீ. தியாகி 12 லக்ஷம் டன் என்று சொன்னார். 4½ லக்ஷம் டன்னை விட்டுவிட்டார். இங்கு 16½ லக்ஷம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டதாகவே இது பொருள்படும்.

ஸ்ரீ. பி. ஸி. கோஷ்:— சென்ற வருஷ மிச்சம் எவ்வளவு?

ஸ்ரீ. எச். டி. ராஜா.— அதை அவர் சொல்லவில்லை. 16 லக்ஷமாக இருந்தாலும், 14 லக்ஷமாக இருந்தாலும், வித்தியாசம் 2 லக்ஷம் என்று நான் ஒப்புக்கொள்ளத் தயார்.

ரெவினியூ மந்திரி ஸ்ரீ. மஹாவீர். தியாகி:— இந்த விஷயத்தை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். சென்ற வருஷ மிச்சம் 2 லக்ஷம் டன். இந்த வருஷ உற்பத்தி 15 லக்ஷம் டன். மொத்தம் 17 லக்ஷம் டன் ஆகிறது.

ஸ்ரீ. எச். டி. ராஜா:—மந்திரி கூறிய புள்ளி விவரங்களை நான் ஏற்று அந்த அடிப்படையில் மேல் கொண்டு பேசுகிறேன்.

இந்நாட்டில் கரும்பு சாகுபடி செய்யப்படும் நிலத்தின் அளவு 1932-33-ல் இருந்த 10 லக்ஷம் ஏகராவிலிருந்து இப்பொழுது 45 லக்ஷம் டன்னாக அதிகரித்திருக்கிறது. இத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இது கணிசமான அளவு லாபம் கொடுக்கவில்லையென்றால், மிகவும் தேவையாக உள்ள உணவுப் பொருள்களுக்குப்பதில் வர்த்தகப் பயிராகிய கரும்பு பயிரிடப்படுமென்று நீங்கள் நினைக்கிறீர்களா? உணவுப் பொருள்கள் இல்லாமல் நாம் மிகவும் கஷ்டப்படும் காலத்தில் சுமார் 35 லக்ஷம் ஏகர் நிலம் கரும்புப் பயிருக்கு மாற்றப்பட்டிருக்கிறது. ஒரு ஏகர் நிலத்தில் எவ்வளவு உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன? அதை 35 லக்ஷத்தால் பெருக்குங்கள். இந்த நிலங்களில் கரும்பு பயிரிடாமலிருந்தால் இந் நாட்டில் உணவுப் பஞ்சமே ஏற்பட்டிராது என்பது ஒரு க்ஷணத்தில் விளங்கும். ஆனால் குழப்பமான கொள்கையை அனுஷ்டிக்கும் நம் சர்க்காருக்கு இது புரியாது. நாட்டின் பொருளாதாரம் சம நிலையில் இருக்கும் வகையில் விஷயங்களை அமைக்க இவர்களால் முடியாது. கரும்பு பயிரிடப்படும் இந்த 35 லக்ஷம் ஏகர் நிலத்திலும் உணவு தானியங்கள் பயிரிட்டிருந்தால் நம் உணவுப் பஞ்சம் எப்பொழுதோ தீர்ந்து போயிராதா? நம் 36 கோடி மக்களின் பசியை ஆற்ற நாம் பிற நாடுகளிடம் மண்டியிட்டுக் கடன் கேட்கிறோம். கரும்பு பயிரிடப்படும் இந்த 35 லக்ஷம் ஏகர் நிலமும் நமக்குக் கணிசமான அளவு உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து கொடுத்திருக்க முடியும். இதைப்பற்றி ஒருவரும் யோசிக்கவே இல்லை. கடமையில் தவறியதாக நான் சர்க்கார் மீது குற்றம் சாட்டுகிறேன். அவர்கள் தங்கள் கொள்

கையை மாற்றிக் கொண்டு இந்த நிலத்தை மீண்டும் கட்டாயமாக உணவு உற்பத்திக்குக் கொண்டுவர வேண்டும்.

கரும்பு உற்பத்தியாளர்களுக்கு உயர்ந்த விகிதம் பணம் கிடைப்பதாக என் நண்பர் கனம் ஸாக்ஸேனு கூறினுர். வர்த்தகப் பொருள்களின் உற்பத்தியை சர்க்கார் ஆதரித்தனர். கரும்பின் விலையையும் அவர்கள் உயர்த்தியிருக்கவேண்டுமென்பது இயற்கை. அது 5 அணுவிலிருந்து ரூ 1-12-0 ஆக உயர்ந்தது கரும்பு உற்பத்தியில் 12 லக்ஷம் குடும்பங்கள் ஈடுபட்டிருக்கின்றன. கரும்பின் விலையை ரூ 1-12-0 லிருந்து ரூ. 1-5-0 ஆக்க் குறைப்பதால் இந்தக் குடும்பங்கள் 20 கோடி ரூபாயை இழக்கின்றன. சர்க்கரைத் தொழில் இந்த சல்லிக்காசாகிய 4 கோடி ரூபாயை விடமுடியாதா? சர்க்கார் ஒரு அந்தருக்கு ரூ 1 வீதம் சுங்கவரி விதித்து ரூ4 கோடி சேகரித்து அதை உத்திரப் பிரதேச தேசபக்தர்களிடம் சேர்க்கும் அளவுக்கு ஸிண்டிகேட்டுடன் தங்கள் ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டுமா?

இந்த 4 கோடி ரூபாய் எப்படிக் கணக்கிடப்படுகிறதென்பதை இனி கவனிப்போம். சர்க்கரைத் தொழிலுக்கு சர்க்கார் அனுமதித்துள்ள தொகையின் பாக்கியை, ரூ 1-6-0 வீதம் விதிக்கப்படும் சுங்க வரி சரிக்கட்டு மென்று சர்க்கார் கூறுகின்றனர். கவலையில்லை; அவர்கள் பணத்தைக் கொடுக்க விரும்புகின்றனர். நான் ஒரு விஷயம் தாழ்மையுடன் கேட்க விரும்புறேன். நம் கஷ்டத்தை அவர்களும் பகிர்ந்து கொள்ளக்கூடாதா? வாழ்க்கைச் செலவு மிகவும் அதிகமாக உள்ள நிலையில் உணவுப் பொருள்களை வாங்கக்கூட மக்களிடம் பணமில்லை. பசியால் வாடும் பல்லாயிரக்கணக்கான மக்களின் வாயை இனிக்கவைக்கப் பார்க்கிறீர்கள். மகா சங்கராந்தி ஒரு புண்ணிய தினம். அன்று தேங்காயுடன் கரும்பும் வைத்து ஸ்வாமிக்கு நைவேதனம் செய்யப்படுகிறது. தேங்காயும், கரும்பும் ஒன்ருக உபயோகிக்கப்படுகின்றன. தேங்காயை உடைத்து வெல்லத்தைக் கலந்து சாப்பிடுகின்றனர். இந்தக் கலவையைக் கொடுத்தால் குழந்தைகள்

மகா சந்தோஷமடைகின்றனர். இப்பொழுது நீங்கள் அவர்களை ஹிம்ஸிக்க விரும்புகிறீர்கள், அன்று தேங்காய் வரி மசோதா கொண்டு வந்தார்கள். ரொம்ப "சாதுவான" மசோதா! அதனால் சர்க்காருக்கு ரூ 3 லக்ஷம் கிடைக்கும். இப்பொழுது மற்றொரு சாதுவான மசோதா வருகிறது. ஒரு சிறிய மசோதா "தற்காலிக"மானது. சர்க்காரின் வரி விதிப்புக் கொள்கையில் தற்காலிகமானது என்பதே இல்லையென்று ஸ்ரீ. ஸேக்ஸேனா கூறியதை நான் பூரணமாக ஒப்புக்கொள்கிறேன். நம் சரித்திரத்தில் ஒரு முறை விதிக்கப்பட்ட வரி பின்னர் வாபஸ் பெறப்பட்டதேயில்லை. மக்கள் உணர்ச்சியைச் சமனப்படுத்த சர்க்கார் எந்த சமயத்திலும் ஒன்றும் செய்ததில்லை. எல்லா மாத்திரைகளும் சர்க்கரை பூசப்பட்டவைதான். அவை கொய்னாவைப்போல் கசக்கின்றன. நீங்கள் மலேரியாவால் கஷ்டப்படும் போது ஸ்ரீ. தியாகியிடம் சென்று, இவனைப் படுக்கையிலிருந்து எழுப்ப ஏதாவது செய்யுமாறு கேட்க வேண்டும். சர்க்கரைத் தொழில் 20 வருஷமாக நல்ல லாபம் அடித்து வந்திருக்கிறது. மக்களிடமிருந்து கிடைத்த பணத்தைக் கொண்டு இயந்திரங்களை யெல்லாம் புதுப்பித்தனர். தாங்கள் முதலீடு செய்தது போல் 3 மடங்கு லாபம் சம்பாதித்துவிட்டனர்.

நான் சர்க்காரை தாஜாபண்ணி, அதில் ஒரு பகுதியை உங்களுக்குக் கொடுக்குமாறு கேட்கிறேன். சட்டத்தின் பெயரால், உடலிலிருந்து ஒரு ராத்தல் மாமிசம் கேட்கும் யூதராக இருக்க வேண்டாமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். கொஞ்சமும் குறையாமல் ரூ 4 கோடி வேண்டுமென்று சொல்லக்கூடாது. சொன்னால் "இல்லை" என்று நீங்கள் பதிலளிக்கவேண்டும். இல்லையானால் ஒரு போர்ஷியா வந்து யூதனைக் கிழிப்பாள். அவனுக்கு 4 கோடி ரூபாயல்ல, நாலணாக்கூடக் கிடைக்காது. அதுதான் ஏற்படும். மக்களின் கஷ்டத்தைக் குறைக்கத்தான் நீங்கள் முயற்சிக்க வேண்டும். மக்கள்மீது மேலும் சுமை ஏறாமல் பாரத்துக்கொள்ள வேண்டும்.

சக்காரைத் தொழிலின் உற்பத்தி சக்திபற்றி இது வரை சொன்னேன். மற்ற நாடுகளில் நிலவும் சர்க்கரை விலையைப்பற்றி இப்பொழுது குறிப்பிட விரும்புகிறேன். எல்லாப் பொருள்களும், மற்ற நாடுகளில் விற்கப்படுவது போல் 4 மடங்கு விலையில் இங்கு விற்கப்படும் விசித்திர நிலைமையின் காரணம்தான் என்ன? நெருக்கடியின் உச்சிக்கு நம்மைத் தூக்கிச்சென்று பின்னர் கீழே தள்ளும் பொருளாதார தத்துவம் எது? நம் மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு இரண்டுவாய் சாப்பாடுபோட்டு, துணி உடுத்து, அவர்களைச் சந்தோஷப்படுத்த நம் பொருளாதாரம் ஸ்திரமடையும்படி எப்படிச் செய்யப்போகிறோம்? சர்க்கரைவிலை கியூபா, அர்ஜண்டினு முதலிய நாடுகளில் இருப்பதைப்போல் இங்கு $1\frac{1}{2}$ மடங்கு அதிகமாக இருக்கிறது. ஆமாம், உங்கள் சர்க்கார் க்ஷேமநல சர்க்கார் தான்! இதை நரகத்தீ கொழுந்துவிடும் சர்க்காராக்கி விடாதீர்கள்; க்ஷேமநல சர்க்காராகவே வைத்திருங்கள். உங்கள் ஸ்தானத்தைக் கம்யூனிஸ்டுகள் ஆக்கிரமித்துக் கொள்ளககாலி செய்துவிட்டு விடாதீர்கள். மக்கள் நலனை மனத்திலே கொண்டு ஆட்சி நடத்துங்கள். நீங்கள்தான் ஆட்சிபுரிய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். நன்ருகவும் பகுத்தறிவுடனும் ஆட்சியை நடத்துங்கள். கஷ்டப்படும் மக்களுக்கு நிவாரணமளியுங்கள். வரிகளை மாத்திரம் ஒவ்வொன்ருகக் கொண்டுவந்து கொண்டிராதீர்கள். மக்களுக்கு நன்மை பயக்கும் சட்டங்களையும் கொண்டு வாருங்க்ள். என் நண்பர் கனம் தியாகி வற்புறுத்தும் இந்த மசோதா என்ன? தியாகி என்ற பதத்திற்குத் தியாகம் செய்தவர் என்று அர்த்தம். இப்பொழுது மக்கள் நலனுக்காகச் சிறிது தியாகம் செய்யுமாறு ஸ்ரீ. தியாகியைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீ. தியாகி மற்ரெரு சபையில் பேசுகையில், தாமும் கரும்பு பயிரிடுவதாகவும், $2\frac{1}{2}$ ஏகர் நிலத்தில்தாம் கரும்பு பயிரிட்டிருப்பதாகவும், கரும்புக்கு மில்காரர்களிடமிருந்து இன்னமும் பணம் வரவில்லையென்றும் சொன்னுர். அவர் தியாகியே என்று நான் சொல்கிறேன். ஆனுல் அவரால் சமாளிக்கமுடியும். முதலாளிகளுக்கு தயை பிறக்கும்

வரை அவரால் வைத்திருக்க முடியும். கைக்கும் வாய்க்கு மாக வாழ்க்கை நடத்திவரும் ஏழைகள் என்ன செய்வார்கள். 25 சதவிகிதமும் 35 சதவிகிதமும் வட்டி கொடுத்து மார்வாடிகளிடமும் லேவாதேவிக் காரர்களிடமும் கடன் வாங்கியிருக்கும் ஏழைக் குடியானவர்கள் என்ன செய்வார்கள்? அவர்களுக்கெல்லாம் இந்தத் தொழில் குபேரர்கள் பணம் கொடுப்பதில்லை. கரும்பை சப்ளைசெய்த விவசாயிகளுக்கு சுமார் ரூ. $1\frac{1}{2}$ கோடி முதல் ரூ. 2 கோடிவரை முதலாளிகள் கொடுக்கவேண்டி யிருக்கிறது. சுமார் 10 லக்ஷம் விவசாயிகள் கரும்பை முதலாளிகளிடம் கொடுத்துவிட்டு இன்னமும் பணம் வாங்கிக் கொள்ளாமல் இருக்கின்றனர்.

இந்த நிலைமையில் ஸ்ரீ. தியாகியிடமிருந்து நான் சிறிது நிவாரணம் எதிர்பார்க்கக்கூடாதா? முதலாளிகள் சிக்கிரம் பணத்தைக் கொடுக்க அவர் தம் செல்வாக்கை உபயோகிக்கக் கூடாதா?

நான் வேறொருவழி சொல்ல விரும்புகிறேன். இந்த வரியை வாபஸ் பெற்றுக்கொண்டு, முதலாளிகளை அழைத்து இப்படிச் சொல்லுங்கள்: "உங்களிடம் சில ஒப்பந்தப் பொறுப்புக்கள் இருக்கின்றன; அவற்றைக் கௌரவிக்க நாங்கள் முயற்சிக்கிறோம்; ஒரு காரியம் செய்யுங்கள், யூதர்களாக இராதீர்கள்; நாம் சமரசம் செய்து கொள்வோம். மக்களின் பொருள்வாங்கும் சக்தி மிகவும் குறைந்துவிட்டது. நீங்கள் கேட்கும் அளவு பணம் கொடுக்க அவர்களால் முடியாது. ஏதாவது ஒருவித மத்தியஸ்தத்திற்கு வாருங்கள். ஒரு ஏற்பாடு செய்துகொள்வோம். பணத்தைப் பொது வருமானத்திலிருந்து நாங்கள் கொடுக்கிறோம். ஆனால் நீங்கள் கேட்பதில் பாதிதான் கொடுப்போம்" என்று முதலாளியிடம் அறிவியுங்கள். ஸ்ரீ. தியாகி அவர்களே, நீங்கள் இதைச் செய்தால் உங்கள் தியாகம் பூர்த்தியாகிவிடும். இதற்காக உங்களுக்கு நான் நன்றி செலுத்துவேன். தேசம் முழுதுமே நன்றி செலுத்தும்.

சர்க்கரை சுங்கவரி மசோதாவுக்கு திருத்தம்

1952, நவம்பர் *25*-ம் தேதி ஸ்ரீ. எச். டி. ராஜா. சர்க்கரை மசோதாவுக்கு கீழ்க்கண்ட திருத்தத்தைப் பிரேரித்தார்.

“முதல் பக்கம் *24*, *25*-வது வரிகளில் ‘*1* ரூபாய் *6* அணு’ என்ற வார்த்தைகளை எடுத்து விட்டு ‘*8* அணு’ என்ற வார்த்தைகளைச் சேர்த்துக் கொள்ளவும் என்ற திருத்தத்தைப் பிரேரித்து ஸ்ரீ. ராஜா பேசியதாவது:

இந்தத் திருத்தம் சம்பந்தமாக நான் இந்த சபையின் நேரத்தை அதிகம் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. நம் பொக்கிஷ மந்திரி ஸ்ரீ. தியாகி நிகழ்த்திய தூய்மையான பிரசங்கத்தை மிகவும் சிரத்தையுடன் கேட்டேன். நான் என் பிரசங்கத்தில் எழுப்பிய பிரச்னைகளில் ஒன்றுக்காவது அவர் பதிலளிக்க் வில்லை. முதலாளிகளின் லாபத்தை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்ற பிரச்னை இருக்கிறது. முதலாளிகளுக்குப் பிரதம தத்துவம் வகிக்கும் சபையின் இந்தப் பக்கத்திற்கும் (இடது பக்கம்) ஸ்ரீ. தியாகி கைவிட்ட தொழிலாளர்களுக்குப் பிரதி நிதித்துவம் வகிக்கும் அந்தப் பக்கத்திற்கும் (எதிர்க்கட்சிப் பக்கம்) இடையில் தகராறு இருக்கிறது. ஸ்ரீ. தியாகியின் கூற்றுப்படி கம்யூனிஸ்டுகள் தொழிலாளருக்குப் பிரதி நிதித்துவம் வகிக்கவில்லை. சர்க்கார் நடு நிலைமை வகிக்க வேண்டுமென்று நான் கூறுகிறேன். சர்க்கார் மற்றவர்களைக் கைவிட்டு, முதலாளிகளுடன் பூரணமாக ஐக்கியமாகி விடக்கூடாது.

நான் இந்த சபையின் முன் சமர்ப்பிக்கும் மத்தியஸ்தர ஏற்பாடு இதுதான். முதலாளிகள் கீழே இறங்கிவர அவர்களை சர்க்கார் தாஜா பண்ணவேண்டுமென்று சொன்னேன். லாபம் முதலாளிகளுக்கும், தொழிலாளருக்கும்

இடையில் எப்படிப் பங்கிட்டுக்கொள்ளப்படுகிறதென்பது பற்றி எனக்குக் கவலையில்லை. சம்பந்தப்பட்டவர்கள் பங்கிட்டுக்கொள்ளும் சொந்த விஷயம் இது. ஆனால் பொருள் வாங்கி உபயோகிக்கும் பொது ஜனங்களின் கதி என்ன? அந்தக் கண்ணோட்டத்துடன்தான் நான் இப்பிரச்னையைப் பார்த்து திருத்தம் கொண்டு வந்திருக்கிறேன். என் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதால் உங்களுக்கு ஒரு கஷ்டமும் இல்லை. இந்த ஆலைகள் உற்பத்தி செய்யும் சர்க்கரையின் விலையை 8 அணா வீதம் உயர்த்தினால்

நிதி இலாகா உதவி மந்திரி ஸ்ரீ. எம். ஸி. ஷா: இதை எவ்வளவு காலம் நீடிப்பது?

உபதலைவர்-ஒழுங்கு, ஒழுங்கு.

ஸ்ரீ. எச். டி. ராஜா:—நஷ்டத்தில் பாதியைத் திரும்பப்பெறும் வரை 8 அணா வீதம் வரி விதிக்கவோ, விலையை உயர்த்தவோ செய்யலாம். இந்தத் திருத்தத்தின் முக்கிய நோக்கமே அதுதான் ஆகையால் இது சிறந்த மத்தியஸ்த ஏற்பாடு. விலைவாசிச் சுமையினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு இது சிறிது நிவாரணமளிக்கும்.

பொருள் உற்பத்தி செய்பவர்கள் ஒவ்வொருவரும், உபயோகிப்போருமாவர் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். நம் மக்களில் 100-க்கு 100 பொருள் உபயோகிப்பவர்களே. இந்த வார்த்தைகளுடன் முடித்துக் கொண்டு இத்திருத்தத்தை ஏற்குமாறு ஸ்ரீ. தியாகியைக் கேட்டுக்கொள்கிறேன்.

புயல் நிவாரணத்திற்கு ஒருநாள் சம்பளம்

1952 நவம்பர் 27-ம் தேதி ஸ்ரீ. எச். டி. ராஜா கூறியதாவது:

ஐயா, சமீபத்தில் ஒரு கோரப்புயல் உருவில் ஒரு பெரிய கஷ்டம் தமிழ் நாட்டைச் சூழ்ந்தது. சபையில் சர்க்கார் கட்சித் தலைவர் அன்று சில தகவல்களை வெளியிட்டார். அதன் பிறகு சோகமூட்டும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. சுமார் 500 பேர் மரணடனர். ரூ. 100 கோடி மதிப்புள்ள பொருள்கள் சேதமாயின. புயல் நிவாரணத்திற்காக சென்னை கவர்னர் ஒரு நிதி ஆரம்பித்திருக்கிறார். அங்கு கஷ்டப்படும் மக்களிடம் நமக்குள்ள அனுதாபத்தின் அறிகுறியாக இங்கும் ஒரு நிதி திரட்டலாமென்றும், அதற்கு நம் ஆதரவின் சின்னமாக நம்முடைய ஒருநாள் கூலியை அதற்குக் கொடுக்கலாமென்னும் நான் யோசனைகூற விரும்புகிறேன்.

ஸ்ரீ. ஸி. ஜி. கே. ரெட்டி:—கூலியையா?

ஸ்ரீ. எச். டி. ராஜா:—ஆமாம். நாமெல்லாம் தொழிலாளர்களே! ஆகையால், கூலி என்கிறேன். நம்முடைய ஒருநாள் கூலியை நிதியில் சேர்த்து சென்னை கவர்னருக்கு அனுப்புவோம். இது என் தாழ்மையான யோசனை. இதை ஏற்று, கஷ்டப்படும் மக்களுக்குச் சிறிது நிவாரணமளிப்பீர்களென்று நம்புகிறேன்.

கைத்தொழில் மூலதன கார்ப்பரேஷன்

கைத்தொழில் மூலதனக் கார்ப்பரேஷன் பற்றி ஸ்ரீ. எச். டி. ராஜா பேசியதாவது:

இந்த கைத்தொழில் மூலதனக் கார்ப்பரேஷன் சர்க்காருக்குப் பெருந் தலைவலி அளித்திருக்கிறது. கடனுக்கு, சர்வதேச பாங்குக்கு உத்தரவாதம் அளிக்கவே இந்த திருத்தம் கொண்டுவரப் படுவதாக மசோதாவின் நோக்கங்கள் கூறுகின்றன. "திருத்தம் அனுமதி யளிக்கும் ரீதியிலேயே இருக்குமேயன்றி, எல்லா வெளிநாட்டுக் கடன்களுக்கும் உத்திரவாதமளிக்க சர்க்காருக்குக் கட்டளை யிடுவதாக இராது" என்றும் மசோதாவின் நோக்கங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

நீங்கள் தாக்கத் தயாராயிருக்கிறீர்கள்: ஆனால் காயப்படுத்தப் பயப்படுகிறீர்கள். கைத்தொழில் மூலதனக் கார்ப்பரேஷன் வெளிநாட்டு ஸ்தாபனங்களிடமிருந்து வாங்கும் இந்தக் கடனுக்கு நீங்கள் உத்தரவாதமளிப்பதென்றால் உங்களுடைய திட்டமான வாக்குறுதியின் பேரிலேயே அது கொடுக்கப்படும். சில கடன்களுக்கு நம்மால் உத்தரவாத மளிக்கப் படுமென்றும் மற்றும் சில கடன்களுக்கு உத்திரவாத மளிக்க்ப்படாதென்றும் சொல்கிறீர்கள். வாக்குறுதி பூரணமானது. சர்க்காரின் உறுதிமொழி இந் நாட்டு மக்களின் உறுதிமொழியே யாகும். ஆகையால், இந்தப் பணத்தை எப்படி வினியோகிக்கிறீர்கள், எப்படி உபயோகிக்கிறீர்கள் என்பவற்றை யெல்லாம் மக்கள் அறிந்திருக்க வேண்டுமென்று எதிர் பார்க்கப் படுகின்றனர். யாருக்கெல்லாம் கடன் கொடுக்கப்பட் டிருக்கிறதென்பதை நீங்கள் வெளியிடாவிட்டால் சந்தேகத்திற்கு இடமேற்படுகிறது. ஸீஸரின் மனைவியைப்போல் நீங்கள் சந்தேகத்திற கிடமின்றி

நடந்துகொள்ள வேண்டும். நாடு முழுமையையும் உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திர மாக்கிக்கொண்டால் உங்களிட மிருந்து அல்லது கைத்தொழில் பொருளாதாரக் கார்ப்ப ரேஷனிடமிருந்து பணம் கடன்வாங்கி யிருப்பவர்களின் பெயர்களை வெளியிடுவதில் தவறெதுவுமில்லை. ஆகையால் உங்கள் கஷ்டம் என்ன? நீங்கள் திட்டமான தகவலைக் கொடுத்து எதிரிகளை முற்றிலும் நிராயுதபாணிகளாக்கி விடலாம்.

கடன்வாங்கி யிருப்பவர்களின் ஜாபிதாவைப் பிர சுரித்தால், எதிர்க்கட்சித் தாக்குதலின் வேகம் பெரிதும் குறைந்துவிடும.

இரண்டாவது விஷயம் சட்டத்தையே பற்றியது. விதிகள் இயற்றுவதற்கான மத்திய சர்க்காரின் அதிகா ரத்தை அசல் சட்டத்தின் 42-வது ஷரத்து திட்டமாக எடுத்துக் கூறுகிறது. சர்க்காரின் அதிகாரங்களை யெல் லாம் கைத்தொழில் பொருளாதார கார்ப்பரேஷன் எடுத் துக் கொள்ளமுடியாது. விதிகள் இயற்றும் அதிகாரம் சர்க்காருக்கு இயல்பாகவே இருக்கிறது. நடை முறை விதிகளை (ரெகுலேஷன்) இயற்றும் அதிகாரமென்று நீங் கள் சொல்வது கார்ப்பரேஷனிடம் இருக்கிறது. தன் சொந்த நடவடிக்கைகளை நடத்திக் கொள்வதற்கு வேண் டிய விதிகளை வகுத்துக்கொள்ள அதற்கு அதிகாரம் அளிக்கப்பட் டிருக்கிறது. சர்க்கார் இயற்றும் விதிக ளுக்கு இவை சமமானது. கைத்தொழில் பொருளாதார உதவிக் கார்ப்பரேஷன் அனுஷ்டிப்பதற்கான விதிகளை சர்க்கார் இயற்றவேண்டும். ஆனால் நீங்கள் அந்த வேலை யைத் துறந்துவிட்டீர்கள். இதைக் கார்ப்பரேஷனுக்கே கொடுத்துவிட்டீர்கள். கார்ப்பரேஷன் தனக்குத்தானே சட்டமாகும்படி விட்டுவிட்டீர்கள். இது மிகவும் ஆக்ஷே பத்திற்கு இடமானது.

கைத்தொழில் பொருளாதார உதவிக் கார்ப்பரேஷன் யார் யாருக்குக் கடன் கொடுத்திருக்கிறதென்பது அடுத்த கேள்வி. சிறிய தொழில்களுக்கு உதவி அளிக்

கப்பட வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா? பெரிய தொழில்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறீர்களா? கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் குழந்தைப் பருவத்தில் உள்ள தொழில்களுக்கு உதவி செய்வதென்றால் கடன் கொடுக்கும் தொகையின் அளவை 50 லக்ஷம் ரூபாயாகக் கூட நிர்ணயிக்கவேண்டும். என் கம்யூனிஸ்ட் நண்பர் ஸ்ரீ. சுந்தரய்யா சொன்னதுபோல் 25 லக்ஷம் ரூபாயாக நிர்ணயித்தால் போதும். கடன் தொகையை இந்தியா முழுமையிலும் சமமாகவும் நியாயமாகவும் வினியோகித்து, அது சரியானபடி உபயோகப்படுமாறு பார்த்துக்கொள்வதென்றால், நீங்கள் பெரிய முதலாளிகளுக்கு மாத்திரம் உதவி செய்வதாகக் குற்றம் சாட்ட இடமிராது. இது பொக்கிஷ மந்திரி ஆலோசிக்க வேண்டிய விஷயம்.

கைத்தொழில் பொருளாதார உதவிக்கார்ப்பரேஷன் இதுவரை மொத்தம் $7\frac{1}{2}$ கோடி ரூபாய் முதலீடு செய்திருக்கிறது. இந்தக் கடனெல்லாம் பத்திரமாயிருப்பதாகச் சர்க்கார் நம்புகின்றனரா என்று நான் நிதி மந்திரியைக் கேட்க விரும்புகிறேன். இதில் ஒரு பைசாக்கூடத் திரும்பி வராத கடனுக்க் கருதப்படாதென்று நிதி மந்திரியோ அல்லது கைத்தொழில் பொருளாதார உதவிக் கார்ப்பரேஷனே சொல்லுவார்களா? நீங்க்ள் இந்த உறுதி மொழியை அளித்தால் நாங்கள் அனைவரும் உங்களை ஆதரிக்கிறோம். கொடுத்த கடன்களில் கோளாறு ஒன்றுமில்லை என்றும், கடன் வாங்கிக்கொண்டவர்களின் பெயர்களை அறிவிப்பதுபற்றி ஆலோசித்து வருகின்றீர்களென்பதையும், பணம் பத்திரமாக இருக்கிறதென்பதையும், ஒவ்வொரு பைஸாயும் திரும்பிவந்து விடுமென்றும் நீங்கள் சொல்ல முடியுமானால் எதிர்க் கட்சியினருக்கு ஒரு விதமான திருப்தி ஏற்படும்.

கார்ப்பரேஷனின் கடன்களுக்கெல்லாம் சர்க்கார் உத்தரவாத மளித்திருக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட அளவு டிவிடெண்டு கொடுக்க வாக்குறுதி யளித்திருக்

கிறீர்கள். $42\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய் வருமானத்தில் 18 லக்ஷம் ரூபாயை வட்டியாகக் கொடுத்துவிட்டீர்கள். வட்டி விகிதம் அதிகரித்துக்கொண்டு போகிறதென்று நினைக்கிறேன். சர்வதேச பாங்கே வட்டி விகிதத்தை 4 சத விகிதத்திலிருந்து $4\frac{1}{2}$ சத விகிதமாக உயர்த்தியிருக்கிறது. நீங்களும் வட்டி விகிதத்தை $5\frac{1}{2}$ சத விகிதத்திலிருந்து 6 சத விகிதமாக உயர்த்தலாம். இதை நீங்கள் செய்தால் கம்யூனிஸ்ட்டுகளின் வாதத்தின் விஷம் போய்விடும். மேற்கொண்டு அரை சதவிகித வட்டி வாங்குங்கள். முதலாளிகளால் இதைக் கொடுக்கமுடியும். டிவிடெண்டு கொடுப்பதற்காகப் பெரிதும் பணத்திலிருந்து எடுக்கவேண்டிய அவசியம் இராது.

"பிக்ஸெட் டெபாஸிட்" விஷயத்தில் கைத்தொழில் பொருளாதார உதவிக் கார்ப்பரேஷன் சட்டத்தில் ஒரு ஷரத்து இருக்கிறது. கார்ப்பரேஷன் "பிக்ஸெட் டெபாஸிட்டுகள்" வாங்க ஊக்கமளியுங்கள். வட்டிக்கும் கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கும் நீங்கள் உத்தரவாத மளித்திருக்கிறீர்கள். இது சர்க்கார் உத்தரவாதம் பெற்ற முதலீடாகிறது. இந்தத் துறையில் முயற்சி செய்தால் அதிகப் பணம் கிடைக்கும். ஒரு கம்பெனிக்குக் கொடுக்கும் உயர்ந்த பக்ஷத் தொகையை 25 லக்ஷம் என்று நிர்ணயிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க் கட்சிக்கு சர்க்கார் செவிசாய்க்க வேண்டும். எதிர்க் கட்சியினர் கூறும் நல்ல யோசனைகளை சர்க்கார் ஏற்ருல், எதிர்க் கட்சியினரிடையே காணப்படும் மனக் கசப்பு இராது. முன் நடப்புக்களைப் புறக்கணித்து, கண்டனங்களை வெறுத்து குறைகளை இழிவாக மதித்தால் உதவியற்றவர்களிடமிருந்து கொடுமை தோன்றுகிறது. எந்த நாட்டிலும் உள்ள நல்லவர்கள் இதை எதிர்க்கின்றனர். நம் சர்க்கார் அந்த கோஷ்டியில் சேராமல் எதிர்க் கட்சியினரின் கஷ்டங்களைத் தீர்த்து அறிவு பெறுவார்களென்று நம்புகிறேன்.

இந்த சர்க்கார் கொள்ளைக்கார சர்க்காரென்று ஸ்ரீ. சுந்தரய்யா முன் ஒருநாள் சொன்னார். அது எனக்குத் தெரியாது. ஆனால் இந்நாட்டு மக்கள் கொள்ளைக்கார சர்க்காரையும் விரும்பவில்லை. காலிகள் சர்க்காரையும் விரும்பவில்லை என்பது நிச்சயம்.

ரஷ்யாவுடன் பரஸ்பரத்துவம் கூடாது

1952 நவம்பர் 15-ம் தேதி ஸ்ரீ. எச். டி. ராஜா கூறியதாவது:

சட்ட மந்திரியிடமிருந்து நான் ஒரு விஷயத்தைப் பற்றித் தகவல் அறிய விரும்புகிறேன். ஸ்ரீ. குப்தா கூறியதுபோல் சோவியத் ரஷியா இந்த மசோதாவுக்குள் வரவில்லை. இந்த நாட்டு டிக்ரி ஒன்றை ரஷியாவில் நிறைவேற்றும்படியான சொத்து எதுவும் ரஷியாவில் இல்லை. ஆனால் இந்தியாவில் (சமூக அமைப்பு) சொந்த சொத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் ரஷியாவில் பிறப்பிக்கப்படும் டிக்ரியை இங்கு நிறைவேற்ற முடியும். ஆகையால் ரஷியாவுடன் பரஸ்பர நடவடிக்கைப் பிரச்னை எழவில்லை.

உபதலைவர்: இது பணம் சம்பந்தமான டிக்ரிகளைத் தான் குறிக்கிறது. சொத்து சம்பந்தமான பிரச்னை இல்லை.

ஸ்ரீ. எச். டி. ராஜா: பணம் இருக்கிறது. அதுவும் ஒரு சொத்துதான். இதென்ன? பணம் ஒருவிதமான சொத்துதான்.

உணவுக் கொள்கையின் முரண்பாடுகள்

1952, டிசம்பர் 12-ந் தேதி நடந்த உணவு விவாதத்தில் ஸ்ரீ. எச். டி. ராஜா பேசுகையில் கூறியதாவது

புள்ளி விவரங்களெல்லாம் தவறென்ற உண்மையை வெளியிட்டதற்காக, அளவில் என் சகோதரரான கனம் கித்வாய்க்கு நான் உண்மையில் நன்றி செலுத்துகிறேன். துண்டாடப்படுவதற்கு முன் இருந்த இந்தியாவில் 16 கோடியே 71 லக்ஷம் ஏகர் நிலம் இருந்தது. இதில் 4 கோடியே 60 லக்ஷம் டன் உணவுப் பொருள்கள் உற்பத்தியாயின. பாகிஸ்தான் பிரிந்த பின் இதில் 60 சதவிகிதம் இந்தியாவுக்குக் கிடைத்தது. ஆகையால் ஆரம்பத்தில் நமக்கு $11\frac{1}{2}$ கோடி ஏகர் நிலம் கிடைத்தது. இதில் 3 கோடியே 20 லக்ஷம் டன் உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்ய முடியும். 1948ல் சாகுபடிக்கு லாயக்கான நிலத்தின் அளவு 18 கோடியே 60 லக்ஷமாக உயர்ந்தது. இதில் 4 கோடியே 37 லக்ஷம் டன் உணவுப் பொருள் உற்பத்தியாயிற்று. 1951-ல் நிலத்தின் அளவு 19 கோடியே 30 லக்ஷம் ஏகராயிற்று. கோதுமை முதலிய உணவுப் பொருள்களின் உற்பத்தி 4 கோடியே 17 லக்ஷம் டன்னாயிற்று. ஒரு பருவத்தில் ஒரு ஏகர் நிலத்தில் சுமார் 500 படி நெல் அல்லது கோதுமை உற்பத்தியாவதாக வைத்துக்கொண்டால் கூட ஒரு ஏகருக்கு சுமார் $\frac{1}{2}$ டன் தானியம் உற்பத்தியாக வேண்டும். ராஜ்யங்களில் உற்பத்தியைக் குறைத்து மதிப்பிடும் மனப்பான்மை இருப்பதாக உணவு உற்பத்திப் பெருக்குக்கமிட்டி அறிவித்துள்ளது. நிலத்திலிருந்து ஒவ்வொரு விவசாயிக்கும் எவ்வளவு மாசூல் கிடைக்கிறதென்பது ஒரு விவசாயிக்கும் தெரியாது. கட்டுப்பாடும் கட்டாயக் கொள்முதலும் அமுலில் இருக்கும் போது இது நிச்சயமாகத் தெரியாது.

19 கோடியே 30 லட்சம் ஏகர் நிலத்தில் உணவு உற்பத்தியாவதாகவும் பருவ நிலை நன்ருக இருப்பதாகவும் வைத்துக்கொண்டு மேலே கவனிப்போம். (பருவ காலக் கோளாறுகளுக்கும் அது மதித்துத்தான் கணக்கிட்டிருக்கிறேன்) இந்த 19 கோடியே 30 லக்ஷம் டன் தானியம் உற்பத்தியாவதாக வைத்துக்கொள்வோம், நம் நாட்டின் ஜனத்தொகை 36 கோடி. உங்களுடைய 12 அவுன்ஸ் கணக்கின்படிப் பார்த்தால் சுமார் 4 கோடியே 30 லக்ஷம் டன்னுக்குச் சிறிது அதிகமாகத் தேவைப்படும்; இது கணக்கு. மரவள்ளி, கருணைக்கிழங்கு, தேங்காய் முதலிய இதர உணவுப் பொருள்கள் இல்லாமல் ஒரு நாளைக்கு 12 அவுன்ஸ் வீதம் 36 கோடி மக்களுக்குத் தேவைப்படுவது 4 கோடியே 30 லக்ஷம் டன். சர்க்கார் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின் படி இங்கு ஏற்கனவே 43 லக்ஷம் டன் உற்பத்தியாகிறது. ஒன்று புள்ளி விவரங்கள் சரியாக இருக்கவேண்டும்; அல்லது கித்வாய் தவருக இருக்கவேண்டும். இது முரணான அறிக்கையென்ருல் இவர்களுடைய உணவு இறக்குமதிக் கொள்கையை நாம் ஆராயவேண்டும்.

1948-ல் நாம் 8,67,000 அரிசியை ரூ. 50 கோடி விலையிலும், 1950ல் 3,53000 டன்னை ரூ. 19.93 கோடி செலவிலும், 1952-ல் 7,49,000 டன்னை ரூ 43.3 கோடி செலவிலும் இறக்குமதி செய்தோம். பல்வேறு வருஷங்களில் பல்வேறு அளவில் கோதுமையும் இறக்குமதி செய்தோம். உணவு இறக்குமதியில் மாத்திரம் இந்த நாடு ரூ 1250 கோடியை வீணுக்கி விட்டதாக பார்கவா கமிட்டி கண்ணீர் வடித்திருக்கிறது. ஸ்ரீ. பார்கவாவின் கணக்குப்படி இது ரூ 1250 கோடி ஆனுல் திட்டக் கமிஷனின் அறிக்கைப்படி இது ரூ 800 கோடியும் சில்லரையும். சர்க்கார் புள்ளி விவரப்படி இது ரூ 571.27 கோடி! இவற்றில் எதை நம்புவது, எதை நம்பாமல் விடுவதென்பது எனக்குத் தெரியவில்லை. 4 குருடர்கள் ஒரு யானையின் அளவைக் கணக்கிட்ட கதையாகத்தான் இருக்கிறது. நாம் 800 கோடி ரூபாய் செலவிட்டிருப்பதாக திட்டக் கமிஷன் கூறுகிறது. 571 கோடி ரூபாய் செலவிட்டிருப்பதாக சர்க்கார் புள்ளி

விவரங்கள் சொல்கின்றன; 125 கோடி செலவிட்டிருப்ப தாக பார்வா கமிட்டி கூறுகிறது. என் வீட்டை அடமா னம் வைத்து அந்தப் பணத்தைக் கொண்டு நான் சாப்பிடு வதாக வைத்துக் கொள்வோம். நான் எவ்வளவு நாள் சாப்பிடமுடியும்? என் குழந்தைகளின் கதி என்ன ஆகும்? என்ஞல் வளர்க்கப்படுகிறவர்களுக்கு இறுதியில் நான் எப்படிப் பொறுப்பாக இருப்பேன்? இந்த சர்க்காருக்கு சொந்தக் கொள்கை ஒன்றுமில்லை. யானையை வர்ணித்த குருடர்களைப் போன்றவர்களின் கொள்கையைப் பின் பற்றும் இந்த சர்க்காருக்கு திட்டமான கொள்கை எதுவுமில்லை இவர்கள்ஸாம் மாமாவுக்கு (அமெரிக்காவுக்கு) நம் நாட்டை அடகு வைத்து விட்டனர். இவர்கள் 25 லக்ஷம் டன் கோதுமை கடன் வாங்கி, ரூ 149 கோடி செலவிட்டிருக்கின் றனர். இருந்தும் இதில் பந்தம் எதுவுமில்லை யென்று கூறுகின்றனர். கடன் வாங்குபவன் யாராக இருந்தபோதி லும். கடன் கொடுப்பவனின் முன் கீழ்ப்பட்ட வகையே தோன்றுகிருன். அதனுல்தான் "கடன் கொடுப்பவனுக வும் இராதே வாங்பவனுகவும் இராதே" என்று ஒரு பழ மொழி இருக்கிறது. சரியான புள்ளி விவரம் இருந்திருந் தால் ஒருவன் தானியம் கூட இங்கு இறக்குமதி செய் திருக்க வேண்டியதில்லை. நாம் உயர்ந்து நின்றிருக்கமுடி யும். உங்கள் அசட்டுக்கட்டுப்பாடுகளிலும், அனுவசிய மான தலையீடுகளினுலும். கண்டவிதமான இடையூறுகளி னுலும் விவசாயிகளை நீங்கள் கொன்றது அடிப்படையான தவறு. நீங்களும் அழிந்து இந்த நாட்டையும் நாசத்தின் எல்லைக்குக் கொண்டுவந்து விட்டீர்கள். திட்டக் கமிஷ னின் திட்டங்களுக்கு 2000 கோடி ரூபாய் வேண்டுமென் கிறீர்கள். அதைப்பற்றி நான் இப்பொழுது பேச விரும்ப வில்லை. ஆனுல் உணவு இறக்குமதிக்கு மாத்திரம் 1350 கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறீர்கள் என்பதை எடுத் துக் காட்ட விரும்புகிறேன்.

இனி விலைவாசி அமைப்பைக் கவனிப்போம். சென் னையில் அரிசிவிலை மணங்குக்கு ரூ. 15-ஆக இருந்த போது. சையாமிலிருந்து ரூ. 22 வீதம் இறக்குமதி செய்

தீர்கள். நம்முடைய உத்தரப் பிரதேச "பய்யா"க்கள் மணங்கு ரூ. 25 விதம் கொடுத்து "உதவி" புரிந்தார்கள். இதன் விளைவாக சென்னை வாசிகளிடமிருந்து உத்தரப் பிரதேச "பய்யா"க்கள் 1 கோடியே 80 லக்ஷம் ரூபாயை விழுங்கினர். சென்னை சர்க்கார் அழுது பார்த்தனர்; ஊளையிட்டுப் பார்த்தனர்; கண்டித்தும் பார்த்தனர். ஆனால் டில்லி தேவதைகள் அவர்களை உதைத்துத் தள்ளினர். சென்னையில் என்றால் அரிசியின் விலையை மணங்குக்கு ரூ. 15 ஆகக் குறைத்து வைத்துக்கொண்டு, வெளியூர் அரிசிக்கு மணங்குக்கு ரூ. 25 வீதம் அதிகப்படியாக 1 கோடியே 80 லக்ஷம் ரூபாயை சென்னை வாசிகள் செலவிட வேண்டியிருந்தது. ஓரிடத்தில் இந்த விலையும் மற்றோரிடத்தில் இதைப்போல் இரு மடங்கு விலையும் மற்றோர் இடத்தில் இதைப்போல் ஒரு மடங்கு விலையும் இருக்கும் நிலையைக் கற்பனை செய்துபாருங்கள்.

புள்ளி விவரங்களின்படி 12 கோடி பேர் ரேஷன் பிரதேசங்களில் வாழ்கின்றனர். அவர்களுக்கு $1\frac{1}{2}$ கோடி டன் உணவுப் பொருள்கள் தேவை. மற்றவர்கள் உங்கள் கட்டுப்பாடுகளின்படிக் கூட ரேஷன் முறையின்கீழ் இல்லை. 13 கோடிபேர் ரேஷன் முறையின்கீழ் இருந்தால் அவர்களுக்கு நியாயமான விலையில் அரிசிகொடுக்க வேண்டியிருக்கிறது. விலை நியாயமானதாக இருக்கவேண்டுமென்றால் கட்டுப்பாடுகளை நீக்கவேண்டும். பிறகு ஸ்ரீ. கித்வாய் கூறியதுபோல் பகிரங்க மார்க்கெட் விலை நிலவும். இந்த உணவுப் பொருள்களில் பெருத்த அளவு வியாபாரம் செய்பவர்கள் விலையைப் புத்தகத்தில் எழுதுவார்கள். பிறகு அதன்மீது வருமானவரி விதிக்கப்படும். இப்பொழுது கள்ளமார்க்கெட்டில் விலை எதுவும் அதிகமாக இருக்கிறது. அந்தப் பணம் முழுமையையும் வர்த்தகர்கள் பையில் போட்டுக்கொண்டு விடுகிறார்கள், அவற்றைக் கணக்குப் புத்தகத்தில் காட்டுவதே இல்லை. ஆகையால் நம் நண்பர் ஸ்ரீ. தியாகி ஏராளமான பணத்தை இழுத்து வருகிறார். பகிரங்க மார்க்கெட் வியாபாரமாக இருந்தால் உணவுப் பொருள்களின் விலை

கள் கணக்குப் புத்தகங்களில் எழுதப்படும். இவற்றின் மீது வரி விதிக்கலாம். உணவுப்பொருள் விற்பவர்களைப் பதிவு செய்கிறீர்கள். பதிவுசெய்யும் அடிப்படையில் இந்த பேரங்களை சர்க்கார் கண்காணித்து உபரிப் பணத்தை எடுத்து, அவர்கள் இஷ்டப்பட்டால் மானயங்களைக் கொடுக்கவும், 12 கோடி மக்களுக்கு உணவு அளிக்கவும் உபயோகிக்கலாம். அறிவுள்ள சர்க்கார் இப்படித்தான் செய்யும். ஆனால் நீங்கள் ஆட்களைக் கையையும் காலையும் கட்டிவிட்டு ஓடச்சொல்கிறீர்கள்.

5 வருஷ திட்டத்தில் யதார்த்த அம்சம் இல்லை

ஐந்து வருஷ திட்டம்பற்றி நடந்த விவாதத்தில் ஸ்ரீ. எச். டி. ராஜா பேசுகையில் சொன்னதாவது:

திட்டக் கமிஷனின் அறிக்கை ஆடம்பரமாகச் சமர்ப்பிக்கப்பட்டது. இதை நாம் ஆழ்ந்து ஆராய்வது அவசியமே. இதன் சுருக்கம் ஒன்று நமக்கு வழங்கப்பட்டது. அது முழுமையையும் நான் படித்தேன்.

அடிப்படையில் பிரதம மந்திரியின் கருத்தை நான் ஒப்புக்கொள்கிறேன். திட்டமான பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் உண்டு. ஆனால் ஒரு திட்டத்தை நிறைவேற்றுவது எப்படி? இதற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று கம்யூனிஸ்ட் சர்வாதிகார வழி. முதலாளிகளிடம் திட்டம்போன்ற ஏதோ ஒன்று இருப்பதாகவும், ஆனல் இந்த திட்டம் வெறும் ஊகத்தை அடிப்படையாகக் கொண்டதென்றும், இதைக்கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை உருவாக்க முடியாதென்றும் கம்யூனிஸ்டுகள் கூறுகின்றனர். நம் திட்டங்கள் வெறும் ஊகமல்ல. நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் எதிர்காலப் போக்கை நிர்ணயிக்கும் கட்டளைகள். எல்லாவித நிர்வாகத்திற்கும் இத்தகைய கட்டளைகள் அவசியம். இதில் கம்யூனிஸ்டு சர்வாதிகாரக் கொள்கை அடங்கியிருப்பதைக் காண்பீர்கள்.

இரண்டாவது வழி ஜனநாயக சோஷலிஸ்டு கட்சியின் மார்க்கம். ஜனநாயக சமூகத்தில் திட்டம் வெற்றி பெற ஒரே ஒரு அடிப்படைதான் உண்டு. அதாவது, சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவும் தன் தன் ஸ்தானத்தை உணர்ந்து, கிடைக்கும் பொறுப்புக்களையும் சாதனைகளையும் ஏற்பதாகும். நம் ஜனநாயகத்தில் பெரும் அபிப்ராய பேதங்கள் வெளியிடப்படுகின்றன. ஒன்றுக்

கொன்று மாறுபட்ட பலதரப்பட்ட கோஷ்டிகள் இருக்கின்றன. இதுபோன்ற ஜனநாயக நாட்டில் ஒரே பொருளாதாரக் கொள்கையோ ஒரே விதமான விலை அல்லது சம்பள விகித அமைப்போ சாத்தியமில்லை. பொருளாதார அமைப்பு சம்பந்தமான பெரும் குழப்பத்துடன் திட்டம் இணைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு உற்பத்தியாளர்கள்மீதும் பொருள் வாங்குவோர்மீதும் தனிப்பட்ட முறையில் கட்டுப்பாடுகள் விதிக்கவேண்டியிருக்கிறது.

திட்டமான பொருளாதாரத்தின் இந்த இரு அம்சங்களைக் கவனித்தோம். இனி நம் நாட்டின் தேவை என்ன என்பதைக் கவனிப்போம். நம் வாழ்க்கையின் தற்போதைய நிலைமையில், டில்லி அதிகாரவர்க்கம் அமல் நடத்தும் திட்டமான பொருளாதாரம் திட்டமான துன்பமேயாகும். புள்ளி விவரங்களெல்லாம் காலத்திற்கு ஒவ்வாதவையாகவும் உபயோகமற்றவையாகவும் இருக்கின்றனவென்பது தஸ்தாவேஜுகளிலிருந்து தெரிகிறது. சராசரி விதி என்பது துன்பவிதியாகவே இருக்கிறது. ஒருவன் உயிர்வாழ 2300 "காலரி" சக்தி உள்ள உணவு தேவை என்கிறீர்கள். மற்றொருவன் உயிர் வாழவும் அதே அளவு தேவை என்கிறீர்கள். ஆனால் இவர்களில் ஒருவன் உயிரோடு இருக்கிறான்; மற்றவன் இறந்து வருகிறான். நான் பருமனாக இருந்தபோதிலும் எனக்கு 2 அவுன்ஸ் அரிசிபோதும். உடலால் உழைக்கும் தொழிலாளர்களுக்கு 1 ராத்தல் அரிசி தேவை. திட்டமான பொருளாதாரத்தில் எந்த அடிப்படையில் சராசரியைக் கணக்கிடுவீர்கள்? ஆற்றின் ஆழத்தைப் பல்வேறு இடங்களிலும் அளந்து சராசரி ஆழத்தைக் கணக்கிட்டு ஆற்றில் இறங்கிவிடுகிறீர்களென்று வைத்துக் கொள்வோம். பிறகு இந்த சபைக்குத் தலைமை வகிக்கத் திரும்பி வரவே முடியாது. நம் பொருளாதாரத் திட்டத்தின் தேவை இப்படித்தான் கணக்கிடப்படுவதாகத் தெரிகிறது. இந்த நாட்டில் மூலப்பொருள் வசதியும் செயற்கை வசதிகளும் நிரம்ப இருக்கின்றன. இயற்கை வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இவ் விஷயத்தில் ஜனநாயக நாட்டில் நிர்பந்தத்தை உபயோகித்தால் தோல்வியடை

வீர்கள். மக்களின் ஆதரவு உங்களுக்கு இருக்கவேண்டும். இதைப் பெறவேண்டுமென்றால், அவர்களுக்கு யோசனை மாத்திரம்கூறி, உங்கள் வசதிக்கேற்ப திட்டத்தை அபிவிருத்தி செய்யுங்கள். அப்பொழுது உங்கள் திட்டம் வெற்றிபெறும். இந்த அடிப்படை இங்கு உண்மையில் வரவேற்கப்படுமா, என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இந்த திட்டக் கமிஷன் "ஆமாஞ்சாமி" கும்பல் தேர்தலில் தோல்வியடைந்த ஒரு ஸ்திரீ திட்டக் கமிஷனில் நியமிக்கப்பட்டிருப்பது எனக்குத் தெரியும். இப்படிப் பட்டவர்கள் ஒரு திட்டத்தை வகுத்து அதை விழுங்குமாறு நம்மிடம் கூறினால், அதை விழுங்குவதோ ஜீரணித்துக் கொள்வதோ சாத்யமில்லை. தேசிய திட்டம் வகுப்பதால் நீங்கள் வெற்றி பெற விரும்பினால், முதலில் மக்களின் பல்வேறு பிரிவினருக்கும் பிரதி நிதித்துவம் வகிப்பவர்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். இரு சபை அங்கத்தினர்களும் அடங்கிய கூட்டுக் கமிட்டி அமைத்து, அதன் கருத்துக்களைக் கேட்டு விவாதித்து ஒரு திட்டம் தயாரித்தால் அதைத் தோழர் சுந்தரய்யா கூட ஆக்ஷேபமின்றி ஏற்றுக்கொள்வார். இப்போதைய பிரச்னை என்னவென்றால் திட்டம் உண்மையாக தேசிய திட்டமாக இருக்க வேண்டுமேயன்றிக் காங்கிரஸ் திட்டமாக இருக்கக் கூடாது என்பதுதான். இங்கு உள்ள பல காங்கிரஸ் காரர்களுக்குக்கூட அபிப்பிராய பேதம் இருக்கிறது. கொறடா பிறப்பிக்கப்படவில்லை யென்றால் இந்த திட்டக் கமிஷனின் அறிக்கை நிராகரிக்கப்படுமென்பது நிச்சயம். அவர்கள் இந்த சபைக்குள் வரும்பொழுது மூளையை வெளியே வைத்துவிட்டு, ஹிருதயத்தை சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டுதான் வருகின்றனர்; தங்கள் தலைவர் இஷ்டப்படி கை தூக்குகின்றனர். ஆகையால் இதன் பல்வேறு அம்சங்களையும் கவனித்து உண்மையான தேசிய திட்டம் தயாரிக்குமாறு சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். எல்லாக் கருத்துக்களையும் வரவேற்று விவாதித்தால் நல்ல அம்சங்களை எடுத்துக் கொண்டு மற்றவற்றை ஒதுக்கலாம். நம் வேற்றுமைகளும் மறை

யும். இவ்விதம் செய்தால் கட்டுப்பாடுகளும் உத்திரவு களும் இல்லாமல் உண்மையான தலைமைப் பொறுப்புடன் நீங்கள் நாட்டின் முன் செல்ல முடியும். இதை மக்கள் மதிப்பார்கள். அது நான் கண்டித்த அதிகார வர்க்க தலைமையாக இராது. மக்களிடமிருந்து பிறந்து வளரும் உண்மைத் தலைமையாக இருக்கும்.

இந்தத் திட்டம் மக்கள் வாழ்க்கை நிலையை உயர்த்து வதற்காக ஏற்பட்டது. இதற்கு மக்கள் ஒத்துழைப்பை விரும்புகிறீர்கள். திட்டம் வெற்றிபெற மக்கள் ஒத்துழைக் கும் பொருட்டு அவர்களிடையே உற்சாகம் ஏற்படுத்தக் கூடிய தலைமை தேவை. தென் இந்தியாவில் மக்களின் சாதனைகளைப் பாருங்கள். அங்கு கட்டப்பட்டுள்ள பிரம் மாண்டமான கோபுரங்கள் மனித முயற்சியின் பலன்களே. பணத்தைப் பற்றி நமக்குக் கவலை இல்லை; கோடிக்கணக் கான மக்கள் இருக்கின்றனர். ஆஸ்தி என்பது என்ன? உழைப்புச்சக்தியின் ஆதரவு பெற்ற பணச் சக்திதான். 36 கோடி மக்கள்தான் நம் ஆஸ்தி. உங்கள் திட்டம் வெற்றி பெற இவர்கள் சரியானபடி பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும்.

இப்பொழுது சமூகத்தின் பொருளாதார அமைப்பு பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த பல வருஷங் களாக இந்த நாடு தீராத வறுமையினால் பீடிக்கப்பட்டு இருந்து வருகிறது. பல ஆண்டுகள் இது அந்நிய ஆதிக் கத்தின் கீழ் இருந்தது. இந்த நிலையை ஒரே நாளில் மாற்றி பாலும் தேனும் பெருக்கெடுத்து ஓடும் படிச் செய்ய வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டால் அது சாத்தியமில்லை. காலனி பொருளாதாரத்தின் கீழ் நம் திட்டம் சர்வ தேச நிகழ்ச்சிகளுடன் பிணைக்கப்பட்டிருக்கி றது. நம் வர்த்தகத்தில் துண்டு விழுந்தால் நம் திட்டம் என்னவாகும்? துண்டு விழுந்தால், பிரிட்டனிடம் உள்ள ஸ்டர்லிங் நிதியிலிருந்து ரூ 290 கோடி ரூபாயை ஈடு செய்ய வசதி செய்திருக்கின்றனர். வர்த்தக மிச்சம் நமக்கு பாதக மாக இருந்தால் இந்த 290 கோடி ரூபாய் நமக்குக் கிடைக் குமா என்று நிதி மந்திரியைக் கேட்க விரும்புகிறேன். உங்

களுக்கு அது கிடைக்காது. இந்தத் தொகை கிடைக்குமென்று எதிர்பார்ப்பது ஒரு பிரச்னைதான்.

இந்த திட்டத்தை அமுல் நடத்த சர்க்கார் நம்பியிருக்கும் இதர பொருளாதார அம்சங்களைக் கவனிப்போம். திட்டத்தை அமுல் நடத்த மொத்தம் 2069 கோடி ரூபாய் தேவைப்படுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆனல் 738 கோடி ரூபாய்க்குத் தான் வசதி இருக்கிறதென்று சர்க்காரின் புள்ளி விவரங்களே கூறுகின்றன. ராஜ்யங்கள் 532 கோடி ரூபாய் கண்டுபிடிக்கவேண்டுமென்று சர்க்கார் எதிர்பார்க்கின்றனர். சென்னை ராஜ்யத்தைப்பொருத்தவரையில் அது பண மில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறதென்பது எனக்குத் தெரியும். சென்னை சர்க்கார் பட்ஜெட்டில் ஏற்கனவே ரூ. 15 கோடி துண்டு விழுகிறது. அங்கு மழைக்காகப் பிரார்த்தனை செய்யுமாறு மக்களை முதன் மந்திரி கேட்டுக்கொண்டார். கடவுள் வஞ்சம் தீர்த்துக்கொள்வது போல் பதிலளித்தார். எங்களுக்கு மழை பெய்தது. அதோடு புயலும் அடித்தது. இதில் 10 கோடி ரூபாயும், 500 பேருடைய உயிரும் நஷ்டமாயின. சென்னை ராஜ்யத்தார் பொருளாதார நிலைமை இதுதான். மிகவும் மோசமான நிலைமையை சென்னை ராஜ்யம் எதிர் நோக்கியிருக்கிறது. ஆகையால், மக்கள் பணம் கொடுப்பது அசாத்தியம். இதேபோல் மற்றும் பல ராஜ்யங்களும் பணம் வேண்டுமென்று கோஷிக்கின்றன. ஆகையால் இவ்வளவு பணம் சேகரிப்பதென்பது சாத்தியமில்லை. பின் என்னசெய்யப்போகிறோம்? வெளிநாடுகளில் கடன் வாங்கப்போகிறோம். வெளி நாடுகளில் கடன் வாங்குவதில் தவறு ஒன்றுமில்லை. நான் ஏற்கனவே பன்முறை இங்கு சொல்லியிருப்பதுபோல் வெளி நாடுகளிலிருந்து வாங்கும் இந்தக்கடன்கள் நம் கவுரவத்தை பாதிப்பவையாக இருக்கக்கூடாது. பணம் வந்தாலும் அதில் பாங்கள் இருக்கும்; கண்யமாகக் கொடுக்கப்படாது. இதனல் தான் வேறுவழிகளை ஆராயுமாறு சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். இரு பெரிய நாடுகளுக்கு நாம் மூலப் பொருள்கள் சப்ளை செய்கிறோம். காலனி பொருளா

தாரத்தில் நம் நாட்டு இயற்கை வசதிகளை "ஜான்புல்" (பிரிட்டன்) சுரண்டி வந்தது. இப்பொழுது "ஸாம் மாமா" (அமெரிக்கா) வந்திருக்கிறது. நம் மூலப் பொருள்களுக்கு இந்த நாடுகளிடமிருந்து கணிசமான விலை கேட்பதற்கென்ன? இதைச் செய்தால், அந்த நாடுகளிலிருந்து நாம் செய்யும் இறக்குமதிக்கும் மூலப்பொருள்களுக்காகக் கிடைக்கும் பணத்திற்கும் சரியாக இருக்கும். பிறகு நாம் கடன் வாங்கவேண்டிய அவசியம் இராது.

நாம் ஏற்றுமதி செய்யும் மூலப் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்காமல் நாம் கஷ்டப்படுகிறோம். இந்தக் காலனி பொருளாதாரம் இன்னும் நம்மைக் கொன்று வருகிறது. அரசியல் சுதந்திரத்தை நீங்கள் அடைந்துவிட்டீர்கள். ஆனால் பொருளாதார ரீதியில் அடிமைகளாகவே இருக்கிறீர்கள். இந்தப் பொருளாதார அடிமைத்தனம் உங்களை 5 வருஷ திட்டத்தையோ 10 வருஷ திட்டத்தையோ வேறு எந்த திட்டத்தையுமோ அமல் நடத்த அனுமதியாது. ஆகையால் நம் பொருள்களை அந்நியருக்கு அதிக விலைக்கு விற்கும் சக்தி நமக்கு இருக்கவேண்டும். இது இருந்தால்தான் நம் பட்ஜெட்டைச் சரிக்கட்ட நம்மால் முடியும். அப்பொழுது நந்தாவுக்கு, தம் திட்டத்திற்குத் தேவையான அளவு பணம் கிடைக்கும். இது நம் நண்பர்கள் மறக்கக் கூடாத விஷயம்.

குடிசைத் தொழில்களுக்காக நாம் 8 கோடி ரூபாய் செலவிட விரும்புகிறோம். இந்தக் கானல்நீரை நாம் விட்டுவிடவேண்டும். அரசியல் வேலையில் மக்கள் உணர்ச்சியைத் தூங்குவதற்குச் சின்னங்களாக உபயோகிக்கப்பட்ட சர்க்காவும் கதரும் இந்தக் காலத்திற்கு ஒவ்வாது. தென் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான பேல் ஜவுளி தேங்கிக் கிடக்கிறது. சர்க்கார் மான்யம் அளித்தும் அதை விற்பனை செய்ய முடியவில்லை. இறுதியில் கதரின் விலையை 25 சதவிகிதம் குறைக்க வேண்டியதாயிற்று. விலையைக் குறைத்த பிறகும் இதற்கு கிராக்கி இல்லை.

மக்களின் சக்திகளை தேசிய புனருத்தாரணத்திற்கு வேண்டிய வகையில் திரட்டவேண்டுமேயன்றி, பழைய

பத்தாம் பசலி விஷயங்களைப் புதுப்பிப்பதில் செலவிட கூடாது. நம் நாட்டில் வாழும் 36 கோடி மக்களில் நகரங்களில் வசிக்கும் 10 கோடி பேரை விட்டுவிட்டால் மற்ற 26 கோடி பேர்தான் உண்மையான இந்தியா என்று கூறப்படும் பிரதேசத்தில் வாழ்கின்றனர். இவர்கள் 3 மாத காலம் பயிர்த்தொழில் செய்து, அதில் கிடைக்கும் பொருளைக்கொண்டு வருஷம் முழுவதும் ஜீவனம் நடத்துகின்றனர். இந்த 9 மாதமும் இவர்கள் சோம்பலாகவே இருக்கின்றனர். நாட்டின் ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரைவாழும் இந்த கிராமவாசிகளின் சக்தியை நீங்கள் எப்படித்திரட்டி உபயோகிக்க முடியும்? இவர்களுக்கு வேலைகொடுத்தால் உங்களுடைய வருமானம் 3 வருஷத்திற்குள் இரட்டிக்கும். இதற்கு 27 வருஷம் தேவையில்லை. இதை நீங்கள் மனத்தில் கொண்டு நம் விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தல வேண்டும். முந்திய விவசாய ஆராய்ச்சிக் கவுன்ஸிலின் ஏட்டுச் சுரைக்காய் திட்டங்களைக்கண்டு ஏமாறுதீர்கள்.

மாறுபட்ட நிலைமை நம்மை மாற்றுகிறதென்பதைக் கண்டோம். மக்கள் தேவைகளை சர்க்காரால் பூர்த்தி செய்ய முடியாதபோது, பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ளுமாறு சர்க்கார் கேட்கின்றனர். இதைவிட, உடலில் உள்ள புள்ளிகளை மாற்றிக் கொள்ளுமாறு சிறுத்தைப் புலியைக் கேட்கலாம். வெவ்வேறு வித சுவையும் பழக்கமும் உள்ள மக்கள் தங்கள் பழககங்களை மாற்றிக் கொண்டு, வாயு பக்ஷணம் செய்யும் குடகு தனலக்ஷ்மியைப் போல் எப்படி வாழமுடியும்? இந்தியாவில் உள்ள அனைவரும் வாயுபக்ஷணம் செய்ய வேண்டுமென்பது காங்கிரஸ் கட்சியின் விருப்பமா? முடியவே முடியாது. நீங்கள் என்னை என்ன செய்தாலும் என்னுடைய சாப்பாட்டு பழக்கத்தை நான் மாற்றிக் கொள்ளமாட்டேன். அப்பொழுது, நான் போராடியும், பேசியும், மனித வர்க்கத்திற்கு இன்னும் நல்ல காரியங்களைச் செய்வேன். மனிதனின் ஜீவாதாரத் தேவை உணவு. "அந்த வழக்கத்தை மாற்றிக்கொள்ள வேண்டும்; வாரத்தில் 1 நாள் பட்டினி இருக்கவேண்டும்; மாதத்தில் 4 நாள் ஏகாதசி உபவாசமிருக்கவேண்டும்" என்றெல்லாம் நீங்கள் சொல்வதென்

ருல் அதற்காக இந்த சர்க்கார் ஏற்படுத்தப் படவில்லை. ஆகையால் பொருளாதார நிபுணர்களின் கோஷங்களில் மயங்கிவிடாமல் பிரத்யக்ஷ முறையில் சிந்திக்குமாறு சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். சோஷலிஸ பொருளாதார நிபுணர்களும், கம்யூனிஸ்ட் பொருளாதார நிபுணர்களும், ஒரு பொருளாதாரமுமே தெரியாத பொருளாதார நிபுணர்களும் இருக்கின்றனர். இத்தகைய பொருளாதாரப் பரிபாஷைகள் நம்மீது அள்ளி வீசப்படுகின்றன. நாமும் அவற்றையெல்லாம் அனுஷ்டிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறோம். ஒரு திட்டத்தில் அதன் பயன்களுக்கும், தனி நபரின் அடிப்படை உரிமைகளுக்கு மிடையில் போராட்டம் இருந்துகொண்டே இருக்கும். ஸ்தலக் கமிட்டி நமக்கு உத்திரவிடும். திட்டம் வகுத்து சர்வாதிகாரிகளின் சர்வ வல்லமையில் நாம் கண்மூடித்தனமாக நம்பிக்கை வைக்கவேண்டும். நம் நாட்டை இந்த நிலைமைக்குத்தான் கொண்டுவந்து விட்டார்கள். திட்டம் வகுப்பவர்களின் கட்டளையை நாம் விழுங்குவதென்பது சாத்தியமில்லை. இது என்மீது திணிக்கப் படுவதை நான் விரும்பவில்லை. நான் போராடத் தயார். கஷ்டப் படத்தயார் அதற்கு வேண்டிய உற்சாகத்தை—வசதியைக் கொடுங்கள். திட்டம் வகுப்பவர்கள் செய்யவேண்டியது அதுதான்.

835 கோடி ரூபாய் உங்களிடம் இருக்கிறது. அதை நல்ல வழியில் உபயோகிக்கலாம். வாழ்க்கையை இயந்திர மயமாக்க வேண்டியதில்லை. மக்களுக்கு ஊக்கமளியுங்கள். அவர்கள் தேவையைப் பூர்த்திசெய்வார்கள். மற்றொரு முக்கியமான விஷயத்தை இந்த சபையின் கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். விந்திய மலைக்குத் தெற்கே இந்தியா இருப்பதாகவே இந்திய சர்க்கார் நினைப்பதாகத் தெரியவில்லை.

தெற்கே 4 ராஜ்யங்களில் 9 கோடி மக்கள் வாழ்கின்றனர். மொத்த ஜனத்தொகையில் இவர்களுடைய தொகை கால்பாகமாகும். திட்டத்தை அமல் நடத்துவதற்காகச் செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கும் 2096 கோடி ரூபாயில் தென் இந்தியாவுக்காக மஹத்தான தொகையான 245

கோடி ரூபாய் ஒதுக்கிவிட்டனர்! எவ்வளவு அற்பத் தொகை!

அரசியல் திட்டத்தை மாற்றுவதுபற்றிப் பிரதம மந்திரி குறிப்பிட்டார். காங்கிரஸ் கட்சி 3 வருஷ காலம் ஆலோசித்துத் தயாரித்த, வயதுவந்த அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கும், எல்லா மக்களுக்கும் உரிமை வழங்கும் இந்த அரசியல் திட்டம் மாற்றப்படப் போகிறது. எதற்காக? திட்டம் வகுப்பவர்களுக்குப் பணி செய்ய, நம் வாழ்க்கை முறை எப்படி இருக்கவேண்டுமென்பதற்கு உத்தரவிடவிருக்கும் எதேச்சாதிகாரிகளுக்கு உதவி செய்வதற்காக. அரசியல் திட்டத்தை மாற்றுவதற்கு முன்னால் தீர்க்கமாக ஆலோசிக்கவேண்டும். இப்பிரச்னையில் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. அதிகார வர்க்கத்திற்கு மக்கள் உதவியாக இருக்கும்படி செய்யும் திட்ட மனப்பான்மை ஏற்கனவே காணப்படுகிறது. மக்கள், குறிப்பாக விவசாயிகள் பொருள்களை உபயோகிப்பதைத் தடுத்து, அவர்கள் உற்பத்திசெய்யும் பொருள்களை மூலதன முதலீட்டுக்காக எடுத்துச் செல்வதே போலீஸ் ராஜ்யத்தின் பொருளாதாரக் கொள்கை. இந்த மனப்பான்மையினால் அதிகாரம் ஒரே இடத்தில் சேரத் தொடங்குகிறது. அதிகாரம் குவியாமல் பரவலாகப் பிரித்துவிட்டால் குவியும் விகிதம் குறையும். பொறுப்பு எவ்வளவுக்கெவ்வளவு மக்களுக்குச் சமீபத்தில் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அது மக்கள் துன்பத்தை வளர்க்க அனுசரணையாக நடக்கும். மத்திய அதிகாரத்திற்கு உதவிசெய்ய பெரிய அதிகாரவர்க்கப் படையை ஏற்படுத்துவதே குவியல் கொள்கையின் இயற்கையான முடிவு. திட்டத்தின் தேவைகளுக்கேற்றபடி எல்லாம் கொலை செய்யப்படுகின்றன.

ஆகையால் நாம் ஒரு விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். ஜனநாயக ஆட்சியில் மக்கள் அனைவரின் உற்சாகமான ஒத்துழைப்பும் இல்லையென்றால் எந்த திட்டமும் தோல்வியே அடையும். சர்வாதிகார முறையிலோ ஜனநாயக முறையிலோதான் நாம் இந்தப் பிரச்னையை அணுகமுடியும். சர்வாதிகார அடிப்படையில் நாம் இந்தப்

பிரச்னையை அணுகுவதென்ருல் ஜனநாயகத்திற்கும் நமக்கும் சம்பந்தமில்லை. ஜனநாயக முறையில் அணுகுவதென்ருல் மக்களுடன் நாம் எவ்வளவோ செய்யவேண்டியிருக்கிறது. நம் வசதிகள் திறமை முதலியவற்றை அடிப்படையாகக்கொண்டே ஒரு திட்டத்தை அபிவிருத்தி செய்யவேண்டும். வேறு யாரோ நம் உதவிக்கு வருவார்கள் என்று நம்பி எதுவும் செய்யக்கூடாது. நம் சொந்த பலத்தை உள்நாட்டிலேயே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். எல்லா வசதிகளும் நம்மிடமே இருந்தால்தான் திட்டத்தை அபிவிருத்தி செய்யமுடியும்.

போஜராஜனுக்குக் கவி காளிதாஸன் சொன்னது போல்:இருந்த சர்க்காருக்கும் 3 வித கஷ்டங்கள் இருக்கின்றன.

"ஆஸனே விப்ரபீடஸ்து
சிசு பீடஸ்து போஜனே,
சயனே தாரபீடஸ்து
த்ரிபீடஸ்து நரேந்த்ரதே"

என்ருன் காளிதாஸன். போஸ்டன் பிராம்மணர்களும் பண்டித மவுண்ட் பாட்டன்களும் நம் சர்க்காரின் முதல் தலைவலிகள். 'உணவுப் பிரச்னை என்று கூறப்படுவது இரண்டாவது தலைவலி. விவாக ரத்து செய்துகொள்ள விரும்பும் நம் நவநாகரிக நாரீமணிகள் சர்க்காரின் 3-வது தலைவலி. இந்த மூன்று பிரச்னைகள் சர்க்காரை எதிர்நோக்கியிருக்கின்றன. இவற்றை எப்படித் தீர்ப்பதென்று சர்க்காருக்குப் புரியவில்லை. வாழ்க்கையைப் பிரத்யக்ஷ முறையில் அணுகுங்கள். உங்களுக்கு க்ஷேமம் உண்டாகும்; உங்கள் திட்டமும் வெற்றிபெறும்.